

ANANDA VIKATAN Volume: 94 Issue: 38
எல்லோரும் இன்புற்றிருக்க
18.9.19
www.vikatan.com
₹30 (தமிழ்நாடு, புதுச்சேரி) ₹35 (மற்ற மாநிலங்களில்)
ஆனந்த விகடன்
தமிழர்களின் #1 வார இதழ்
TabletBarn.com
ஓர் இரவு...
ஒரு காடு...
ஒரு கைதி!
01



நான்கு தலைமுறை பட்டுப் பாரம்பரியம்
போத்தீஸின் நவரத்
ஒன்பது நவராத்திரி தினங்களைக் கொண்டாட, ஒ
தனித்துவமான நவரத்னா பட்டுப் பாவாடைகள் பண்டிகைக் காலத்திற்கான போத்தீஸின் பிரத்
ரெடிமேட் பட்டுப் பா
நீலக்கல்
செல்வாக்கு | செழிப்பு
புஷ்பராகம்
மன அமைதி
அபிவிருத்தி
SRESHTA
முத்து
அமைதி | செல்வம்
மாணிக்கம்
மகிழ்ச்சி | அதிர்ஷ்டம்
வைரம்
யோகம் | வசீ
சென்னை (போத்தீஸ் | பொட்டிக் | ஹைப்பர் | போத்தீஸ்-ன் உமன்ஸ் வோர்ல்ட்) • ஸ்ரீவில்லிபுத்தூர் • திருநெல்வேலி • மதுரை • கோயமுத்தூர் (ஒப்பணக்



ா பட்டுப் பாவாடைகள்
நவரத்தின கற்களின் நிறங்களில் பட்டுப் பாவாடைகள்.
டைப்பாகும். உங்கள் வீட்டுச் செல்லங்களுக்கு நவரத்னாவை அணிவித்து தேவதையாக்குங்கள்.
டகள் ₹500 முதல்
நவரத்தின கலெக்ஷன்
கோமேதகம்
பேரழகு | வளம்
வைடூரியம்
உயர்வு | பாக்கியம்
பவளம்
தெய்வகடாக்ஷம்
தைரியம்
மரகதம்
விருத்தி | வலிமை
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
Online Shopping at www.pothys.com
| கிராஸ்கட் ரோடு) • நாகர்கோவில் • திருச்சி • சேலம் • புதுச்சேரி • திருவனந்தபுரம் • பெங்களூரு
TabletBarn.com


போத்தீஸின்
நவரத்னா பட்டுப் பாவாடைகள்
ஒன்பது நவராத்திரி தினங்களைக் கொண்டாட,
ஒன்பது நவரத்தின கற்களின் நிறங்களில் பட்டுப் பாவாடைகள்.
தனித்துவமான நவரத்னா பட்டுப் பாவாடைகள் பண்டிகைக் காலத்திற்கான
போத்தீஸின் பிரத்தியேக படைப்பாகும். உங்கள் வீட்டுச்
செல்லங்களுக்கு நவரத்னாவை அணிவித்து தேவதையாக்குங்கள்.
ரெடிமேட் பட்டுப் பாவாடைகள் ₹500 முதல்
புஷ்பராகம்
மன அமைதி | அபிவிருத்தி
நீலக்கல்
செல்வாக்கு | செழிப்பு
பவளம்
தெய்வகடாக்ஷம்
தைரியம்
வைடூரியம்
உயர்வு | பாக்கியம்
SRESHTA
நவரத்தின கலெக்ஷன்
மாணிக்கம்
மகிழ்ச்சி | அதிர்ஷ்டம்
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
Online Shopping at www.pothys.com
TabletBarn.com




CHENNAI | COIMBATORE | MADURAI | PONDICHERRY | VELLORE | SALEM | TRICHY

**Area Sales Manager:** 07807844001 | **Distributors: Chennai: Mohan Marketing Private Limited:** 09003040417 | **Coimbatore: Mohan Marketing Private Limited:** 09003040414 | **Madurai: Mohan Marketing Private Limited:** 08778785764 | **Pondicherry, Vellore, Villupuram, Kancheepuram: Sree Lakshmi Marketing:** 09840711720, 09840212296 | **Salem: Sujadamman:** 09842811797 | **Trichy: Nila Marketing:** 09047007090

For Steel Products - **Chennai & Madurai: Ababeel International:** 09884192338 | **Coimbatore: Sri Lakshmi Ventures:** 09952323236 (Available at all Leading Stores)

**Full range available at Trichy: Mangal & Mangal:** 04312707975 | **Madurai: Anantha Metal Company:** 09443315675

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே."

# ஆனந்த விகடன்

மாலை 94 மணி 38

ஆனந்த விகடன் பப்ளிஷர்ஸ் (பி) லிமிடெட் சார்பாக வெளியிடுபவர், ஆசிரியர்: **பா.சீனிவாசன்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

Press and Registration of Books Act-ன்படி
செய்திகளின் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

முதன்மைப் பொறுப்பாசிரியர்: கி.கார்த்திகேயன்
உதவி ஆசிரியர்: கே.பாசுமணி
நிருபர்: நா.சிபிச்சக்கரவர்த்தி
முதன்மைப் புகைப்படக்காரர்கள்: கே.ராஜசேகரன், சு.குமரேசன்
தலைமைப் புகைப்படக்காரர்கள்: கே.கார்த்திகேயன், தி.விஜய்
புகைப்படக்காரர்கள்:
சொ.பாலசுப்ரமணியன், எஸ்.தேவராஜன்,
ச.வெங்கடேசன், பா.காளிமுத்து, ஆ.முத்துக்குமார், ரா.ராம்குமார்

முதன்மை வடிவமைப்பு: கே.பாண்டியன்
கார்ட்டூனிஸ்ட்: ஹாசிப்கான்
தலைமை வடிவமைப்பு: எம்.முத்துக்குமார்
வடிவமைப்பு: டி.பெருமாள், வி.சுபாஷ், பி.ராஜன், உ.ஆதிமூலம், உ.இந்திரகுமார்

**ஆசிரியர் இலாகா முகவரி:**
**ஆனந்த விகடன்,** 757, **அண்ணா சாலை,**
**சென்னை**-600 002.

தொலைபேசி: 044-2854 5500, 5588, 3300

av@vikatan.com editor@vikatan.com

**விளம்பரப் பிரிவு:**
ஆனந்த விகடன் டிஜிட்டல் பிரைவேட் லிமிடெட்,
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
போன்: 044-28524074/84
email: advt@vikatan.com

**பத்திரிகை விற்பனைப் பிரிவு:** சுந்தர் தியாகராஜன், துறைத் தலைவர்
**சந்தா தொடர்பான விவரங்களை அறிய:** 044-6680 2901
**சந்தா தொடர்பான குறைகளைப் பதிவுசெய்ய:**044-6607 6407
**முகவரி: ஆனந்தவிகடன்,**757,அண்ணா சாலை,
சென்னை-600 002.

**கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.**
**இதழில் வெளியாகும் விளம்பரங்களின்**
**உண்மைத்தன்மைக்கு விகடன் நிர்வாகம் பொறுப்பல்ல.**
பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகள் அவர்களின் சொந்தக் கருத்துகளே!

## ஹலோ வாசகர்களே...




ஆனந்த விகடனைப் படிக்கும்போது, உங்கள் மனதில் பல கருத்துகள், கேள்விகள், சந்தேகங்கள் அலையடிக்கின்றனவா? அது ஷொட்டோ, குட்டோ... பட்டென்று போனை எடுத்து, சட்டென்று உங்கள் எண்ணத்தைப் பதிவுசெய்யலாம். அதற்குத்தானே காத்திருக்கிறோம்...

**044-66802921**

என்ற எண்ணைத் தொடர்புகொண்டால், கணினிக் குரல் வழிகாட்டும். அதற்கேற்ப 3 நிமிடங்களுக்குள் உங்கள் கருத்தைப் பதிவுசெய்யுங்கள். எதிர்முனையில் உங்களுடன் உரையாட யாரும் இருக்க மாட்டார்கள். எனவே, அந்த 3 நிமிடங்கள் முழுக்க முழுக்க உங்களுக்கே! அவசியமென்றால், நாங்களே உங்களைத் தொடர்புகொண்டு மேலும் விவரங்களைப் பெற்றுக்கொள்வோம், ஓ.கே-வா..?

---

விகடன் குழுமம் தொடர்ந்து அளிக்கும் சுவாரஸ்யமான செய்தி மற்றும் சேவைகளை எஸ்.எம்.எஸ் மூலம் பெற உங்களுக்கு சம்மதம் எனில்,

**044-66802933**

என்ற எண்ணுக்கு டயல் செய்து, ஒரு மிஸ்டு கால் கொடுங்கள். ரிங் கேட்பதற்குள்ளேயே தொடர்பு உடனடியாகத் துண்டிக்கப்பட்டு, உங்கள் எண் எங்களிடம் பதிவாகிவிடும்.

---

இந்தப் பட்டியலில் இருந்து உங்கள் எண்ணை நீக்கிக்கொள்ள விரும்பினால், 044-66802944 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுத்தால் போதும்.

---

பயனுள்ள தகவல்களை உங்களுக்கு உடனுக்குடன் அளிப்பது எங்கள் விருப்பமே தவிர, வேறு எந்த ஆதாய நோக்கமும் இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

**அன்பும் நன்றியும்...**
**– ஆசிரியர்**

**உங்கள் எண்ணம்... விகடன் வண்ணம்!**

AnandaVikatan.com
facebook.com/AnandaVikatan
twitter.com/AnandaVikatan
youtube.com/vikatanwebtv

அட்டையில்: **கார்த்தி**
படம்: **'கைதி'**

TabletBam.com




TabletBarn.com

## இது சறுக்கல் அல்ல; சாதனைகளுக்கான படிக்கல்!

இந்திய விண்வெளி வரலாற்றில் மற்றுமொரு மைல்கல், மகத்தான சாதனை ‘சந்திரயான் - 2’. விக்ரம் என்கிற லேண்டரை நிலவில் தரையிறக்க முயன்று மாபெரும் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் நம் விஞ்ஞானிகள். சந்திரயான் வெற்றி சாதாரணமானதல்ல, அதற்குப்பின்னால் நம் விஞ்ஞானிகளின் அசுர உழைப்பும் அர்ப்பணிப்பும் அடங்கியிருக்கின்றன.

சீனா, சமீபத்தில் நிலவுக்கு ஒரு விண்கலத்தை அனுப்பியது. அதற்கு அந்த நாடு செலவு செய்த தொகை 5,759 கோடி. ஆனால், சந்திரயான்-2 விண்கலத்தை ஏவும் திட்டத்துக்கு இஸ்ரோ செலவிட்ட தொகை வெறும் ரூ.978 கோடிதான். சந்திரயான் திட்டத்தைச் செயல்படுத்த இஸ்ரோவுடன் இணைந்து செயல்பட முன்வந்த ரஷ்யா பாதியிலேயே விலகிக்கொண்டது. ஆனாலும் இஸ்ரோ பின்வாங்கவில்லை. முழுக்க முழுக்க தங்களின் திறமையாலும் ஆற்றலாலும் ஆர்வத்தாலும் நம் விஞ்ஞானிகள் சந்திரயானை உருவாக்கியதோடு, நிலவை நோக்கிய அதன் பயணத்துக்கான அத்தனை ஏற்பாடுகளையும் அவர்கள்தாம் செய்தார்கள். இந்தப் பயணத்துக்கான ஏற்பாட்டில் நாம் சாதித்ததே முதல் வெற்றி.

நம் முயற்சி முழுவெற்றியை எட்ட முடியவில்லை என்பது உண்மைதான். நிலவை நெருங்கும் 2.1 கிலோமீட்டர் தூரத்தில் விக்ரம் லேண்டர், நம் தொடர்பிலிருந்து துண்டித்துக்கொண்டது. இவ்வளவு பாடுபட்டும் முழுவெற்றியை ஈட்ட முடியவில்லையே என்று இஸ்ரோ தலைவர் சிவன் உடைந்துபோய்க் கலங்கியதும், பிரதமர் மோடி அவரது தோளைத் தடவி ஆறுதல் கூறியதுமான காட்சி அனைவரையும் நெகிழவைத்த காட்சி. இந்தச் சறுக்கல், நம் அடுத்தடுத்த சாதனைகளுக்கான படிக்கல்.

நிலாவில் தண்ணீர் மூலக்கூறுகள் இருக்கின்றன என்பதை சந்திரயான்-1 வாயிலாக முதன்முதலாகக் கண்டறிந்து உலகத்துக்குப் பிரகடனப்படுத்தியது நம் விஞ்ஞானிகள்தான். இதுவரை யாருமே முயலாத, நிலாவின் தென் துருவத்துக்கு விண்கலத்தை அனுப்பியதும் நம் விஞ்ஞானிகள்தான். நமது இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்துக்கு இது 50வது ஆண்டு. இதுவரை ஆர்யபட்டா தொடங்கி நூற்றுக்கும் மேற்பட்ட விண்கலங்களை ஏவியிருக்கிறோம். விக்ரம் லேண்டர் நம் தொடர்பிலிருந்து விலகிவிட்டாலும் அதன் இருப்பிடத்தை இரண்டே நாள்களில் கண்டுபிடித்திருக்கிறோம். சந்திரயான்-2 செலுத்தப்பட்டதன் நோக்கத்தை முழுமையாக அடைய இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

பரிசோதனைகள் மட்டுமே விஞ்ஞானத்தின் அடிப்படை. வெற்றி தோல்வியைக் கணக்கில்கொண்டால், விஞ்ஞான வளர்ச்சி இல்லை. எத்தனையோ மகத்தான கண்டுபிடிப்புகளுக்கும் மகத்தான அறிவியல் கோட்பாடுகளுக்கும் பின்னால் பல சறுக்கல்கள், தோல்விகள் இருக்கின்றனதான். எல்லாவற்றையும் தாண்டித்தான் சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன.

நம் விஞ்ஞானிகளின் மீது நம்பிக்கை இருக்கிறது. நிலா இப்போதும் தொட்டுவிடும் தூரம்தான்!

வி

TabletBarn.com




நூறு நாள்கள் தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது...

“ மா.பாண்டியராஜன்

லோகேஷ் கனகராஜ்... தமிழ் சினிமாவின் நம்பிக்கை இயக்குநர். மூன்றாவது படத்திலேயே விஜய்யை இயக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். ‘மாநகரம்’ மூலம் மிரட்டல் அறிமுகம் கொடுத்தவர், அடுத்து ‘கைதி’யோடு வருகிறார். மாலை வேளையில் மட்டும் மழை பெய்யும் சென்னையின் வித்தியாச வானிலையில் லோகேஷைச் சந்தித்தேன்!

“ ‘மாநகரம்’ படம் முடிச்சதும் சூர்யா சாரை வெச்சு அடுத்த படத்தைப் பண்ணலாம்னு எஸ்.ஆர்.பிரபு சாருக்கு கமிட் பண்ணினேன். ‘மாநகரம்’ படத்துக்கு முன்னாடியே நான் யோசித்த கதை அது. அந்த ஸ்க்ரிப்ட்டை ஃபைனல் பண்ண டைம் ஆச்சு. அதை பிரபு சார்கிட்ட சொன்னதும், அதுக்கு நடுவுல சின்னதா ஒரு படம் பண்ணலாம்னு பிளான் பண்ணி ஆரம்பிச்சதுதான் ‘கைதி.’ முதலில் இந்தப் படத்துக்கு மன்சூர் அலிகான் சாரைத்தான் ஹீரோவா நடிக்க வைக்கலாம்னு நினைச்சேன். ஆனா, இந்தப் படத்துக்கான ரிசர்ச் வொர்க் போகப்போக, பெரிய படமா மாறுச்சு. ஒரு நாள் கார்த்தி சாருக்கு இந்தக் கதையோட ஒன்லைன் தெரியவர, முழுக்கதையைக் கேட்கணும்னு சொன்னார். கதை சொன்னதும் அவருக்குப் பிடிச்சிருச்சு. கார்த்தி சார் இந்தப் படத்துக்குள்ள வந்ததும் இது இன்னும் பெரிய படமாகிடுச்சு. அவருக்காகச் சில விஷயங்களைச் சேர்த்துட்டு, படத்தை ஆரம்பிச்சோம்!” - ‘கைதி’ படம் உருவான கதையோடு உரையாடலை ஆரம்பித்தார் லோகேஷ்.

**“ ‘மாநகரம்’ படம் பண்ணும்போது கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் மாஸ் ஹீரோக்கள் நடிக்கணும்னு சொல்லியிருந்தீங்க. ஆனால், மாஸ் ஹீரோ**

# ஓர் இரவு...





TabletBarn.com







TabletBarn.com









TabletBarn.com

**படத்துக்குள்ள வரும்போது ஸ்க்ரிப்ட்டில் மாற்றங்கள் செய்வது ஏன்?"**

"என்னைப் பொறுத்தவரை படத்தின் கன்டென்ட் பாதிக்காத அளவுக்கு ஸ்க்ரிப்ட்டில் மாற்றங்கள் பண்ணலாம். கார்த்தி சார் கமிட்டாகுறதுக்கு முன்னாடியும் கமிட்டானதுக்குப் பின்னாடியும் கன்டென்ட்டில் எந்தவித மாற்றத்தையும் நான் பண்ணலை. கார்த்தி சாருக்காக நான் ஹீரோயின் கேரக்டரைச் சேர்க்கலை; பாடல்களைச் சேர்க்கலை. மெயின் கன்டென்ட் என்னவோ அது அப்படியேதான் இருக்கு. ஏன்னா, இந்தப் படம் இப்படித்தான் இருக்கணும்னு சொன்னேன். அதை அவரும் ஏத்துக்கிட்டார். கார்த்தி சாருக்காக நான் சேர்த்தது, அவர் நடிப்புக்குத் தீனி போடுற மாதிரியான சில விஷயங்கள் மட்டுமே."

**"எதனால் இந்தப் படத்தில் ஹீரோயினே இல்லை? உங்களோட முதல் படத்திலும் ஆண்கள்தான் அதிகமா இருப்பாங்க..."**

"பர்சனலா தவிர்க்கணும்னு பண்றது இல்லை. 'கைதி' படத்தோட மெயின் எமோஷனே ஒரு பெண்ணை மையப்படுத்தித்தான் இருக்கும். அப்படிப்பட்ட ஒரு எமோஷனை அந்தப் பெண் கேரக்டர் இல்லாமலே கொண்டு வரணும்கிறது என் ஐடியா. பெண்களை வெச்சு எமோஷனலா நிறைய படங்கள் எடுத்துட்டாங்க. ஆனா, அவங்களைக் காட்டாமலேயே ஒரு எமோஷனல் படம் எடுக்கணும்கிற சவாலை, எங்களுக்கு நாங்களே கொடுத்துக்கிட்டு, 'கைதி'யை எடுத்திருக்கோம்."

**" 'மாநகரம்' படம் மற்றும் 'கைதி' டீசர்... இரண்டையும் வெச்சுப் பார்க்கும்போது, உங்க படங்கள் அதிகம் இரவிலேயே நடக்கிற கதையா இருக்கு... உங்களுக்கு நைட் லைஃப்தான் பிடிக்குமா?"**

"இரவில் எடுக்கும்போது மேக்கிங் நல்லா வரும்கிறது என்னோட நம்பிக்கை. அதையும் தாண்டி 'மாநகரம்' பண்ணும்போது, சென்னையின் இரவை இதுவரை யாரும் காட்டாத மாதிரி காட்டணும்னு திட்டமிட்டு எடுத்தோம். 'மாநகரம்' மாதிரி 'கைதி'யும் ஒரு இரவில் நடக்கிற கதைதான். இந்தப் படத்தோட ஒரு ஷாட்டைக்கூடப் பகலில் எடுக்க முடியாது. அப்படியான ஸ்க்ரிப்ட் இது. ஒரு காட்டின் இரவு எப்படி இருக்கும்னு காட்டத்தான், இந்தப் படம் முழுக்க காட்டிலேயே எடுத்திருக்கோம்."

**"நீங்க யார்கிட்டவும் உதவி இயக்குநரா வேலை பார்க்காமல் இயக்குநரானவர். கார்த்தி, மணிரத்னத்திடம் உதவி இயக்குநரா இருந்தவர். ஸ்பாட்டில் டைரக்‌ஷன் சம்பந்தமான உதவிகள் அவர்கிட்ட இருந்து எதுவும் கிடைக்குமா?"**

"ஷூட்டிங் போறதுக்கு முன்னாடியே நானும்


ecotank
EPSON
EXCEED YOUR VISION
It's Eco-nomical.
It's Eco-friendly.
It's EcoTank.
Prints start from
7 PAISE[1]
M SERIES
For Office
L SERIES
For Home & Office
Epson EcoTank Printers
THE ONLY WAY TO PRINT
Epson is the registered trademark of Seiko Epson Corporation, Japan.
Seize the EcoTank advantage.
Visit jointherevolution.co.in, or call:
CHENNAI 99529 41935 MADURAI 94420 06450
TRICHY 97917 96620 COIMBATORE 98942 19200
Designed to support the Sustainable Development Goals (SDGs) set by the UN
SUSTAINABLE DEVELOPMENT GOALS
www.epson.co.in
SMS EPSON-IJP TO 58558
[1]For cost-per-print calculations, visit www.epson.co.in/parameters.









TabletBarn.com

கார்த்தி சாரும் பேசும்போது, பல விஷயங்களை டிஸ்கஸ் பண்ணினோம். எதெல்லாம் சரியா வரும்; எதையெல்லாம் மாற்றிப் பண்ணணும்னு முன்னாடியே முடிவு பண்ணிட்டோம். அதனால் ஸ்பாட்டில் எதுவும் சொல்ல மாட்டார். ஆனால், ஒவ்வொரு நாள் காலையில் ஷூட்டிங் கிளம்பும் போதும் எல்லா யூனிட்டும் சரியா இருக்கான்னு நான் செக் பண்ற மாதிரி, அவரும் செக் பண்ணுவார். எல்லாமே நேர்த்தியா நடக்கணும்னு எதிர்பார்ப்பார்.”

**“படத்தின் முக்கியக் கதாபாத்திரங்கள் பற்றிச் சொல்லுங்க...”**

“முக்கியமான ரோல்ல, நரேன் நடிச்சிருக்கார். அவருக்கு இது சரியான கம்பேக் படமா இருக்கும். நகைச்சுவை நடிகர் ஜார்ஜ் ஒரு முக்கியமான ரோல் பண்ணியிருக்கார். ‘கலக்கப்போவது யாரு’ தீனா நடிச்சிருக்கார். அவரோட நிறைய ப்ராங்க் போன்கால் வீடியோஸ் பார்த்திருக்கேன். இதுல அவரோட வாய்ஸ் தனியாத் தெரியும். அப்படி ஒரு வாய்ஸ் இந்தப் படத்தோட ஒரு கேரக்டருக்குத் தேவைப்பட்டது. அதனால அவரை நடிக்க வெச்சேன். அர்ஜுன் தாஸ்னு ஒரு புதுமுகம் வில்லனா பண்ணியிருக்கார். ரொம்ப நல்லா நடிச்சிருக்கார்.”

**“அடுத்து விஜய் படம் பண்ணப்போறீங்க; தீபாவளிக்கு ‘பிகில்’ படத்தோடு ‘கைதி’ படத்தை ரிலீஸ் பண்றீங்க. எப்படி இருக்கு இந்தப் புது அனுபவங்கள்?”**

“ஒரு படத்தை முடிச்சு, அதைத் தயாரிப்பாளரின் கையில் கொடுக்கிற வரைக்கும்தான் இயக்குநரோட வேலை. அதை எப்போ ரிலீஸ் பண்ணணும்கிறது தயாரிப்பாளரோட முடிவு. ‘கைதி’யை ஆகஸ்ட் மாதம் ரிலீஸ் செய்யணும்னு பிளான் பண்ணிட்டுதான் ஷூட்டிங்கை ஆரம்பிச்சோம். கிராஃபிக்ஸ் வேலைகளால் கொஞ்சம் டைம் ஆச்சு. அப்புறம் படம் தெலுங்கிலும் ரிலீஸ் ஆவதால் தீபாவளி நேரம்தான் சரியா இருக்கும்னு சொன்னாங்க.”

**“உங்களோட 3வது படம் ‘விஜய் 64.’ இதில் எந்தளவுக்கு விஜய்யை வித்தியாசமா காட்டப்போறீங்க?”**

“ ‘விஜய் 64’ படத்தைப் பத்தி இப்போ நான் பேசுறது, ரொம்ப சீக்கிரம்னு நினைக்கிறேன். படத்தைப் பத்தியோ, அது எந்த மாதிரியான ஜானரா இருக்கும்னோ இப்போதைக்கு என்னால சொல்ல முடியாது. ஆனா, என்னால ஒரு விஷயத்தை மட்டும் உறுதியா சொல்ல முடியும். இதுவரைக்கும் பார்க்காத விஜய்யா, பார்க்காத விஜய் படமா அது இருக்கும். அதுக்கு நான் கியாரன்ட்டி.”

உற்சாகமாய்க் கைகுலுக்குகிறார். வி


வண்ணமயமான இந்த
தீபாவளி-யை
வர்ணா வேட்டி-சர்டுகளுடன்
கொண்டாடுவோம்...
Colorful ah..
Youthful ah...
UATHAYAM®
VARNA™
FANCY BORDER DHOTIS - SHIRTS
Matching
DHOTIS - SHIRTS
for FATHER & SON
அனைத்து ஜவுளிக்கடைகளிலும் கிடைக்கும். ✆ 9865804757
www.uathayam.in





43/100

# சிவப்பு மஞ்சள் பச்சை

(U)

ஸ்ட்ரீட் ரேஸரும் டிராஃபிக் போலீஸும் சந்தர்ப்ப வசத்தில் மாமன் - மச்சான் ஆகி, சண்டக்கோழியானால் அது ‘சிவப்பு மஞ்சள் பச்சை.’

கடமை, கண்ணியம், காவல்துறை காவல் அதிகாரியாக சித்தார்த். மிடுக்கான உடல்மொழியும் துடுக்கான பேச்சுமாக ஆச்சர்யப்படுத்துகிறார். அக்காவின் அன்புத் தம்பியாக, அக்காவுக்கு அன்புத்தகப்பனாக, ஸ்ட்ரீட் ரேஸ் ஓட்டும் ரேஸராக ஜி.வி.பிரகாஷ். முதிர்ச்சியில்லாத பதின்பருவத்துக் கதாபாத்திரத்தில் சிறப்பாய் நடித்திருக்கிறார். கதையின் அச்சாணியான ராஜி பாத்திரத்தில் கொஞ்சமும் பிசிரில்லாமல், பிரமாதமாய் நடித்துக்கொடுத்திருக்கிறார் அறிமுக நடிகை லிஜோமோல் ஜோஸ். நல்வரவு! ஜி.வி-யின் காதலியாக வரும் காஷ்மீராவுக்கு நடிப்பதற்கான இடங்கள் குறைவு என்றாலும் குறையில்லாத நடிப்பு. ஜி.வி.பிரகாஷ் அத்தையாக நடித்திருக்கும் ‘நக்கலைட்ஸ்’ தனத்தை இனி நிறைய படங்களில் பார்க்கலாம். பைக் ரேஸர் பாய்ஸும் செம நெருப்பு!

சித்துகுமார் இசையில் ‘மயிலாஞ்சியே’ பாடல், மயிலிறகின் வருடல். பின்னணி இசையிலும் கவனம் ஈர்க்கிறார். ஒளிப்பதிவாளர் பிரசன்னகுமாரின் கேமரா, ரேஸ் காட்சிகளிலெல்லாம் வெறித்தனம் காட்டியிருக்கிறது. ஷான் லோகேஷின் படத்தொகுப்பு, படத்தின் வேகத்தை ஜிவ்வெனக் கூட்டியிருக்கிறது.

சசியின் படங்களில் சமூக அக்கறையுடன் சென்டிமென்ட் கலவை இருக்கும். இந்தப் படத்திலும் அதே. முதிரா இளைஞனின் முரட்டுத்தனத்தையும் உறவுகளின் முரண்பாடுகளையும் அழகாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் சசி. ஆனால் சென்டிமென்ட் கொஞ்சம் தூக்கலாகிப்போனதில் சீரியல் வாடை அடிக்கிறது.

‘சாந்துப்பொட்டு ஒரு சந்தனப்பொட்டு... எடுத்து வெச்சுக்க வெச்சுக்க மாமோய்’ என்று ‘ஆண்மை என்றால் வீரம்’, ‘பெண்மை என்றால் கோழைத்தனம்’ என்று நூற்றாண்டாகச் சித்திரிக்கும் தமிழ் சினிமாவில் அதற்கு எதிரான குரலை முன்வைத்ததற்காக சசிக்கு அழுத்தமான கைகுலுக்கல்.

நாடகத்தனம் ஆங்காங்கே சிவப்பு விளக்கு போட்டாலும், பாசத்துக்கும் சமூக அக்கறைக்கும் பார்வையாளர்கள் பச்சைவிளக்கு காட்டலாம்.

**விகடன் விமர்சனக் குழு**

TabletBam.com



முடிப் பிரச்னைக்குக் காரணங்கள் பல...
அனைத்தையும் கட்டுப்படுத்துகிறது 'அஸ்வினி...
இல்லையென்றால் உங்கள் பணம் வாபஸ்!
ASWINI
60* நாள்
மணி பேக் கேரண்டி*
அஸ்வினி பயன்படுத்தி 60 நாட்களில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால், கீழ்க்கண்ட முறைப்படி உங்களின் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்*
நீங்கள் திருப்தியடைந்தால், எங்களுக்கு அதுகுறித்து எழுதவும்...
"அஸ்வினி பயன்படுத்துவதற்கு முன்பு ரூ.500/– முதல் ரூ.2,000/– மதிப்புள்ள தயாரிப்புகளை உபயோகித்துள்ளேன். இருந்தாலும் அஸ்வினி மட்டுமே பலன் தந்தது.**"
**Consumer's personal opinion
B.மோஹன பிரியா,
சென்னை.
தூய்மையான தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்பட்டது. மினரல் ஆயில் கிடையாது. பதப்படுத்தும் பொருள்கள் எதுவும் கிடையாது.
ASWINI HAIR OIL
ASWINI®
HOMEO ARNICA HAIR OIL
முடியுதிர்வைக் குறைக்கும்...
பொடுகைத் தடுக்கும்...
* மணி பேக் பெறும் வழிமுறை:
• இந்த ஆஃபர் 90ml மற்றும் 180ml அஸ்வினி ஹேர் ஆயில் பாட்டில்களுக்கு மட்டுமே பொருந்தும்.
• கடையில் வாங்கிய பில்'லை சமர்ப்பிக்க வேண்டும்.
• இந்த மணி பேக் ஸ்கீம் 31/10/19 வரை மட்டுமே. 60 நாள் மணி பேக் கேரண்டி காலம் உங்கள் பில்'லில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியிலிருந்து ஆரம்பமாகிறது.
• காலி பாட்டில் மற்றும் பூர்த்தி செய்த மணி பேக் கிளெய்ம் படிவத்தை எங்களுக்கு அனுப்பவும்.
• மணி பேக் கிளெய்ம் படிவம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை குறித்து அறிய www.aswini.com தளத்தைப் பார்வையிடவும் அல்லது எங்களின் கஸ்டமர் கேர் இலவச டோல் எண்ணை அழைக்கவும்: 18008435599.
மேலும் தகவல்களுக்கு, தொடர்புகொள்ளவும் – (044) 2651 2171 / +91 87545 94010

சினிமா விமர்சனம்

# மகாமுனி

U/A

கொலைத்தொழில் பழகும் ஒருவன், அன்பும் சிவமுமாய் வாழும் ஒருவன்... இவர்கள் இருவரையும் வாழ்க்கை ஏற்றி, இறக்கி, தீண்டி விளையாடும் பரமபத ஆட்டமே இந்த ‘மகாமுனி.’

அரசியல்வாதி இளவரசுவின் ஆஸ்தான அடியாள் மகாதேவன். தன்னை, தன் மனைவியைக் கேவலமாகப் பேசும் எதிர்க்கட்சிப் பேச்சாளரைக் கடத்திவரும் பொறுப்பை மகாதேவன் (எ) ஆர்யாவிடம் கொடுக்கிறார் இளவரசு. அந்த வேலை, சில அரசியல் காரணங்களால் விபரீதத்தில் முடிகிறது. மறுபக்கம் கொங்கு மண்டலத்தின் பசுமையான கிராமம் ஒன்றில் யோகா, இயற்கை விவசாயம், வாசிப்பு, கல்விச்சேவை என நற்பண்புகளுடன் வாழ்கிறார் முனிராஜ் என்ற மற்றொரு ஆர்யா. ஆதிக்கச் சாதியில் பிறந்து முற்போக்குச் சிந்தனைகளுடன் வாழும் இதழியல் மாணவி மஹிமாவோடு ஆர்யா பழகுவது, சாதியத்தில் ஊறிய தந்தை ஜெயப்பிரகாஷுக்கும் அவர் சகாக்களுக்கும் பிடிக்கவில்லை. ஆணவக் கொலைக்கு நாள் குறிக்கிறார்கள். வாழ்வுக்கும் மரணத்துக்குமான ஊசலாட்டத்தில் நிற்கும் மகாமுனி இருவரின் வாழ்க்கையில் வென்றது மகாமுனியா, மரணமா என்பதைக் கதையாக்கியிருக்கிறார் இயக்குநர் சாந்தகுமார்.

திரைவாழ்க்கையில் நினைவு வைத்துக் கொள்ளும்படியான பாத்திரங்கள் ஆர்யாவுக்கு. காத்திருந்ததுபோல மொத்தத் திறமையையும் கொட்டித் தீர்த்திருக்கிறார். மரணத்தை நித்தமும் சந்திக்கும் மகாவின் முகத் தெளிவு, இயலாமையில் புழுங்கும் முனியின் கண்களில் தேங்கிப்போன கோழைத்தனம் என இரண்டு கதாபாத்திரங்களையும் தனித்தனியாகச் சுமந்து இறுதியில் மகாமுனியாக பிரமாண்டமாக நிற்கிறார். காதல், பயம், பதற்றம், சோகம், கோபம் என அத்தனை உணர்ச்சிகளையும் தன் கண்களிலேயே கடத்தியிருக்கிறார் இந்துஜா. சுயசாதியை விமர்சிக்கும் சமூக உணர்வுள்ள பெண்ணாக மஹிமா, ஜி.எம்.சுந்தர், யோகி, ஜெயபிரகாஷ், ரோகிணி எனத் திரையில் வரும் அனைவரும் ஏதோவொரு கணத்தில் நம்மை இழுத்துப் பிடித்து நிறுத்தித் திரும்பிப் பார்க்கவைக்கிறார்கள்.

45/100

சாந்தகுமாரின் உடலுக்குள் புகுந்து அவரின் கண்களாகவே மாறிக் கதை சொல்கிறார் ஒளிப்பதிவாளர் அருள் பத்மநாபன். இயக்குநரின் குரலில் தொடங்கி முடியும் கதைக்கு இவரின் ஒளிப்பதிவு பெரிய பலம். வலி விதைக்கும் ஃப்ரேம்களும் பதற்றம் கூட்டும் வண்ணங்களுமாக விரிகிறது அருளின் கைவண்ணம். முதல்பாதியில் கச்சிதமாக எடுபடும் தமனின் பின்னணி இசை இரண்டாம்பாதியில் தேங்கி நிற்கிறது. படத்தில் வரும் வீடுகளும் தங்கள் பங்கிற்குக் கதை சொல்கின்றன. உபயம் : கலை இயக்குநர் ரெம்போம் பால்ராஜ். சென்னைக்கும் ஈரோட்டிற்கும் மாறி மாறிப் பயணித்தாலும் கதை தேங்காமல் ஓடுவது சாபு ஜோசப்பின் படத்தொகுப்பால்தான்!

தெளிவாய்த் தொடங்கி முடியும் காட்சிகள் ஒவ்வொன்றும் குறுங்கதைகள். சாவைப் பரிசளிக்கும் தூதுவன் தன் மகனுக்காகப் பள்ளியில் போய் அன்பை போதிக்கும் இடம் அழகான முரண். நிச்சயமின்மை நிரம்பி வழிய பேருந்தில் திரும்பிப் பார்த்தபடி போகும் இந்துஜாவின் முகம் சோகக் கவிதை. பெற்றவர்களைப் பறிகொடுத்த சிறுவன் தனியாய் மரபெஞ்சில் அமர்ந்திருக்கும் காட்சி உள்ளூர எதையோ உடைக்கிறது. இப்படி தேர்ந்த எழுத்தாளராய் படம் முழுக்க ஒளிர்கிறார் இயக்குநர்.

காட்சியமைப்புகளில் கவனம் செலுத்திய சாந்தகுமார் கதாபாத்திர வடிவமைப்பில் இன்னமும் கொஞ்சம் சிரத்தை எடுத்திருக்கலாம். ஸ்கெட்ச் போட்டுக் கொலைத் திட்டங்கள் தீட்டும் மகா, தன்னை அரசியல்வாதி ஏமாற்றுகிறார் என்பதைக் கடைசிவரை அறியாத அப்பாவியாகவா இருப்பார்? அதேபோல் முனிராஜின்

TabletRam.com

பாத்திரப் படைப்பிலும் தெளிவு இல்லை. சாதியப் படிநிலைகள் பற்றி நன்றாகத் தெரிந்தவர் ஆணவக்கொலை முயற்சி எனத் தெரிந்த பின்னும் 'ஐயா... ஐயா' எனக் கெஞ்சிக்கொண்டே இருப்பாரா என்ன? கடவுள் பற்றி முனிராஜ் பேசும் வசனமும் அதற்கு மஹிமா எதிர்வினை ஆற்றாமலிருப்பதும் அந்தந்த பாத்திரங்களின் தன்மைக்கு ஏற்புடையதாக இல்லை. விவேகானந்தர், அம்பேத்கர், பெரியார், விபூதி, ருத்திராட்சம், 'புதிய திராவிடம்', சார்லி சாப்ளின், சாவித்ரிபாய் பூலே, சாரு நிவேதிதா எனப் படம் முழுக்கத் தொடரும் குழப்பம் பாத்திரங்களுக்கு மட்டுமா, இயக்குநருக்குமா?

இரண்டரை மணிநேரம், கதையைக் காட்சிகளாக விவரித்த இயக்குநர், கடைசி இரண்டு நிமிடங்கள் வாய்ஸ் ஓவரில் படபடவென முடிவை விவரிப்பதும் அதுவரை இருந்த நேர்த்தியுடன் ஒட்டாமல் நிற்கிறது. துப்பாக்கிக் குண்டைச் சுமந்தபடியே பழிவாங்கும் கடமையை முடித்து, பயணங்களையும் மேற்கொண்டு மகாதேவன் சாவகாசமாக மருத்துவமனையில் சிகிச்சை எடுப்பதெல்லாம் எந்த தர்க்கத்திலும் எடுபடவில்லையே?

கமர்ஷியல் சினிமாவுக்குள் நல்ல கதை சொல்லும் முயற்சிதான். ஆனால், முழுமை பெற்றிருந்தால் இன்னும் கொண்டாடியிருக்கலாம்.

**விகடன் விமர்சனக் குழு**





TabletBarn.com




வழக்கமாக ஜாம்பி படங்களின் கதை என்னவாக இருக்குமோ, அதேதான் இந்த 'ஜாம்பி' படத்தின் கதையும்.

குடும்ப வாழ்க்கையை நினைத்து நொந்து நூலாகி, புண்பட்ட மனதை புட்டியைக் கொண்டு ஆற்றலாமென பாருக்குச் செல்கிறார்கள் மூன்று இளைஞர்கள். அங்கே இருவர் இந்த மூவருடன் நண்பர்களாக, ஐவரும் சேர்ந்து ஒரு ரிசார்ட்டுக்குச் செல்கிறார்கள். அந்த ரிசார்ட்டில் சமைக்கப்பட்ட உணவைச் சாப்பிட்ட சிலர் ஜாம்பிகளாக மாறி, மற்றவர்களை இழுத்துப்போட்டுக் கடிக்க, இவர்களையும் ஒரு பெண்ணையும் தவிர எல்லோருமே ஜாம்பியாகிவிடுகிறார்கள். இந்த ஜாம்பிக் கூட்டத்திலிருந்து அந்த ஆறு பேரும் தப்பித்தனரா, இல்லையா என்பதே படத்தின் கதை.

பிஸ்டல் ராஜ் எனும் ரௌடி கதாபாத்திரத்தில் யோகிபாபு. அவரைத் திரையில் பார்த்தாலே மக்கள் சிரிக்கிறார்கள். அதற்கான, நியாயத்தையும் படத்தில் ஓரளவு செய்திருக்கிறார். அவர் அடிக்கும் சில கவுன்டர்கள் 'குபீர்' ரகம். ஆனால், நடிக்கும்போது வாயில் பபிள்கம்மை மென்றுகொண்டு டப்பிங்கில் ஒப்பேற்றினாற்போல் வசனங்களும் வாயசைவும் ஒட்டவேயில்லை.

'பரிதாபங்கள்' கோபி-சுதாகர், 'பிளாக் ஷீப்' அன்பு, பிஜிலி ரமேஷ் என யூடியூப் நடிகர்கள் எல்லோரும் வெள்ளித்திரை நடிகர்களாக மாறி நடித்திருக்கிறார்கள். அதில், சுதாகர் தனியாக நம் கவனம் ஈர்க்கிறார். யாஷிகா ஆனந்த், டி.எம். கார்த்திக், ஜான் விஜய் என எல்லா நடிகர்களும் ஜாலியாக நடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அது ஜாலியாக இருக்கிறதா என்பது வேறு கதை. காமெடி நடிகர்கள் ஃப்ரேமில் வந்து நின்றாலே அது காமெடிப்படம் என இயக்குநர்கள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். வீ பாவம்!

மீம் பேஜ்கள், யூடியூப், ட்விட்டர், ஃபேஸ்புக் என எல்லா ஏரியாக்களிலும் டிரெண்ட் ஆனவற்றை வைத்துப் படம் பண்ணியிருக்கிறார் இயக்குநர் புவன் நல்லான். படத்தில் புதுமை எல்லாம் ஒன்றுமில்லை. அவர்கள் அதற்காக மெனக்கெடவும் இல்லை. இந்தப் படத்தில் லாஜிக் எல்லாம் பார்த்தால் நம்மையும் ஜாம்பி கடித்துவிடும்.

இசைக்காட்டேரி பிரேம்ஜி அமரனின் இசையில், 'ஆர் யூ ஓகே பேபி' ஓகே. ஆனால், பின்னணி இசையில், ஏற்கெனவே வந்த ஹிட்டான பாடல்களை எல்லாம் வெட்டி, ஒட்டி வீடியோ மீம் க்ரியேட்டர்களுக்கே சவால் விடுத்திருக்கிறார்.

ரத்த வாடையைக் குறைத்து, அடல்ட்ஸ் ஒன்லி சமாசாரங்களைத் தவிர்த்து, புதுமை என்ற வார்த்தையையாவது படத்தில் சேர்த்திருந்தால், இந்த 'ஜாம்பி' சங்கைக் கடித்திருக்காதே!

**விகடன் விமர்சனக் குழு**

Vikatan Apps
TabloidBank.com

சுகுணா திவாகர்

# படிப்பறை




**சேவல்களம்**

பாலகுமார் விஜயராமன்

**வெளியீடு:**
காலச்சுவடு பதிப்பகம்,
669, கே.பி.சாலை,
நாகர்கோவில் - 629 001.
email :
publications@kalachuvadu.com

**பக்கங்கள்:** 200
**விலை:** 225 ரூபாய்

**சே**வல் சண்டையை வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாகக் கருதும் ஒரு தலைமுறை, நவீனத் தொழில்நுட்ப யுகத்தில் வாழும் அடுத்த தலைமுறை ஆகியவற்றின் வாழ்க்கையைச் சொல்லும் நாவல் ‘சேவல்களம்’.

சேவற்சண்டைக்காரர்களுக்கு என்று தனி உலகம் இயங்குவதையும் அந்த உலகத்துக்கென்றே இருக்கும் தனித்துவமான விதிகள், நெருக்கமான உறவுகள், பணத்தை மதிக்காத பண்பு ஆகியவற்றைப் பதிவதில் வெற்றிபெற்றிருக்கிறார் பாலகுமார் விஜயராமன். ஆனால் இதில் உள்ள நுட்பம் அடுத்த தலைமுறையை விவரிக்கும் சித்திரிப்பில் இல்லை. ‘நாவல் பாத்திரங்கள் பெரும்பான்மையும் ‘நல்லவர்’களாகவும் குணவான்களாகவும் இருப்பது இன்றைய சூழலில் பெருத்த ஆசுவாசத்தைத் தருகிறது’ என்று பெருமாள் முருகன் பின்னட்டையில் எழுதியிருக்கும் அம்சம்தான் உண்மையில் நாவலின் பெரும்பலவீனம். வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களையும் முரண்களையும் பேசுவதே இலக்கியம். ஆனால் இந்த நாவலில் எல்லாச் சம்பவங்களும் நூல்பிடித்து நேர்கோட்டில் செல்கின்றன. யாருக்கும் எந்தப் பிரச்னையும் இல்லை. மக்கள் பிரச்னைக்காகத் ‘தீக்குளித்து’ இறந்துபோன ரமேஷின் கதை மட்டுமே மற்ற கதைகளில் இருந்து தனித்துத் தெரிகிறது.

ஈழப்பிரச்னைக்காக தற்கொடை செய்த முத்துக்குமாரையும் மொழிப்போராட்டத்தின் தற்கொடை ஈகியர்களையும் நினைவுபடுத்தும் பாத்திரம் ரமேஷ். ஆனால் அந்தச் சித்திரிப்பில் அத்தனை பிழைகள். ரமேஷ் வந்து செல்லும் ‘மக்கள் படிப்பக’த்தில் நடைபெறும் உரையாடல்கள், அது இடதுசாரி சார்புடையது என்று சித்திரிக்கிறது. ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் ‘சகோதரர்’ என்று அழைத்துக்கொள்கிறார்கள். அழகிப்போட்டிக்கு எதிராக நடைபெறும் போராட்டத்தில் ‘சகோதரர்கள்’ ரமேஷ் உடலில் தீயைப் பற்றவைத்துவிட்டு ‘உயிராயுதம் ஏந்துவோம் சகோதரா’ என்று முழக்கமிடுவதாக அபத்தமாகச் சித்திரித்திருக்கிறார் நாவலாசிரியர். ‘உயிராயுதம்’ என்னும் வார்த்தை முத்துக்குமார் கடிதத்தில் உள்ள வார்த்தை. இடதுசாரிகளின் அரசியல் வரலாற்றில் தீக்குளிப்புகள் நடந்ததில்லை. திராவிட இயக்கம் மற்றும் ஈழ ஆதரவுப் போராட்டங்களில் நிகழ்ந்த தீக்குளிப்புகள், அதன் பின்னுள்ள உணர்ச்சிவயப்பட்ட மனநிலையைக் குறித்து விமர்சிக்கலாமே தவிர அவற்றை ‘மற்றவர்கள் கொளுத்திவிட்டதாக’ப் படைப்பில் சித்திரிப்பது நேர்மையான செயல் அல்ல. நாவல் முழுக்க ஆங்காங்கே இடதுசாரிகள், திராவிட இயக்கம், தமிழ்த்தேசியம், சிறுபான்மையினர் மீதான வெறுப்பு என்று வலதுசாரி மனநிலை அடிநீரோட்டமாய் ஓடுகிறது.

இலக்கியமாக மாறாமல் நின்றுவிட்டபோதும் சேவற்சண்டையின் நுட்பம் அறியவும் சுவாரஸ்யத்துக்காகவும் இந்நாவலை வாசிக்கலாம். வி



TabletBarn.com

# சொல்வனம்



## பூ இருக்க முள் கவர்ந்தற்று

வெடித்துக் காற்றில் பறக்க எத்தனிக்கும்
இந்தப் பருத்திப் பஞ்சிலிருந்து
சவத்துணியொன்று நெய்யப்படலாம்

புரையோடிப்போன புண்ணிலிருந்து
அவிழ்க்கப்படும் கட்டுத்துணியாக
இத்தூய்மையான பஞ்சு ஆகலாம்

பறவையின் கூட்டில் குஞ்சுகளுக்கு கதகதப்பான
மெத்தையாக தாயின் சூடாய் பிரசவிக்கலாம்

அல்லது
சூரியனுக்கு தன் கறுத்த முதுகைக் காட்டி
வேலை செய்பவரின் கோமணத்துணியாகவும்...

*- பூர்ணா*



## ஆதி ரகசியம்

**சி**றுவயதில்
பூச்சி மருந்துக்குத்
தப்பித்தவள்தான்
இம்முறை தூக்கிட்டுக்
கொண்டாள்...
இடையில் ஒருமுறை
தண்டவாளத்தில்
தலை கொடுக்கையிலேயே
இறந்தவள்தான்
என்ற யாருமறியா ரகசியத்தை
அவள் தூக்கிட்டுத் தொங்கிய அன்று
கண்டுபிடித்துவிட்டார்கள்...
அதுவும் பொய்யென்று
நகைத்துக் கூறியது,
பூச்சி மருந்துக்கே அவள்
மரணித்துவிட்டாள் என்ற
ரகசியத்தின் ரகசியத்தை...
அப்படியே இன்னொன்றும்
கூறக்கூடும்...
பிறக்கையிலேயே கள்ளிப்பாலுக்கு
அவள் பலியான ஆதி ரகசியம்
பற்றியும்...

*- கவிஜி*

TabletBarn.com

ஓவியங்கள்: செந்தில்

## நீர்க்காகம்

பச்சைப்பாசிகள் படர்ந்து கிடக்கும்
ஊருணியின் நீர்ப்பரப்பைப்
படகுபோலக் கிழித்துச் செல்லும்
எனக்குப் பிரியமான நீர்க்காகம்.

குழந்தைகளிடம் ஒளிந்து ஒளிந்து
விளையாட்டு காட்டும் அன்பர்களைப்போல
ஓரிடத்தில் மூழ்கி வேறிடத்தில்
தலைகாட்டும்.

தத்தித் தத்திச் செல்லும்
தவளைக் கல்லைப்போல
நீர்ப்பரப்பைச் செதுக்கிக்கொண்டே
வான் புகும்
ஊர்க்கதைகள் கேட்டுவர.

நீருக்குள் அதிக நேரம் இருந்துவிட்டால்
கரையோர மரங்களில் நின்று
சிறகை விரித்தபடி வெயில் குளிக்கும்.

தூண்டிலிடும் சிறுவர்களின்
நடமாட்டம் குறித்து
மீன் கூட்டங்களுக்குத்
துப்பு கொடுக்கும்.

நீர்க்காகங்கள்
செழிப்பின் குறியீடு.

காலப்பெருவெள்ளத்தில்
நீர்க்காகங்களைத் தவறவிட்ட
எனது ஊருணி
பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கிறது.

பித்துப் பிடித்தவனைப்போல
தண்ணீர் லாரிகளை வழிமறித்து
நீர்க்காகங்களைத் தேடித் திரிகிறேன்.

- முத்துக்குமார் இருளப்பன்





## பதியனிடப்படும் தேவ கணம்

வாரச்சந்தைதோறும்
யாரேனும் ஒரு பெண்மணி
தோளில் சுமந்த
ரோஜாச் செடியோடு
ஜனத்திரளிடையே
ஊர்ந்து வருகிறாள்.
காற்றிலாடும் ஒற்றை ரோஜா
மென்சுகந்த வண்ணத்தால்
வீதியின் புறங்களை
வருடிவருகிறது.
நாளின் அந்திமம் அதில்
சரியாக ஒரு பள்ளி வாகனம்
இவ்வீதியைக் கடக்கும்போது
ஆசீர்வதிக்கப்பட்ட அந்த
அற்புத கணத்தில்
ஜன்னல் வழி ரோஜாக்கள்
பரஸ்பரம் நலம்
விசாரித்துக்கொள்கின்றன.
அடுத்த ஆறு நாள்களுக்கு
வெறிச்சோடியிருக்கும்
அவ்வீதியில்
யாராலும் பறித்துவிடவியலா
பூக்களுடன் மெல்ல வளர்கிறது
அந்தரத்தில் பதியனிடப்பட்ட
அத் தேவ கணம்.

- கே.ஸ்டாலின்

TabletBarn.com









TabletBarn.com

வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. துறவு வாழ்வில் 25 ஆண்டுக்கால நிறைவு. 54 ஆண்டுகள் வாழ்க்கைப் பயணம் நிறைவுற்று, 55ஆம் ஆண்டில் அடியெடுத்துவைக்கும் பயணம். எப்போதும் பிறந்தநாளை நாம் சிந்திப்பதில்லை. மரம் மண்ணோடு உறவுகொண்டு மலர்களை, காய்களை, கனிகளைத் தருவதுபோல; மழை எந்த உயிரினத்தையும், எவரையும் விலக்காமல் எல்லோருக்காகவும் பொழிவதுபோல; காற்று தன் கடமையைக் கணப்பொழுதும் நிறுத்தாததைப்போல; எப்போதும் எதற்கும் சலனப்படாமல் பூமிப்பந்து தன் சுழற்சியைத் தொடர்வதைப்போல... மனித வாழ்க்கைப் பயணம் இயக்கம் சார்ந்தது. இரைப்பை நிறைய உண்பதும், இமைகள் மூடி உறங்குவதும், வாழ்வின் முதற்கடமை ஆகிவிட்டநிலையில், வாழ்வின் கடமைகளை, பணிகளைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது?

ஒவ்வொரு மனித வாழ்விலும் திருப்புமுனை உண்டு. நம் வாழ்விலும் அது நிகழ்ந்தது. நமது சின்னஞ்சிறு வயதில் மகாசன்னிதானம் மதுரைக்கு எழுந்தருளும்போது, சில வேளைகளில் வணங்கி ஆசிபெற்றதுண்டு!

'தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே!' என்கிறது திருமந்திரம். குரு-சீடர் உறவு எல்லா உறவுகளிலும் மேம்பட்டது. ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு குன்றக்குடி அடிகள் பெருமான்) நம்மை ஆட்கொண்ட வரலாற்றை எழுதிக்காட்ட வார்த்தைகள் இல்லை.

சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னர் (1985ஆம் ஆண்டில்) குன்றக்குடித் திருமடத்தின் மேல் மாடியில் மகாசன்னிதானத்தை தரிசனம் செய்தோம். முதல் சந்திப்பு. படித்து, பட்டம் பெற்ற கையோடு திருவடிகளில் விழுந்து வணங்கி, திருநீற்றுப் பிரசாதம் பெற்று ஆசிபெற்றோம். மகாசன்னிதானத்தின் ஆழமான பார்வை நம்மை ஊடுருவியது. அமைதிப்பார்வை, அன்புப்பார்வை, அருட்பார்வை. சிறிது மௌனம். நம் மேனி சிலிர்த்தது. சில கேள்விகளால் நம்மை விசாரித்தார்கள். விடை சொன்னோம். வணங்கி விடைபெற்றோம்.


பிறகு... மகாசன்னிதானத்தின்



TabletBarn.com

ஓவியம்: பாலகிருஷ்ணன்

46





TabletBarn.com

உரைகளை, தூர நின்று ஏகலைவனைப் போலக் கேட்பதும், தொலைபேசி வழி உத்தரவுகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதும் நம் வாழ்க்கை ஆயிற்று. மண்டைக்காடு மதக் கலவரத்தீயை மகாசன்னிதானம் அணைத்த பிறகு, 'மனிதநேய மகாத்மா' என்று நாம் எழுதிய கவிதை, நம்மால் தொடங்கப்பெற்ற 'மணமலர்' என்ற இதழில் வெளியானது.

'காந்தியடிகள் காலம்

புத்தரின் காலம் என்பதைப்போல,

அடிகளின் காலம்

என்பதை வரலாறு வாசிக்கும்!' என்று நிறைவு பெற்றது அந்தக் கவிதை.

அந்தக் கவிதையை மகாசன்னிதானம் கடைசிவரை வாசிக்கும் வாய்ப்பு இல்லை.

*03.09.1989* அன்று, சிவகங்கையில் தயாரிக்கப்படும் பிரியதர்ஷினி டி.வி உட்பட, குன்றக்குடியில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருள்களையும் விற்பனை செய்ய 'குன்றக்குடி சிறப்பங்காடி' என்ற பெயரில் மதுரையில் ஒரு மையத்தை மகாசன்னிதானம் குத்துவிளக்கேற்றித் தொடங்கிவைத்தார்கள். நாம் சுருக்கமாக வரவேற்புரை ஆற்றினோம். பொதுவிழாவில் நமது கன்னிப்பேச்சு. மகாசன்னிதானம் கேட்ட நம் முதல் பேச்சும் அதுதான். நமது வரவேற்புரையை மகாசன்னிதானம் ஆழமாக கவனித்தார்கள். வாழ்த்துரை வழங்கிய அனைவரும் நம்மைப் பாராட்டினார்கள்.

திருவருட் பேரவையின் நல்லிணக்க அமைதி ஊர்வலம் மதுரையில் நடந்தது. இந்தப் பணிக்காக மூன்று நாள்கள் மகாசன்னிதானம் மதுரையில் முகாமிட்டார்கள். விழி அசைத்தும், விரல் அசைத்தும் இட்ட பணிகள் அனைத்தையும் நிறைவேற்றினோம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், நெல்லையிலிருந்து குன்றக்குடிக்கு வரும் வழியில் மதுரையில் மகாசன்னிதானத்தின் திடீர்த் தங்கல். நமக்கு அவசர அழைப்பு. தங்குமனையில் காலை 10 மணிக்குத் தொடங்கிய உரையாடல் இரவு 9 மணிவரை நீடித்தது. மாலை பொதுக்கூட்டத்துக்கு உடன் அழைத்துச் சென்றார்கள்.

"சிறிய வட்டத்தைவிட்டு வெளியே வா! உலகம் பெரியது. உனக்காகப் பணிகள் காத்திருக்கின்றன!" - மகாசன்னிதானத்தின் அழைப்பு.

"பெரிய பணிகளை ஏற்றுச் செய்கிற வலிமை என்னிடம் இல்லையே..." என்று தாள்பணிந்து மறுத்தோம்.

"உன்னை என்னால் மாற்றிவிட முடியும்" என்றார்கள். நாம் மௌனமாக இருந்தோம்.

சில மாதங்கள் கழித்து, அலுவலகப் பணி நிமித்தம் குன்றக்குடி சென்றோம். அன்று மகாசன்னிதானத்தின்





குரு மகாசன்னிதானத்துடன்

ஞானபீட நாள் என்பது அங்கு சென்றபோது தான் தெரிந்தது.

ஏராளமான அறிஞர்கள், சான்றோர்கள் திரளாக வந்திருந்தார்கள். நாம் வந்ததறிந்து, நம்மை மகாசன்னிதானம் திருமடத்தின் மேல்மாடிக்கு உடனே வரும்படி உத்தரவு. மகாசன்னிதானத்தைக் கண்டு, விழுந்து வணங்கி ஆசிபெற்றோம்.

''இன்றிலிருந்து, இப்போதிருந்து திருமடத்தில் இருந்துவிடலாம்.'' மகாசன்னிதானத்தின் உத்தரவு.

''இப்போது அதற்கு அவசரம்

இல்லையே...'' - தயங்கித் தயங்கிக் கூறினோம். ஆனால், மகாசன்னிதானம் ஆணையை மீற முடியவில்லை. அன்றே திருமடத்தின் மரபுகளின்படி காளத்திநாதர் சன்னிதியில் வழிபாடு செய்து, பூசை மடத்தில் யாத்திரை காஷாயம் பெற்று, மகாசன்னிதானத்தின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசிபெற்றோம்.

''நானேயோ தவம் செய்தேன். சிவாய நம எனப் பெற்றேன்'' என்ற பெரும்பேறு நமக்கு வாய்க்கப்பெற்று, துறவு வாழ்க்கை தொடங்கியது. நாம் துறவு மேற்கொண்ட செய்தியறிந்து மதுரையிலிருந்து நமது பூர்வாசிரமத் தாயும் தங்கையும் பதறியடித்து ஓடி வந்தார்கள். அவர்களைச் சமாதானம் செய்தோம். நம்மை அழைத்துப்போக, நாம் அணிந்திருந்த பழைய வண்ண உடைகளைக் கையில் எடுத்து வந்திருந்தார் தாய்.

''அடிக்கடி உடைகளை மாற்றிக் கொள்வதற்குக் கோபப்படுவீர்களே... இப்போது ஒரே உடைக்கு (காவியுடைக்கு) மாறிவிட்டேன். இனி உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்" என்று கூறினோம்.

கதறி அழுதபடி, ''எத்தனை உடைகளை வேண்டுமானாலும் மாற்று... நாங்கள் துவைத்துப் போடுகிறோம்... எங்களோடு வந்துவிடு" என்று தாயும் தங்கையும் கதறினார்கள். நாம் சமாதானப்படுத்தி அவர்களை அனுப்பிவைத்தோம். ஊருக்குச் சென்ற பிறகும் தாயார் நாம் அணிந்திருந்த பழைய உடைகளைப் பொக்கிஷமாகப் பேணிக் காத்தார். தினந்தோறும் மடிப்பு கலையாமல் உடைகளை எடுத்துப் பார்த்து, மடித்துவைத்து, அணைத்தபடி அவற்றோடு பேசி, மீண்டும் மடித்து

**'இனி வரமாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் போன அம்மா, ஏழைப் பிள்ளைகளின் கல்விக் கோயிலில் வெளிச்சமாக ஒளிர்கிறார். வானத்திலிருந்து மழைத்தூறல்கள் மலர்களாகத் தூவின.**

வைப்பாராம். மரணத்தின் கடைசி நொடிவரை அவற்றைத் தொட எவரையும் அவர் அனுமதித்ததில்லை. அவற்றில்தான் அவர் மகன், அவரோடு வாழ்வதாக அவருக்கு ஒரு நம்பிக்கை.

துறவு மேற்கொண்ட சில நாள்களில் ஒருவர் வந்தார். அவர், துப்புரவுத் தொழிலாளர் சண்முகவேல். மதுரையில் இருந்தபோது அதிகாலையில் தேநீர்க் கடைக்குச் சென்று நாம் தேநீர் அருந்தும்போது அவருக்கும் வாங்கித் தருவோம். எப்போதும் காக்கிச் சீருடையில் இருந்த அவர், பட்டுவேட்டி பட்டுச்சட்டை அணிந்து நம்மைப் பார்க்கத் திருமடத்துக்கு வந்திருந்தார்.

நம்மைப் பார்த்ததும், கதறி மண்ணில் கீழே விழுந்து புரண்டு அழுதார்.

மண்ணாகிப்போன பட்டுடையுடன் எழுந்து நின்றவர், "சாமி... தெருவுக்கே அலங்காரமாக, தேர் அசைந்து வருவது போல் கம்பீரமாக வருவீர்களே... வேறுபாடு பார்க்காம எங்க எல்லாரையும் அரவணைத்து உதவி செய்வீர்களே... நீங்க நடந்த தெருவைத் தூய்மை செய்ய நான் இருக்கேன்... இப்போ எங்க மனசைத் தூய்மை செய்ய அங்கே யார் இருக்காங்க?" என்றார்.

"என் கல்யாணத்துக்குக்கூடப் பட்டுவேட்டி பட்டுச் சட்டை கட்டலை. உங்களைப் பார்க்க வரும்போது உள்ளே விடுவாங்களோ, மாட்டாங்களோன்னு நினைச்சு பட்டுவேட்டி சட்டையைக் கட்டிட்டு வந்தேன் சாமி..." என்று வணங்கினார்.

"சண்முகவேல்... இது ஏழைகளின் மடம். இங்கே எல்லோரும் ஒன்று. அதனால்தான் இங்கே வந்தேன்" என்று கூறி, பந்தியில் உணவு சாப்பிடச் சொன்னோம். விக்கி விக்கி அழுதுகொண்டே பாதி சாப்பிட்டும் சாப்பிடாமலும் விடைபெற்றார் சண்முகவேல்.

சில்லறைக் காசுகளைத் தேடினோம். "எதுவும் வேண்டாம் சாமி... விபூதி மட்டும் தாருங்கள் போதும்" என்று கூறி விழுந்து வணங்கி, பக்கத்திலிருந்தவரிடம், "சாமியை நல்லாப் பார்த்துக்கங்க" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார். அவரை இன்றுவரை பார்க்க வாய்ப்பு இல்லை.

நமக்கு அப்பனாக, அம்மையாக, அய்யனாக எல்லா நிலைகளிலுமாக இருந்து, நம் நெஞ்சைத் துறப்பித்து மகாசன்னிதானம் நம்மை வழிநடத்தினார்கள். தாயினும் சாலப்பரிந்து நம் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, நம்மை ஆட்கொண்டு அருளினார்கள். உலகில் எவருக்கும் வாய்க்காத ஒப்பற்ற குருமணியை நாம் பெற்றதே நம் வாழ்வில் பெரும்பேறு. தாயைப் பின்தொடரும் கன்றைப்போல், மகாசன்னிதானத்தைப் பற்றிக்கொண்டு பயணம் தொடர்ந்தது. மகாசன்னிதானம் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பரிபூரணம் அடைந்த பின்னரும்,

TabletBarn.com

துறவு
'வலி'மையானது !



எப்போதும் நம் எல்லாப் பணிகளிலும் தோன்றாத் துணையாக நின்று நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

02.12.2012-ல் பறம்புமலை அடிவாரத்தில் நம் வள்ளல்பாரி மேல்நிலைப் பள்ளியின் புதிய கட்டடங்கள் திறப்புவிழா. விழாவில் பெரியார் பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் முத்துச் செழியன் தலைமை தாங்கி உரையாற்றினார். "நான் துணைவேந்தராக வரவில்லை. இந்தப் பள்ளியின் பழைய மாணவராக வந்திருக்கிறேன். நுழைந்தபோது, இந்தப் பள்ளியின் மண்ணைத் தொட்டு வணங்கி, என் தாய்வீட்டுக்குள் நுழைவதைப்போல் மகிழ்ந்தேன். சின்னஞ்சிறு வயதில் இந்தப் பள்ளியில் ஆடிப்பாடி மகிழ்ந்த நாள்கள் நினைவுக்கு வருகின்றன. நான் பயின்ற பள்ளிக்குப் போதிய கட்டட வசதி இல்லை. கோயில் வளாகத்திலும் பள்ளி நடைபெறும்; இன்று இவ்வளவு கட்டடங்கள்... பல்கலைக்கழக வளாகத்துக்குள் வந்ததுபோல் உணர்கிறேன். இது நல்வாய்ப்பு. நம் அடிகள் செய்த பெருந்தவத்தால் இந்த மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதற்காகவே நீங்கள் நன்கு படிக்க வேண்டும்" என்றார்.

நமது நினைவுகள் பின்னோக்கிச் சென்றன. அப்போது, இந்தப் பள்ளி வளாகத்தில் மகாசன்னிதானம் சுதேசி விஞ்ஞான இயக்கம் சார்பில் அறிவியல் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். போதிய கட்டட வசதி இல்லை என்ற காரணத்துக்காக, கடைசி நேரத்தில் அறிவியல் கண்காட்சி, பிரான்மலை அரசுத் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தில் நடைபெற்றது. மகாசன்னிதானத்தின் ஆழ்ந்த வருத்தத்தை நம்மால் உணர முடிந்தது.

மகாசன்னிதானம் பரிபூரணமான சில ஆண்டுகளில் பறம்புமலை வள்ளல் பாரி மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றன. 08.07.2002 அன்று பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா. அதை ஊர் மக்கள் தங்கள் சொந்த வீட்டு விழாவாகக் கருதிப் பங்கெடுத்தார்கள். அதிகாலையில் நமக்குத் தொலைபேசி வழி ஒரு செய்தி. தயங்கித் தயங்கி உதவியாளர் இராமசாமி தெரிவித்தார். நம்மிடம் ஒரு நிமிடம் அமைதி. பின் இயல்பாகப் பணிகளைத் தொடர்ந்தோம்.

தொலைபேசி ஒலித்தது. தலைமை ஆசிரியர். "கட்டடத் திறப்புவிழா நடத்தலாமா?" என்று கேட்டார்.

"ஏன்... விழாவுக்கு என்ன?"

தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னார்.

"உங்களுக்குத் தெரிந்ததை யாருக்கும் சொல்ல வேண்டாம்..." என்று வாக்குறுதி பெற்றுவிட்டு, "விழா வேலைகளை கவனியுங்கள்" என்றோம்.

விழா கோலாகலமாகத் தொடங்கியது. அறிஞர்களும் முக்கியப் பிரமுகர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். நாம் உரையாற்றும்போது, "தாய்ப்பால் குடித்த உணர்வைவிட, மகாசன்னிதானத்தின் தமிழ்ப்பால் குடித்த உணர்வில் தான் இந்த அரங்கத்தில் இந்த விழாவில் உரையாற்றுகிறோம்..." என்றோம். புதிய பள்ளிக் கட்டடத்தில் குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்பட்டது, பிரான்மலையில். அதே நேரத்தில், நம்மை மணிவயிற்றில் சுமந்த தாயின் இறுதி ஊர்வலம் மதுரையில். சிதையில் தாயின் உடலில் நெருப்பு மூட்டும் அதே நேரத்தில், ஏழைப் பிள்ளைகளின் கல்விக் கோயிலில் குத்துவிளக்கின் ஒளி வெள்ளமாகப் பரவியது.

'இனி வரமாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் போன அம்மா, ஏழைப் பிள்ளைகளின் கல்விக் கோயிலில் வெளிச்சமாக ஒளிர்கிறார். வானத்திலிருந்து மழைத்தூறல்கள் மலர்களாகத் தூவின.

"பிரான்மலை வள்ளல்பாரி மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி இல்லையே..." என்ற மகாசன்னிதானத்தின் ஏக்கமும் வருத்தமும் மறைந்தன. வான்மழைத் தூறல்களின்வழி மகாசன்னிதானம் வாழ்த்துவதை நம்மால் உணர முடிந்தது.

எவரும் அறியாமல் நம் கண்களில் நீர்த்துளிகளும், மழையின் துளிகளும் இரண்டறக் கலந்தன.

'அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று

ஓம்புதல் தேற்றா தவர்.'

துறவு என்பது இருந்ததையெல்லாம் இழப்பது மட்டுமல்ல... 'இழந்தோம்' என்று எண்ணிப் பாராமல் இருப்பதும்தான். அந்தப் பக்குவநிலையைத் திருவருளும், மகாசன்னிதானத்தின் குருவருளும் நமக்குத் தொடர்ந்து வழங்கப் பிரார்த்திக்கிறோம்.

**புரிவோம்...**

TabletBarn.com




■ புத்தகங்களைப் பதிவுத் தபால்/கூரியர் மூலம் பெற, புத்தக விலையுடன் ஒரு புத்தகம் என்றால் ₹20-ம், கூடுதல் புத்தகம் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக ₹10-ம் சேர்த்து **'விகடன் மீடியா சர்வீஸஸ் (பி) லிமிடெட்'** என்ற பெயருக்கு டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டர் எடுத்து 757, அண்ணா சாலை, சென்னை-600 002 என்ற முகவரிக்கு அனுப்பவும்.
■ காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. வி.பி.பி. இல்லை.
■ ஆன்லைனில் பெற: http://books.vikatan.com ■ facebook.com/vikatanpublications ■ போன்: 044 - 42634283
சென்னை: **97899 77823, 95000 68144** ● கோவை, சேலம்: **97899 77845** ● திருச்சி: **97899 77824**
● மதுரை, திருநெல்வேலி: **90030 16718** ● பாண்டிச்சேரி: **95660 01675**

“ கு.சிவராமன் ஓவியம்: சந்தோஷ் நாராயணன் படங்கள்: சொ.பாலசுப்ரமணியன்



TabletBarn.com

நாற்பதுகளில் நம்மில் பலரும் எச்சரிக்கையாகக் கையாள வேண்டிய நோய்கள் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பு. கூடவே இப்போது புற்றுநோயும் இந்தப் பட்டியலில் இணைய ஆரம்பித்திருக்கிறது. இந்தத் தொற்றாத வாழ்வியல் நோய்க் கூட்டங்களின் பிடிக்குள் போகாதிருக்க அல்லது அந்தப் பிடி இறுகாமல் இருக்க மருத்துவம் தாண்டியும் சில அக்கறைகள் மிக அவசியமானவை. சின்னச் சின்ன அந்த அக்கறைகள் மெல்ல மெல்ல இந்தப் பிடியைத் தளர்த்த வல்லவை.




முதலில், காலை பானத்தை எடுத்துக்கொள்வோம். காபி, தேநீரைத் தவிர இதில் வேறு தேர்வு இல்லையா? நிச்சயம் உண்டு. என்ன அவை என்பதை அறிய, அமேசான் காட்டுக்கோ, அமேசான் நிறுவனத்துக்கோதான் போக வேண்டும் என்பதில்லை. நம் அடுப்பங்கரைக்குள் சில நிமிடங்கள் கரிசனத்தோடு இயங்கினாலே போதும். பொதுவாக, அடுப்பங் கரையில் நாம் கூடுதலாகச் செலவழிக்கும் 20 நிமிடங்கள் ஆயுட்காலத்தில் 20 வருடங்களைக் கூட்டித்தரும். ‘அடுப்பங்கரைக்கா, நானா?’ எனப் பிளிறும் ஆணாதிக்கவாதிகள், நோய்க்கு வாக்கப்பட்டுக்கொள்ளுங்கள். தேநீர் சுவைக்க ஆரம்பித்ததற்கு முன்னர் அல்லது காபிக்கு அடிமைப்படுத்தப்பட்டதற்கு முன்னர், நாம் பல கஷாயங்கள் வைத்துக் குடித்து, காலை வேளையில் உற்சாகம் பெற்றுக்கொண்டிருந்தோம். அந்தக் கஷாயங்கள் எல்லாமே உற்சாகத்தோடு உடல் ஆரோக்கியத்தையும் கொடுத்துவந்தன. இப்போதைய கும்பகோணம் டிகிரி காபி குடிக்கும் பழக்கம் வந்து, 200 ஆண்டுகள்தான் ஆகின்றன. காபி, தேநீர்ப் பழக்கத்தால் நாம் தொலைத்த பாரம்பர்ய பானங்கள் ஏராளம்.

அப்படித் தொலைந்துபோனவற்றில் மிக முக்கியமான ஒன்று, ஆவாரைக் கஷாயம். வறண்ட மானாவாரி நிலங்களில் பொன் மஞ்சளாய்ப் பூத்துக்குலுங்கும் ஆவாரைக்கு சமீபகாலமாய்த்தான் சந்தை சற்றுப் பெரிதாய் உருவாகியுள்ளது. ‘ஆவாரை பூத்திருக்கச் சாவாரைக் கண்டதுண்டோ’ எனத் தமிழ் சித்தர்கள் அன்று பாடினர். தமிழ் சித்த மருத்துவ சமீபத்திய ஆய்வுகள், ‘உடலுக்கும் கண்ணுக்கும் குளிர்ச்சி தரக்கூடியது மட்டுமல்ல ஆவாரை; சர்க்கரைநோயைக் கட்டுப்பாட்டில் வைக்கவும் ஆவாரையின் பூக்களும் இலைகளும் தண்டுகளும் உதவுகின்றன’ என்பதைக் கண்டறிந்துள்ளன. ‘ஆவாரை சமூலம்’ எனும், அதன் இலை, பூ, தண்டு, வேர் இவற்றை உலரவைத்துக் கஷாயமாக்கிச் சாப்பிடலாம். மேலும், ஆவாரையைப் பிரதானமாகக் கொண்ட ‘எழுவர் கூட்டணி மருந்தா’ன ஆவாரை, கொன்றை, நாவல், மருதம், கோரை, கடலழிஞ்சில், கோஷ்டம் - இம்மூலிகைகளின் உலர்ந்த பொடிகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் கஷாயம், சர்க்கரைநோயைக் கட்டுப்படுத்த உதவுவதோடு, நாள்பட்ட சர்க்கரைநோயால் சிறுநீரகத்தில் புரதம் கழியும் நிலை வராமல் தடுக்கவும் உதவும். இதைத் தமிழ் சித்தர்கள், ‘காவிரி நீரும் வற்றும் கடல் நீரும் வற்றும்தானே’ என சூசகமாகப் பாடியுள்ளனர்.

காலை எழுந்தவுடன் அல்லது 11 மணி அளவில் காபி, தேநீரைத் தேடாமல், சூடாக ஒரு கப் ஆவாரை நீரை இனி குடித்துப் பழகலாமே! நாம் ஆவாரையும் சுக்குக் கஷாயமும் குடித்துக் கொண்டிருந்த காலத்தில், சீனர்கள் மட்டும் தேநீர் குடித்துக்கொண்டிருந்தார்கள். வணிகத்துக்கு அங்கு போன இங்கிலாந்து ஆங்கிலேயன் அந்தத் தேநீரின் சுவையில் ஈர்க்கப்பட்டு, தேயிலைக்கு மாற்றாக ஈடாகத் தங்கம் கொடுத்து வாங்கிவந்த வரலாறும், அதைப் பெற அபினுக்கு அவனை அடிமைப்படுத்தி, உலகெங்கும் தேயிலையை



TabletBarn.com

> எது கருஞ்சீரகம் என்பதில் சிலருக்குக் குழப்பம். Black Cummins என ஆங்கிலத்தில் சொல்வதால், இதற்குக் 'கருஞ்சீரகம்' எனப் பெயர் வைத்துவிட்டனர். நாம் அன்றாடம் பயன்படுத்தும் சீரகத்துக்கும், அதன் குடும்பத்துக்கும், கருஞ்சீரகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை

எடுத்துவந்த வரலாறும் உண்டு. இன்று 50,000 மில்லியன் டாலர் சந்தைப் பொருள், தேநீர். இந்தியா, சீனா, இலங்கையில்தான் தேயிலை அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் உலகிலேயே அதிகமாகத் தேநீர் பருகுவது துருக்கி, இங்கிலாந்து, மொராக்கோ முதலிய நாடுகள்தான்.

இன்று சீனர்கள் வீடுகளில் எத்தனை வகையான தேநீர் தயாரிக்கிறார்கள் தெரியுமா? தேயிலையிலேயே அதன் உற்பத்தி நிலையில் *Black tea, Oolong tea, Green tea* வகைகள், தேநீரில் லவங்கப்பட்டை, இஞ்சி, சாதிக்காய், ஸ்டார் அனைஸ் எனும் அன்னாசிப்பூ (அன்னாசிப்பழத்துப் பூவல்ல, நட்சத்திர வடிவில் பிரியாணியில் போடுவோமே, அந்த உலர்ந்த பூ) என அவர்கள் நாட்டில் வளரும் மூலிகைகள் பலவற்றை தினசரி ஒன்றாகத் தேநீரில் போட்டுக் குடிக்கிறார்கள். இன்று சீனர்கள் மூலமாக, மூலிகைத் தேநீர் வகைகளுக்கு உலகெங்கும் பெரும் வணிகம் வளர்ந்து வருகிறது.

தேயிலை ஆலையிலேயே, சீனர்கள் *Black tea, Oolong tea, Green tea* என மூன்று வகையாகத் தயாரிக்கின்றனர். அதிகம் ஆக்ஸிடேஷன் (*oxidation*) நடக்காததால், கிரீன் டீக்குத்தான் மருத்துவ மவுசு அதிகம். ஊலாங் தேநீரின் சுவை சீனாவில் மிகப் பிரபலம். இப்போது சீனர்கள் வாழும் நாடெங்கும் இதைப் பிரபலப்படுத்திவருகிறார்கள். இந்தத் தேயிலை உலரவைக்கப்பட்டு, சுருண்டு, அவர்கள் வணங்கி மகிழும் *Black Dragon* போல் இருப்பதால் இதற்கு 'ஊலாங்' எனப் பெயர் வந்திருக்கலாம் என்று சொல்கிறார்கள். நமக்கான சேதி என்னவென்றால், மூன்று வகைத் தேநீரையுமே தொடர்ச்சியாக அருந்துவது டைப் 2 சர்க்கரைநோய்க்கு (*type 2 diabetes*) நல்லது என்பதுதான்.

'ஊலாங்கில் அப்படி ஒண்ணும் மருத்துவப் பயன் இல்லை' என்ற ஆய்வுக்கூச்சல் ஒரு பக்கம் இருந்தாலும், இதுவரை வெளியான 519 ஆய்வுக்கட்டுரைகளை *meta analysis* எனும் புள்ளியியல் ஆய்வுமூலம் அலசி ஆராய்ந்து, 'சார், டெய்லி 3 கப் டீ சாப்பிடுவது,



காட்டுச்சீரகம்

சர்க்கரைநோய்க் கட்டுப்பாட்டில் கொஞ்சம் உதவும்' என முடிவாய்ச் சொல்கிறார்கள். ஆனால், நம் ஊரில் டீ போடுவதில் கொஞ்சம் சிக்கல் இருக்கிறது. சுவையான, சத்தான, மருத்துவக் குணம் பாழாகாத தேநீர் வேண்டுமென்றால், கொதிக்கும் நீரில் தேயிலையைப் போட்டு, 60 விநாடிகள் முதல் 2 நிமிடம் வரை மட்டும் மூடிபோட்டு, கொதிக்கவிட்டு இறக்கி, அதை வடிகட்டி இளஞ்சூட்டில் பருகுவதுதான் சிறந்தது. பால் பாயசம் மாதிரி பாலோடு சேர்த்துக் காய்ச்சுவது, அல்லது டீ டிகாக்ஷனில் பாலூற்றி ருசிப்பது எல்லாம் மணம் தரலாம், மருத்துவப் பலன் தராது.

சீனர்களுக்கு இணையாக, ஏராளமான மூலிகை

TabletBarn.com

பானங்கள் பருகும் பழக்கம் நம்மிடமும் நெடுங்காலமாக இருந்துவந்தது. ஆனால் 1700களுக்குப் பிறகு, நாம் அத்தனையையும் தொலைத்ததில், தொலைந்துபோயின நம் நலவாழ்வும் நல்வணிகமும். சித்த, ஆயுர்வேத மருந்துகளில் சொல்லப்பட்ட பல கஷாயங்களில் மருத்துவ குணங்களுடன், உடலுக்கு வலுவேற்றி உற்சாகமும் அளிக்கக்கூடிய மூலிகைத் தேநீர்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. *Functional foods* அல்லது *Functional beverage* என இன்று அடையாளப்படுத்தப்படும் சில மூலிகைத் தேநீர்கள், உங்கள் வீட்டு அடுப்பங்கரையில் மணப்பது ஆரோக்கியம் தரும் பழக்கம்.

திங்களன்று சுக்கு - மல்லி காபி, செவ்வாயில் செம்பருத்தி - தேயிலைக் கலவையான தேநீர், புதனன்று கரிசாலை - முசுமுசுக்கைக் கஷாயம், வியாழன் இஞ்சி, எலுமிச்சை, பூண்டு, காடி, தேன் ஐந்தின் கலவையும் கொண்ட பஞ்ச ஔஷதி பானம், வெள்ளிக்கிழமை நெல்லிக்காய்த் தேநீர், சனிக்கிழமை லவங்கப்பட்டை, ஏலம், இஞ்சி போட்ட தேநீர், ஞாயிறன்று திரிகடுகம் காபி எனப்படும் சுக்கு - மிளகு - திப்பிலி - பனக்கருப்பட்டி கலந்த பானம் எனப் பருகிப்பாருங்கள். அத்தனையும் ஜீரண உறுப்புகளிலிருந்து இதயம்வரை பாதுகாக்கும் மருந்தாக அமையும்; இதில் சேரும் சிறு சிறு மணமூட்டிகளால் பல புற்றுகளைத் தடுக்கும் ஆற்றலையும் பெற முடியும். மேலே சொன்ன எவையும் ஆலையில் தயாரிக்கும் மருத்துவ ரசாயனங்கள் இல்லை. பெரும்பாலானவை அன்றாடம் நாம் ரசத்துக்கோ சாம்பாருக்கோ சேர்க்கும் விஷயங்களே. இவற்றைப் பருக அச்சம் தேவையில்லை. தொற்றாத வாழ்வியல் நோய்க்கூட்டங்களின் பிடியிலுள்ளோர் வழக்கமான டிகிரி காபி, பால் டீயிலிருந்து இப்படியான மூலிகைத் தேநீருக்கு மாறுவது நல்வாழ்வு நடைக்கு நாம் எடுத்துவைக்கும் முதல் அடி.

சமீபமாய் கருஞ்சீரகத்துக்கு நம் தமிழ் உலகில் பெரிய வரவேற்பு வந்துள்ளது. ஆனால், எது கருஞ்சீரகம் என்பதில் சிலருக்குக் குழப்பம். *Black Cummins* என ஆங்கிலத்தில் சொல்வதால், இதற்குக் 'கருஞ்சீரகம்' எனப் பெயர் வைத்துவிட்டனர். நாம் அன்றாடம் பயன்படுத்தும் சீரகத்துக்கும், அதன் குடும்பத்துக்கும், கருஞ்சீரகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. சிலர், கறுப்பு நிறமாய் உள்ள காட்டுச்சீரகத்தைக் கருஞ்சீரகம் எனத் தவறாக நினைத்துப் பயன்படுத்துகின்றனர். கருஞ்சீரகம் என்பது 'கலோஞ்சி' எனப் பெயர் கொண்ட அரபிலும் துருக்கியிலும் வட இந்தியாவிலும்



கருஞ்சீரகம்

### கருஞ்சீரகத்தை எப்படிச் சாப்பிடுவது?

கஷாயமாக்கிச் சாப்பிடுவதில் அவ்வளவாகப் பயனிருக்காது. அதில் உள்ள தைனோகுய்னோன் சத்து, ஒரு கீட்டோன் வகை வேதிப்பொருள். முழுமையாகக் கருஞ்சீரகத்தைப் பொடித்துச் சாப்பிடும்போது, அது வயிற்றுக்குள் போன பின்னர் கணைய, ஈரல் நொதிகளால் தேவையான அளவில் பிரித்தெடுத்துக் கொள்ளப்படும்; தண்ணீர் சேர்த்துக் கஷாயமாகக் காய்ச்சினால், மிகக் குறைந்த அளவிலேயே அந்தச் சத்து கிடைக்கும் என்கின்றன தற்போதைய ஆய்வுகள். உங்கள் குடும்ப மருத்துவர் ஆலோசனையின் கீழ், 2 - 3 கிராம் அளவு பொடி செய்து, வெந்தயத்துடனோ வேறு உணவுடனோ அப்படியே சாப்பிடுவது சிறப்பான மருத்துவப் பயனளிக்கலாம்.

TabletBarn.com




பிரபலமான மூலிகைப்பொருள். நம்மைவிட அரபு மக்கள் மிக அதிகமாகக் கருஞ்சீரகத்தைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தி வந்தனர். நமக்கு எப்படி நெல்லிக்கனியோ, அப்படி அரபுக்குக் கருஞ்சீரகம். 'மரணத்தைத் தவிர மற்ற அனைத்தையும் நீக்கும்' எனக் குரானில் உயர்த்திப் பேசப்பட்டுள்ளது கருஞ்சீரகம் எனும் இந்தக் கலோஞ்சி. இதுகுறித்து இப்போது நடைபெற்றுள்ள ஆய்வுகள், இது ஒரு மிகச் சிறந்த *Anti inflammatory* என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

கருஞ்சீரகத்தில் உள்ள *Thymoquinone* பலவகைப் புற்றுகளின் பாதிப்பைக் குறைப்பதில் எப்படி உதவுகிறது எனத் தொடர்ச்சியாக ஆய்வுகள் நடந்துகொண்டே இருக்கின்றன. அழற்சியைக் *(Inflammation)* குறைப்பதிலிருந்து, புற்றின் பரவலைக் குறைக்க எளிய *Cytotoxic* ஆகவும், புற்று வராது நம்மைக் காக்கும் உடலின் மிக முக்கியப் பணியான *Apoptosis* எனும், முறையான தன் பணியை முடித்த பின்னர் உடலே நடத்தும் செல் அழிவுப்பணி *(Programmed cell death)* வரை கருஞ்சீரகத்தின் இந்த தைமோகுய்னோன் பணியாற்றுவதை ஆராய்ந்து, வியந்து சொல்ல ஆரம்பித்திருக்கின்றனர்.

இன்னும் சர்க்கரைநோய், நுரையீரல் நோய்களுக்கும் இதன் பயன் பெரிதினும் பெரிது என்கின்றன பாரம்பர்ய மருத்துவங்களும் நவீன மருத்துவ ஆய்வுகளும். இன்னும் சில ஆண்டுகளில் இதிலிருந்து நுண்ணிய மூலக்கூறுகளைப் பிரித்தெடுத்து மில்லியன் டாலர் வணிகம் வரத்தான் போகின்றது. நாம் தைமோகுய்னோனைப் பிரித்தெடுத்து சாம்பார், ரசத்தில் ஊற்றிச் சாப்பிட வேண்டாம். 2 - 3 கிராம் கருஞ்சீரகப்பொடியை, அதன் எண்ணெயை உங்கள் குடும்ப மருத்துவரிடம் ஓர் ஆலோசனை பெற்றுவிட்டுச் சாப்பிடலாம்; அதில் எந்தப் பக்கவிளைவும் வரப்போவதில்லை. சிலருக்கு அலர்ஜி எனும் ஒவ்வாமை சருமத்தில் ஏற்படலாம்; வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளாமல் போகலாம் என ஆய்வுகள் சொல்வதால், இப்பிரச்னைகள் வரக்கூடியவர்களோ, வந்தாலோ மருத்துவரை ஆலோசிப்பது நல்லது.

'சார்! யூடியூபில பார்த்தேன்... கருஞ்சீரகம் நல்லதாமே! என் பையனுக்கு ஒண்ணரை வயசு ஆகுது. தினம் கருஞ்சீரகம் கொடுக்கலாமா... இப்பவே கொடுத்துவந்தா, பின்னாடி இந்த இன்னா நாற்பதெல்லாம் படிக்க வேண்டி வராதில்ல' என ஒரு முன்ஜாக்கிரதை முத்தம்மா தொலைபேசியில் பேசினார். இதுதான் இன்றைய சவாலான பிரச்னை. ஒரு பொருள் நல்லதென அறிய வந்தால், அது உங்கள் உடல்நிலைக்கு நல்லதா, உங்கள் வயதுக்கு ஏற்றதா, நீங்கள் சாப்பிடும் பிற மருந்துகளோடு பொருந்தி வேலை செய்யுமா, எந்த அளவு சாப்பிடலாம், எவ்வளவு காலம் சாப்பிடலாம், எப்படிச் சாப்பிடலாம்... இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் பெற வேண்டியது அவசியம். அதற்கு, சித்த, ஆயுர்வேதம், யுனானி என மரபு மருத்துவங்களை முறையாய்ப் படித்த, அனுபவமிக்க, அறத்தோடிருக்கும் மருத்துவர்களை ஆலோசித்து, அவர் பரிந்துரைக்கும் ஆலோசனைப்படி சாப்பிடுங்கள். 'எல்லாத்திலும் 100 கிராம் வாங்கி ஒரு கலக்கு கலக்கி' என ஆரம்பிப்பது பிரச்னையில் போய் முடியலாம்.

ஒடியல், புழுக்கொடியல் மாவு என இலங்கையில் அழகாய்க் கதைக்கப்படும் பனங்கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் மாவு, சர்க்கரை நோயில் பயனாகும் கிழங்கு மாவு. வழக்கமாய் பிற கிழங்குகள் எல்லாமே அதன் மாவுச்சத்து காரணமாக இனிப்பு நோய்க்குப் பயனாகாதபோது, பனங்கிழங்கு அதிலுள்ள அதிகபட்ச நார்த் தன்மையால் சற்று லோ கிளைசெமிக் தன்மையைப் பெறுகிறது. ஆதலால் அவ்வப்போது கொஞ்சமாக இந்தப் பனங் கிழங்கைச் சாப்பிடலாம். நிறைய சாப்பிட்டால் செரிமானம் சிரமமாகும். இந்த மாவில் ஒடியல் புட்டு, அதில் மீன் சேர்த்துச் செய்யும் நான் வெஜ் மெனு, மரக்கறியாய் ஒடியல் புட்டு எனப் பல ரெசிப்பிகளை வைத்துள்ளார்கள் நம் ஈழச் சகோதரிகள்.

தொற்றா வாழ்வியல் நோய்களைப் பொறுத்த மட்டில், மருந்துகளைத் தாண்டிய கரிசனங்கள் மட்டுமே நோயிலிருந்து முழுமையாய் ஒருவரை விலக்கிவைக்கின்றது. உடற்பயிற்சியும், நடையும், யோகப்பயிற்சியும், கூடவே மூலிகைத் தேநீர் போன்ற சின்னச் சின்ன உணவு அக்கறைகளும் தினசரி அத்தியாவசியத் தேவையாகிவிட்ட நாள்களில் நாம் இருக்கிறோம்.

**- இனியவை தொடரும்...**

**ஜோக்ஸ்** ஓவியங்கள்: கண்ணா



"போருக்குப் போன மன்னர் ஏன் திரும்பி வர்றாரு..?"

"ஆன்லைன்ல ஆர்டர் பண்ணுன சாப்பாடு அரண்மனைக்கு வந்திருக்குன்னு ஸ்விக்கி டெலிவரி பாய், மன்னருக்கு போன் பண்ணியிருக்கான்... அதான்."

*- மலர்சூர்யா*



"சாதாரண ஜுரத்துக்கு எதுக்கு டாக்டர் கையை எக்ஸ் ரே எடுக்கச் சொல்றீங்க...?"

"ஊசி இறங்கும் அளவுக்கு சதை அமைப்பு இருக்கான்னு பார்க்க வேணாமா..."

*- அதிரை யூசுப்*



"உங்க பேங்குல எந்த அக்கவுன்ட்லே சார் அதிகமான டெபாசிட் இருக்கு..?"

"ஏன் சார் கேட்குறீங்க...?"

"என்னோட அக்கவுன்ட்டையும் அப்படியே அந்த அக்கவுன்ட்டோட இணைச்சிடத்தான்..!"

*- பழ.அசோக்குமார்*




"ஆபரேஷன் முடிஞ்சுடுச்சுன்னு எங்களுக்கு எப்படித் தெரியும் டாக்டர்?"

"நான் கண்ணாடியைக் கழட்டி சாரி சொல்லுவேன்!"

*- அஜித்*



TabletBarn.com

■ யூடியூப் சென்சேஷன்கள் எல்லோரும் தன் படத்தில் இருக்கவேண்டும் என்பது விஜய்யின் விருப்பமாம். அதற்காக லோகேஷ் கனகராஜ் இயக்கும் விஜய் படத்தில் 'பிளாக் ஷீப்', 'நக்கலைட்ஸ்' உள்ளிட்ட பிரபல யூடியூப் சேனல்களின் ஸ்டார்களை எல்லாம் நடிக்க வைக்க ஆடிஷன் நடந்துகொண்டிருக்கிறது. நடிச்சிட்டும் நக்கல் பண்ணுவாங்களே!

■ 'அசுரன்' முடித்த கையோடு கார்த்திக் சுப்பராஜ் படத்தில் நடிக்க லண்டன் பறந்துவிட்டார் தனுஷ். லைகா தயாரிக்கும் இந்தப்படத்தில் 'கேம் ஆஃப் த்ரோன்ஸ்' புகழ் ஜேம்ஸ் காஸ்மோ நடிக்கவிருக்கிறார். தனுஷுக்கு ஜோடியாக கடவுளின் தேசத்தில் இருந்து ஐஸ்வர்யா லஷ்மி நடிக்கிறார். படத்தின் கதை பல நாடுகளில் நடப்பதால் 'உலகம் சுற்றும் வாலிபன்' எனப் படத்துக்குத் தலைப்பு வைக்க யோசனையாம்!. அவரு ஏற்கெனவே இன்டர்நேஷனல் ஸ்டாராச்சே!


TabletBarn.com

# இன்பாக்ஸ்



■ இங்கிலாந்து அரச குடும்பத்தைப் பற்றி ஒரு துண்டுச் செய்தி வந்தால்கூட வைரல்தான். இதில் செம க்யூட்டாக ஒரு போட்டோ கிடைத்தால் விடுவார்களா என்ன? இங்கிலாந்து இளவரசர் வில்லியமும் அவர் மனைவி கேட் மிடில்டன்னும் தங்கள் மகள் சார்லெட்டை முதல்நாள் பள்ளிக்கு அழைத்துவரும் போட்டோ இந்த வாரத்தின் வைரல்! மழலை மாறாத சிரிப்போடு கேமராக்களைப் பார்த்து சார்லெட் கையசைக்கும் அந்த படங்கள் கொள்ளை அழகு!

■ மும்பையில் ஆரம்பித்து ஜெய்ப்பூருக்குப் பறந்த ‘தர்பார்’ டீம் மீண்டும் மும்பையில் தீவிரப் படப்பிடிப்பில் இருக்கிறது. ரஜினி, நயன்தாரா, ஏ.ஆர்.முருகதாஸ், சந்தோஷ் சிவன், அனிருத் என ஸ்டார்களின் சம்பளமே பல கோடிகளைத் தாண்டுவதால் படத்தின் பட்ஜெட்டும் 250 கோடிக்கு எகிறியிருக்கிறதாம். படத்தின் பிசினஸோ 500 கோடிகளைத் தாண்டும் என்கிற எதிர்பார்ப்பில் இருக்கிறதாம் லைகா! மார்க்கெட்டிங் மாஸ்டர்ஸ்!

## இன்பாக்ஸ்

■ ராஷ்மிகா மந்தனாதான் இப்போது அகில இந்திய ஹீரோயின்! வரிசையாக விஜய் தேவரகொண்டாவுடன் நடித்தவர் இப்போது மகேஷ் பாபுவுடன் ஒரு படம், அல்லு அர்ஜுனுடன் ஒரு படம் என செம பிஸி. தெலுங்குக்கு அடுத்தபடியாக தமிழுக்கும் வருகிறார். 'ரெமோ' இயக்குநர் பாக்யராஜ் கண்ணன் இயக்கி, கார்த்தி நடிக்கும் படத்தின் ஹீரோயின் ராஷ்மிகாதான். டோலிவுட், கோலிவுட்டைத் தொடர்ந்து பாலிவுட்டுக்கும் பறக்கவிருக்கிறார். தெலுங்கில் வெளிவந்த 'ஜெர்ஸி' படத்தின் இந்தி ரீ-மேக்கில் ஷாகித் கபூருக்கு ஜோடியாக நடிக்கிறார் ராஷ்மிகா! வெல்கம் பொண்ணே!

■ அதிரடிப் பேட்டிகளால் கவனம் ஈர்க்கும் கங்கனா ரனாவத் மீண்டும் ஒரு பரபர பேட்டி தட்டியிருக்கிறார். "பாலிவுட் பிரபலங்களுக்குச் சுற்றுச்சூழல் பற்றியோ, மக்களின் பிரச்னைகள் பற்றியோ எந்தக் கவலையும் இல்லை" எனப் பொங்கியிருக்கிறார் கங்கனா. "மும்பை நகரின் மரங்கள் அடர்ந்த பகுதியான ஆரே காலனியில் 2,600 மரங்களை வெட்டிச் சாய்க்க மாநகராட்சி நிர்வாகம் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் இதுகுறித்து எந்த பாலிவுட் நட்சத்திரமும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை" என ஆதங்கப்பட்டிருக்கிறார் கங்கனா. மும்பை நிர்வாகமே... நியாயமாரே!



படம்: கிரண் சா

TabletBarn.com



இன்பாக்ஸ்

■ பாகிஸ்தான் அணி ஒவ்வொரு முறையும் பேட்டிங்கில் சொதப்பும்போது தனியாளாகக் களத்தில் நின்று டீமை கரைசேர்க்கப் போராடுவார் மிஸ்பா உல் ஹக். இப்போது களத்திற்கு வெளியேயும் அணியைக் காப்பாற்றும் பொறுப்பு அவரிடத்தில்! பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராகவும் தேர்வுக்குழுத் தலைவராகவும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார். 'சம்பளமும் இதுவரை இல்லாத அளவிற்கு...' எனப் புருவம் உயர்த்துகிறார்கள் முன்னாள் வீரர்கள். டீம் பழையபடி ஆனா சரி!

■ கிரிக்கெட் உலகம் மொத்தமும் ஸ்மித்தின் ஆட்டத்தில் திளைத்திருக்க, ஒற்றை பௌன்சரில் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார் ஆர்ச்சர். மூளைக் கலக்கத்தில் இருந்து ஸ்மித் மீண்டு வந்து. "ஆர்ச்சரின் பந்துவீச்சில் நான் தடுமாறுவதாகச் சொல்கிறார்கள். பிட்ச்சில் சில பள்ளங்கள் இருந்ததால் அவர் பந்து என்னைத் தாக்கியது, அவ்வளவுதான்... ஆனால் ஆர்ச்சர் என்னை ஆட்டமிழக்கச் செய்யவில்லை" என்றார். நான்காவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில், ஸ்மித் களத்தில் இருக்கும்வரை 23 ஓவர்கள் பந்து வீசினார் ஆர்ச்சர். ஆனால், ஸ்மித்தை அசைக்க முடியவில்லை. டபுள் செஞ்சுரி அடித்து 'நான்தான் உலகின் நம்பர் 1 பேட்ஸ்மேன்' எனப் புரியவைத்தார். டெஸ்ட்டின் ராஜா!

■ 'ஐ யம் லெஜண்ட்', 'ஐ ரோபோ' என சயின்ஸ் ஃபிக்‌ஷன்களில் அசத்திய வில் ஸ்மித் மீண்டும் ஒரு சயின்ஸ் ஃபிக்‌ஷன் படத்தோடு வருகிறார். 'பிரில்லியன்ஸ்' என்ற பெயரில் மார்க்கஸ் எழுதிய நாவலைத் தழுவி இந்தப் படம் எடுக்கப்படவிருக்கிறது. சூப்பர் பவர் கொண்ட போலீஸாக இந்தப் படத்தில் வில் ஸ்மித் நடிக்கவிருக்கிறார். வில் ஸ்மித்தின் முந்தைய இரண்டு சயின்ஸ் ஃபிக்‌ஷன் படங்களுக்கும் திரைக்கதை எழுதிய அகீவா கோல்ட்ஸ்மேன்தான் இந்தப் படத்துக்கும் திரைக்கதை ஆசிரியர். வீ ஆர் வெயிட்டிங்!

TabletBarn.com

குு.ஆனந்தராஜ்

# “எனக்கு அஞ்சு பரிமாணங்கள்!”



மஞ்சு வாரியர்

TabletBarn.com




"ரசிகர்களின் கூச்சல், இருட்டு, கூட்டம்... இதெல்லாம் பார்த்தாலே பயம். அதனாலேயே சின்ன வயசுல தியேட்டருக்குப் போக வேண்டாம்னு அழுது அடம்பிடிப்பேன். ஃப்ளாஷ் வெளிச்சத்துக்கு பயந்து போட்டோ எடுத்துக்கவும் தயங்குவேன். ஆனால், வாரா வாரம் குடும்பத்துடன் தியேட்டருக்குக் கூட்டிட்டுப் போகப்போக, பயமும் படிப்படியாய் விலகிப்போச்சு. பிறகு, சினிமாவே என் அடையாளமாகவும் வாழ்க்கையாகவும் ஆனதெல்லாம் எனக்கே ஆச்சர்யமான சந்தோஷம்தான்" - அழகுத் தமிழில் பேசும் மஞ்சு வாரியாரின் முகத்தில் இடைவிடாத புன்னகை, கூடுதல் சிறப்பு. மலையாள முன்னணி நடிகையான மஞ்சு வாரியர், 'அசுரன்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகிறார்.

**"நாகர்கோவிலில் வளர்ந்த உங்க இளமைக்காலம் பற்றி..."**

"என் பூர்வீகம் கேரளா என்றாலும், நான் பிறந்து வளர்ந்தது நாகர்கோவிலில்தான். அந்தக் காலகட்டங்கள் பசுமையானது. தமிழில்தான் முதலில் எழுதப் படிக்கக் கத்துக்கிட்டேன். ஐந்தாம் வகுப்பு படிக்கிறப்போ, கேரளாவில் குடியேறிட்டோம். ஆனால், இப்போதுவரை வீட்டில் தமிழிலும் பேசுவோம். வருஷத்தில் குறைந்தபட்சம் ஓரிரு முறையாவது நாகர்கோவிலில் நாங்க வாழ்ந்த ஊருக்கும், வசிச்ச வாடகை வீட்டுக்கும் போவோம். தமிழ்ப் பெண் என்கிற பெருமை எனக்கு உண்டு!"

**"மலையாள சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமான காலகட்டத்தைப் பற்றிச் சொல்லுங்கள்..."**

"சின்ன வயசுல இருந்து என் வாழ்க்கையில எந்த இலக்கும் நான் வெச்சுக்கிட்டதில்லை. திட்டமிட்டு எந்த விஷயத்தையும் செய்ய மாட்டேன். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நடக்கிற விஷயங்கள் எனக்குப் பிடிச்சிருந்தா, அதை ஏத்துக்குவேன். அப்படித்தான் ப்ளஸ் ஒன் படிக்கும்போது ஹீரோயினா அறிமுகமானேன். எங்க குடும்பத்தில் திரைத்துறைக்கு வந்த முதல் ஆள் நான்தான். முன்னணி நடிகையாகணும்னு நான் நினைக்கவேயில்லை. ஆனா, நல்ல படங்கள்ல நடிச்சது என் அதிர்ஷ்டம். ஓய்வில்லாமல் நிறைய படங்கள்ல நடிச்சேன். அந்த மூன்றரை வருஷத்துல, வெற்றிகளும், ரசிகர்களின் அன்பும் அதிகம் கிடைச்சுது. பிறகு குடும்ப வாழ்க்கை காரணமா, நீண்ட காலமா நடிக்காம இருந்தேன்."

**"இத்தனை வருஷமா தமிழில் நடிக்காதது ஏன்... இப்போது 'அசுரன்' படத்துல நடிக்க ஒப்புக்கொள்ளக் காரணம் என்ன?"**

"நான் நடிக்க ஆரம்பிச்ச காலத்திலிருந்து இப்போதுவரை எனக்கு நிறைய தமிழ்ப் பட வாய்ப்புகள் வந்ததுண்டு. கதை கேட்பேன். ஆனா, கடைசி நேரத்துல ஏதாவதொரு காரணத்தால் என்னால் நடிக்க முடியாமல் போயிடும். ஆனாலும், தமிழ்ப் படங்களைப் பார்த்து ரசிப்பேன். தனுஷ் என் நீண்டகால நண்பர். அவருடனும் சில

TabletBarn.com

படங்களில் என்னால நடிக்க முடியாமப்போச்சு. 'அசுரன்' படத்தின் கதை எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்துச்சு. இம்முறை எல்லா அம்சங்களும் கூடிவந்ததால், இந்தப் படத்துல நடிக்க ஒப்புக்கிட்டேன். இத்தனை வருஷமா தமிழில் நடிக்காமப் போனதுக்கு நியாயம் சேர்க்கிற மாதிரி, 'அசுரன்' படத்தில் பவர்ஃபுல்லான ரோலில் நடிச்சிருக்கேன்."

**"உங்க கேரக்டரில் என்ன ஸ்பெஷல்?"**

"இளமைக் காலத்துல இருந்து நடுத்தர வயது வரை அஞ்சு விதமான பரிமாணங்கள்ல தனுஷும் நானும் நடிச்சிருக்கோம். அவருடைய மனைவி பச்சையம்மா ரோல்ல நடிச்சிருக்கேன். குடும்ப உறவுகளுக்குள் ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் பிரச்னைகளை மையப்படுத்தித்தான் படத்தின் கதை நகரும். அதில், நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பக்கபலமா



இருக்கிற காட்சிகள் நிச்சயம் மக்களைக் கவரும்.

குறிப்பா, வெற்றி மாறன், தனுஷ் இருவரின் திறமையை நேரில் பார்த்து வியந்தேன். அவங்ககிட்ட நிறைய நல்ல விஷயங்களைக் கத்துக்கிட்டேன். தனுஷுடனான நட்பு இப்போ இன்னும் பலமாகியிருக்கு. படத்தில் நடிக்க ஆரம்பிச்ச முதல் ஒருவாரம் சின்ன தடுமாற்றம் இருந்துச்சு. பிறகு, வேற்றுமொழிப் படத்துல நடிக்கிற உணர்வே எனக்கு ஏற்படலை. மலையாள சினிமாவில் குடும்பக் கதைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பாங்க. அதேபோல குடும்ப உறுப்பினர்கள்போல நிறைய கலைஞர்கள் ஒண்ணா இணைஞ்சு நடிச்சது மறக்க முடியாத அனுபவம். ஷூட்டிங் முடியிற தருணம், பிரியப்போற உணர்வில் எல்லோருக்கும் வருத்தம் இருந்துச்சு. எந்தச் சிரமமும் இல்லாம, என்னை அன்போடு கவனிச்சுக்கிட்ட மொத்தப் படக்குழுவுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கேன். தமிழ் சினிமாவில் தொடர்ந்து நடிக்கும் ஆர்வம் இருக்கு."

**"தயாரிப்பாளர் தாணு, உங்களுக்கான மீதமுள்ள சம்பளப் பணத்தைக் கொடுக்க முன்வந்தும் நீங்க வாங்க மறுத்தது ஏன்?"**

(சிரிக்கிறார்) "நம்பிக்கையான தயாரிப்பு நிறுவனம் என்பதால், நிச்சயம் சம்பளம் கிடைச்சுடும்னு நம்பினேன். இந்தப் படம் எனக்கு ரொம்ப ஸ்பெஷல். அதனால, என் சம்பளப்பணத்தைப் பத்திப் பெருசா கவலைப்படலை. பொறுமையா வாங்கிக்கலாம்னு தள்ளிப்போட்டுக்கிட்டே இருந்தேன். செக் கொடுத்தாலும் அது வங்கியில போடாமல் போக வாய்ப்பிருக்கலாம்னு நினைச்ச தாணு சார், டி.டி-ஆக எனக்கான மீதச் சம்பளப் பணத்தை 'அசுரன்' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் தனுஷ் கையால் கொடுக்கச் செய்தார். சினிமாத்துறை ஆரோக்கியமா போறதுக்கு, இந்த மாதிரியான தயாரிப்பாளர்கள் இருக்கிறதும் முக்கிய காரணம்."

**"15 வருட இடைவெளிக்குப் பிறகு ரீ-என்ட்ரி கொடுத்தப்போ உங்க மனநிலை எப்படி இருந்துச்சு? 'ஹவ் ஓல்ட் ஆர் யூ' முதல் 'அசுரன்' வரை இரண்டாவது இன்னிங்ஸில் கதை நாயகிக்கு முக்கியத்துவமுள்ள கேரக்டர்களில்தான் அதிகம் நடிக்கிறீங்க. இந்த நேர்த்தியான கதைத் தேர்வு திட்டமிட்டு நடப்பதா அல்லது இயல்பாக அமைவதா?"**

"என் முடிவுப்படிதான் சினிமாவிலிருந்து பிரேக் எடுத்தேன்; மீண்டும் நடிக்க வந்தேன். இடைவெளிவிட்டு நடிக்க வந்தப்போ, எனக்கு எந்த வித்தியாச உணர்வும் ஏற்படலை. சொல்லப்போனா, சினிமாதான் எனக்கு நம்பிக்கையுடன் கைகொடுத்துச்சு. இப்போதும் என்னை நம்பி இயக்குநர்கள் பலரும் நல்ல படைப்புகளை உருவாக்குறாங்க. அவங்க எதிர்பார்ப்புப்படி நடிக்கிறேன். முதல் இன்னிங்ஸைவிட, இப்போதான் கதைத்தேர்வு மற்றும் நடிப்பில் அதிக கவனம் செலுத்தறேன். இதுக்கு, அனுபவம் கூடியிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்."

TabletBarn.com

## ஜோக்ஸ் ஓவியங்கள்: கண்ணா



"வரலாற்றில் என் பெயர் இடம்பெறும்போது..."

"வரலாற்றைப் படிக்கிறதையே நிப்பாட்டிடுவாங்க தலைவரே!"

- அஜித்



"சர்வர், அந்த ஆள்கிட்ட என்ன சொன்னே, சாப்பிடாமல் போறாரே?"

"சாப்பாடு எப்படி இருக்கும்னு கேட்டார். உங்க மனைவி கையால சமைச்ச மாதிரி இருக்கும்னு சொன்னேன். உடனே எழுந்து போயிட்டார் முதலாளி!"

- எஸ்.முகம்மது யூசுப்



"எதிர்க்கட்சிகளுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன், நாட்டின் பொருளாதாரத்தையே ஒழித்த எங்கள் தலைவர், பிளாஸ்டிக்கையா ஒழிக்க மாட்டார்?"

- கி.ரவிக்குமார்



"உங்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது மன்னா!"

"எப்படிச் சொல்கிறீர் அமைச்சரே!"

"உங்கள் ஒருவர் ஓட்டத்தால், ஒரு பெரும் படையே பாதிப்பில்லாமல் இருக்கிறதே!"

- கி.ரவிக்குமார்

TabletBarn.com

# டெக்னோ வார்னிங்!

***The** difference between technology and slavery is that slaves are fully aware that they are not free. ~ Nassim Nicholas Taleb*

வெவ்வேறு கதைகள், ஒரு மையப்புள்ளி. இப்படி வெளியாகும் குறும்படங்களை ஆந்தாலஜி எனலாம். அந்த வரிசையில் தமிழில் டெக்னாலஜி குற்றங்களை வைத்து வெளியாகியிருக்கிறது 'ஃபிங்கர்டிப்' *Fingertip.* ஆசை, ஆத்திரம் , துரோகம், காமம், பழிவாங்குதல் என கிளைக்கதைகள். காயத்ரி, அக்ஷரா ஹாசன், சுனைனா, மதுசூதனன், அஷ்வின் காக்காமனு என ஒவ்வொருவரும் ஒவ்வொரு டெக்னோ குற்றங்களால் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் அதில் ஆதாயம் அடைகிறார்கள். சிலர் இருப்பதை இழக்கிறார்கள். சிலர் சிலவற்றை இழந்து சிலவற்றைப் பெறுகிறார்கள். ஒரு கதையும் இன்னொரு கதையும் சிலந்தி வலைபோல் இணைந்து பின்னப்படுகின்றன. இறுதியில் யார் எந்தக் காயத்தோடு வாழப்பழகுகிறார்கள் எனச் சொல்கிறது 'ஃபிங்கர்டிப்'. சின்னச் சின்ன தவறுகளின் விலை எப்போதும் பெரியது என்னும் நீதியினை மீண்டும் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

உறுதிப்படுத்தாமல் நாம் வாட்ஸப்பில் பகிரும் ஒரு செய்திக்கு எப்போதும் உயிர் இருக்கும் என்பதைச் சொல்லி முகத்தில் அறைகிறது மதுசூதனனின் கதை. சோஷியல் மீடியாவில் தங்களை இன்ஃப்ளூயன்சர்களாக காட்டிக்கொள்பவர்களின் மறுபக்கத்தை பேசுகிறது சுனைனாவின் கதை. மொபைலை லாக் செய்யாமல் இருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதைச் சொல்லி சிறையில் தள்ளுகிறது அக்ஷரா ஹாசனின் துரோகக் கதை. முன்னரே சற்று யூகிக்க முடிந்தாலும், காயத்ரியின் கள்ளச்சிரிப்புக்குப் பின் வரும் அந்த ட்விஸ்ட் ஷாக்! பெரும்பாலும் நாம் பெரிய திரையில் பார்த்த முகங்களே தொடர் முழுக்க வருவதால், வெப் சீரிஸ் என்பதைக் கடந்து ஒரு திரைப்பட உணர்வைக் கொடுக்கிறது.

மொபைலை அன்லாக் மோடில் வைத்துவிட்டுச் செல்வது, பொய்யாகச் செய்தி பரப்புவது, ஹேக்கிங், அதீத சமூகவலைதள







TabletBarn.com

சிறுகதை: பரிசல் கிருஷ்ணா | ஓவியங்கள்: ஸ்யாம்





தனக்கு வந்திருப்பது காதலா பைத்தியமா என்று தாராவுக்கு ஐயமாக இருந்தது. இதில் எந்தக் கிண்டலும் இல்லை. நிஜமாகவே அவளுக்குக் காதல் என்ற உணர்வு பற்றி ஒன்றுமே தெரியாது. அதனால்தான், இப்போது செய்வது, தனக்குத் தோன்றுவது எல்லாம் பைத்தியக்காரத்தனம் என்று உணர்ந்தாள். ஆனால், அதை யாரிடம் எப்படி உறுதிப்படுத்துவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

இப்போது 23 வயதைத் தொட்டிருக்கும் தாரா இரண்டாவது படித்துக்கொண்டிருந்தபோது நடந்தது இது. பிறந்ததிலிருந்தே இந்த ஊர்- உடுமலைப்பேட்டை - தான். பள்ளிவிட்டு வீட்டுக்கு வரும்போது, அவர்கள் வீடு இருந்த காம்பவுண்டில் ஒரு ஜோடி காதல் திருமணம் செய்துகொண்டு ஓடிப்போய்விட, அந்த அங்கிளும் ஆன்ட்டியும் அழுதபடி வீட்டுமுன் அமர்ந்திருந்தனர். சிறு கூட்டம் வேறு இருந்தது.



TabletBarn.com



TabletBarn.com



“லவ்மேரேஜ் பண்ணி ஓடிப்போய்ட்டாங்க” என்று அம்மா பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு லவ் என்றால் ஆகாது என்ற எண்ணத்திற்கு வந்திருந்தாள். ஆனால், தாராவைப் பொறுத்தவரை, காதல் ஓகேயான விஷயம். லவ்தான் ஆகாது என நினைத்துக்கொண்டிருந்தாள். ‘காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கி…” என்றெல்லாம் சிவபக்தரான தன் அப்பா பாடக்கேட்டிருக்கிறாள். அதன்பின் ஏழாவது படிக்கும்போது வகுப்புத் தோழி அருணா, தன் காதலைப்பற்றி தாராவிடம் பகிர்ந்துகொண்டாள். அதுவரை சினிமாப் பாடல்கள், சில செய்யுள்கள் மூலம்தான் அந்தச் சொல் தாராவுக்குப் பழக்கம்.

அருணாவும் தாராவும் இந்தி டியூஷன் போய்க்கொண்டிருந்தனர். அங்கே வந்துகொண்டிருந்த ஒரு பையனை வர்ணித்துவிட்டு, “அவன் மேல லவ் வருதுடி” என்று சொன்னாள் அருணா. “ச்சே… காதல் வரைக்கும் ஓகேடி. லவ்வெல்லாம் பண்ணினா பெரிய பிரச்னை ஆகும்டி” என்றாள் தாரா. அப்போது அருணா சிரித்தது இன்னும் தாராவுக்கு நினைவிருக்கிறது. “லூசு லூசு… ரெண்டும் ஒண்ணுதாண்டி லூசு” என்றாள் அருணா. ‘இல்லவே இல்லை, காதல் வேறு லவ் வேறு’ என்று கொஞ்சநேரம் வாதிட்டாள் தாரா.

கடைசியில் அருணா, தன் வீட்டில் வைத்திருந்த நீலவண்ணத்தில் பைண்ட் செய்யப்பட்டிருந்த கிரேட் லிஃப்கோ டிக்‌ஷனரியைக் கொண்டு வந்து காட்டினாள். அதில் *Love* = அன்பு, காதல், ஆசை, விருப்பம் என்றெல்லாம் போட்டிருக்க, இவ்வளோ பெரிய

மயக்கம் வரவில்லை என்றாலும் கண்களைத் திறக்க பயமாய் இருந்தது தாராவுக்கு. சுற்றிலும் குரல்கள்.

TabletRain.com

பைண்ட் செய்த புத்தகத்தில் இருப்பது தப்பாக இருக்காது என்ற முடிவுக்கு வந்து ஒப்புக்கொண்டாள். ஆனாலும் அருணாவுக்கு வந்த ஃபீல் எப்படி இருக்கிறது என்று இவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

“அது லவ்வுன்னு எப்படிச் சொல்ற?” எனக் கேட்டாள் தாரா.

“அது ஒரு மாதிரி ஃபீல்-டி. சொன்னாப் புரியாது. உனக்கு வந்தாத்தான் புரியும்” என்றாள் அருணா. போடி என விட்டுவிட்டாலும் அந்த ஃபீல் எப்படி இருக்கும் என்று தெரிந்துகொள்ளும் ஆவல் லேசாக இருந்தது.

தாராவுக்கு ஒரு அண்ணன், தருண். தாராவைவிட 7 வருடம் மூத்தவன். அந்த வயது வித்தியாசத்தினாலேயே தருண் மேல் தாராவுக்குக் கொஞ்சம் பயம். அவனும் கொஞ்சம் முரடன். சச்சின், ஏ.ஆர். ரஹ்மான் என்று அவன் உலகம் வேறாக இருந்தது. தாராவுக்கு சினிமா, பாட்டு, விளையாட்டு இதிலெல்லாம் பெரிய நாட்டம் இருக்கவில்லை. எப்போதும் படித்துக் கொண்டிருப்பாள். தருண் எப்போதும் ஒருவித முறைப்புடனேயேதான் வீட்டில் உலவுவான். தருண் ப்ளஸ் ஒன் படித்துக்கொண்டிருக்கும்போது அவனின் உற்ற நண்பன் ஒருத்தன் லவ் செய்ய ஆரம்பித்துவிட்டான் என்று அவனை வீட்டுக்குள்ளேயே விடவில்லை தருண். “ப்ளஸ் ஒன்னுல என்ன லவ் வேண்டிக்கெடக்கு? அவங்க வீட்டுக்குப் போனா அவங்கப்பா என்னைத் தப்பா நினைக்க மாட்டாங்களா? அதனால அவன் ஃபிரெண்ட்ஷிப்பே வேணாம்னுட்டேன்மா” என்று ஒரு நாள் அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்ததை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள் தாரா. அப்போது அம்மாவே “ரொம்பப் பண்ணிக்கறடா நீ” என்று திட்டினாள்.

எப்போதும் படிப்பு படிப்பு என்றிருந்தாள் என்பதால், தாரா ஸ்கூல் ஃபர்ஸ்ட், ஸ்டேட் ஃபர்ஸ்ட் ரகமெல்லாம் இல்லை; ஆவரேஜ் மாணவிதான். அதற்கே முக்கி முக்கிப் படிக்க வேண்டியதாக இருக்கிறதே என்பதால்தான் வேறு எதிலும் அவளுக்கு நாட்டமிருக்கவில்லை. தாரா பத்தாவது படிக்கும்போது, அவளின் பள்ளி வழியாக தினமும் வரும் ஒரு பையன் பள்ளிவிடும்போது குறுக்கும் நெடுக்குமாய் நடப்பான். ஒருநாள் அவன், கையில் ஒரு கார்டை எடுத்துக்கொண்டு வந்தான். அவன் அருகில் வரவர இவளுக்கு அடிவயிறெல்லாம் கலங்கியது. அவசர அவசரமாக ரோட்டை க்ராஸ் செய்தாள். வேகவேகமாய்ப் போய்க்கொண்டிருந்த பைக்குகள். கார்களுக்கிடையே இவள் நடை தடுமாற ஒரு டூவீலர்க்காரன் இடித்து விழுந்து வாரிக்கொண்டாள்.

மயக்கம் வரவில்லை என்றாலும் கண்களைத் திறக்க பயமாய் இருந்தது தாராவுக்கு. சுற்றிலும் குரல்கள். கொஞ்சநேரத்தில் நடைபாதையோரம் அமரவைக்கப்பட்டாள். கண்களை முழுதும் திறந்ததும் அவனைத் தேடினாள். காணவில்லை. சிராய்ப்புக் காயங்கள். அந்த டூவீலர் ஓட்டி வந்தவனுக்குத்தான் அடி என்றார்கள். அவனை ஆம்புலன்ஸில் அழைத்துப்போனார்கள். “என்னா ஸ்பீடா வரானுக” என்று அவனைத் திட்ட வேறு செய்தார்கள். டூவீலர்க்காரன் பாவம், அவன்மேல தப்பில்லையே என்று தாராவுக்குத் தோன்றியது. அப்பாதான் வந்து அழைத்துப் போனார்.

இரண்டு நாள் கழித்துப் பள்ளிக்குப்போனாள். ஒருவாரம் கழித்து அந்த கார்டு கொண்டு வந்த பையன், இவளுடன் படிக்கும் இன்னொரு பெண்ணோடு நடப்பதைப் பார்த்தாள். இருவருடைய தோள்களும், கைகளும் உரசிக்கொண்டபடி நடந்துகொண்டிருந்தனர். அவளைப் பார்க்கத்தான் வந்திருக்கிறான்போல என்று நினைத்துக்கொண்டாள். “இவர்களுக்குள் இருப்பது லவ்வா?” என்று கேட்டுக்கொண்டாள். அப்போது மீண்டும் அவளுக்கு லவ்வென்றால் என்ன ஃபீல் என்ற கேள்வி எழுந்தது. அன்றைக்கு அவன் தன்னை நோக்கி வந்தபோது, தனக்கு அடிவயிற்றில் ஒரு மாற்றம் வந்ததே அதுதான் லவ்வா? ச்சேச்சே... அது பயம். கொஞ்சநாளுக்கு முன் வீட்டுக்கு அருகில் பாம்பு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டபோதும் அடிவயிற்றில் அப்படித்தானே இருந்தது. அதே ஃபீல்தான். அதை லவ் என்று சொல்ல முடியாது என்று எண்ணிக்கொண்டாள். ஒருவேளை லவ்வும் பயமும்

TabletBarn.com

ஒன்றுதானா. இரண்டுக்கும் சம்பந்தம் உண்டா என்றெல்லாம் கேள்வி எழுந்தது. ஆனால், அடுத்தநாள் எழுதவேண்டிய கெமிஸ்ட்ரி டெஸ்ட் அந்தச் சிந்தனையைத் தூக்கித் தூரப்போட்டது.

அதன்பிறகு ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ. 'படி படி... படிப்புதான் நமக்குப் பாதுகாப்பு... பொட்டப்புள்ள படிச்சாதான் பொழைக்க முடியும்...' அறிவுரைகள்... தேர்வுகள். அதன்பிறகு கல்லூரி. கல்லூரி இரண்டாம் ஆண்டுக்குப் பிறகு ஒன்றிரண்டு தோழிகளின் காதல் சமாசாரங்கள் இவள் காதுக்கு வந்து, அதைப் பற்றி அவர்கள் பேசக் கேட்டிருக்கிறாள். ஆனால் அதுவே, அவர்கள் "ஏய்... இன்னைக்கு அவன்கூட பைக்ல போறப்ப அப்பப்பப்பப்பா இருந்துச்சுடி. தியேட்டர்ல அவன் கையைப் பிடிச்சுட்டுப் படம் பாக்கற ஃபீல் இருக்கே..." என்று சொன்னால் எப்படி இருக்கும் என்று தாராவால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவள் கேட்டாலும் "ப்ச்... அதெல்லாம் சொன்னாப் புரியாதுடி. ஃபீல் பண்ணணும்" என்ற பதில்தான் வரும். அதே சமயம், ஒரு ஜோடிக்கு பிரேக் அப் ஆனபோது இவளால், அந்தத் தோழிக்கு ஆறுதல் சொல்ல முடிந்தது. அப்போது அவளின் மனச் சஞ்சலத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் இந்தக் காதல் என்கிற ஃபீல்தான்...

**க**ல்லூரிப் படிப்பு முடிந்து ஒரு தனியார் நிறுவனத்தில் அக்கவுன்ட்ஸ் பிரிவில் வேலை கிடைத்தது. அது கிச்சன் பொருள்கள் எல்லாம் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனம். ஃபேக்டரி கோவையில் இருந்தது. அதன் அலுவலகம், உடுமலைப்பேட்டையில் இருந்தது. வழக்கமாகவே இந்தக் கணக்குப் பிரிவில் இருப்பவர்கள் இன்னும் இருபது நிமிடத்தில் இந்த உலகம் அழிந்துவிடும் என்பதைத் தங்கள் முகத்தில் காட்டிக்கொண்டுதான் இருப்பார்கள். தாராவின் அதிகாரியாக இருப்பவர் "குட்மார்னிங்" என்பதையும் "வெளியபோடா ராஸ்கல்" என்பதையும் ஒரே மாடுலேஷனில் சொல்கிற ஆசாமி. மொத்தம் பதினான்கு பேர் அவளது பிரிவில் இருந்தார்கள். மூன்று மாடிகள் கொண்ட அந்த நிறுவனத்தில் இவர்கள்போக நூற்றுச் சொச்சம் பேர் பணிபுரிகிறார்கள். ஆனால் யாரும் இவர்களது பிரிவுக்குள் வரமுடியாத அளவுக்கு இதொரு அகழி இல்லாத அரண்மனையாகத்தான் இருந்தது.

உடன் பணிபுரிபவர்களில் அர்ச்சனாதான் இவளோடு சடுதியில் நெருக்கமானாள். ஆறு மாதங்களில் அர்ச்சனாவோடுதான் தினமும் லஞ்ச். அக்கவுன்ட்ஸ் பிரிவில் வவுச்சர் வாங்கிக் கொடுக்கும் ஒரு பெண் வேலையிலிருந்து நின்றுவிட, இவளை அந்த டேபிளுக்கு மாற்றினார்கள். ஒரு குட்டிப் பதவி உயர்வு போலத்தான். அதுவரை அலுவலகம் வந்ததும் லேப்டாப்பைத் திறந்து, ஆறுமணிவரை அதன் திரையையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு மனிதர்களோடு பேசவேண்டிய வாய்ப்பு. வெவ்வேறு பிரிவுகளிலிருந்து தினமும் ஒருவராவது வந்து வவுச்சரை இவளிடம் நீட்டுவார்கள். இவள் அதைச் சரிபார்த்து என்ட்ரி போட்டு மேனேஜரிடம் அனுப்புவாள்.

அப்படி வருபவர்களில் ப்ராசஸிங் பிரிவிலிருந்து வாரத்துக்கு மூன்று முறையாவது சூர்யாவும், கணேஷும் வருவார்கள். ஒருத்தனுக்கு வேலை என்றாலும் இருவராக வந்து விடுவார்கள். அவர்களில் கணேஷ், அர்ச்சனா டேபிளில் போய் நிற்பான். சூர்யா வவுச்சரை தாராவிடம் நீட்டிவிட்டு அவள் என்ட்ரி போட்டு முடியும் வரை அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருப்பான்.

"கணேஷும் நீயும் என்னடி பேசிப்பீங்க அப்படி?" - தாராதான் கேட்டாள்.

"ப்ச். அவனுக்கு எம்மேல லைட்டா க்ரஷ் இருக்கு. ஆனா எனக்கு ஆல்ரெடி ஆள் இருக்கு. அதுனால நான் கண்டுக்கறதில்ல. பேசினா பேசுவேன். அவ்ளோதான்... அதேமாதிரி சூர்யாவுக்கு உன் மேல க்ரஷ் இருக்குடீ."

இந்த க்ரஷ் என்ற வார்த்தையும் தாராவுக்குப் புரியாது. அர்ச்சனாவிடம் சொல்லியேவிட்டாள். "இந்த க்ரஷ், லவ்வெல்லாம் என்ன மாதிரி ஃபீல்னே எனக்குப் புரிய மாட்டேங்குது."

''சும்மா நடிக்காத. க்ரஷ்னா தெரியலையாம்ல. ஸ்கூல்ல எந்த மாஸ்டர் பிடிக்கும் உனக்கு?"

"ஒரு கணக்கு மாஸ்டர் ரொம்பப்



ஒருநாள் சூர்யா மட்டும் தனியாக இவள் இருக்கும் டேபிளுக்கு வந்தான்.

பிடிக்கும். மத்த பொண்ணுக அப்ப க்ரஷ், லவ்னு பேசிப்பாங்க. ஆனா அவர் மேல எனக்கு பெரிய மரியாதை உண்டு. அப்டிலாம் நினைக்கத் தோணல. அதென்னமோ தெரியல. க்ரஷ், லவ்க்கு என்ன அர்த்தம்னெல்லாம் தெரியும்டி. ஆனா அந்த ஃபீல் எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாதுன்னு சொல்ல வந்தேன்."

"என்னடி கதையளக்கற?"

"இப்போ உனக்கு அன்னைக்கு டேபிள் கால்ல இடிச்சப்ப நான் கத்தினேன்ல, ஏன்? எனக்கு அந்த மாதிரி ஒருக்கா கெண்டைக்கால்ல அடிபட்டிருக்கு. உயிர்போற மாதிரி வலிக்கும். உனக்கு அன்னைக்கு வயித்து வலின்னப்ப என்னால புரிஞ்சுக்க முடிஞ்சது. ஏன்னா எனக்கும் வயிறு வலிச்சிருக்கு. ஆனா லவ் லவ்ங்கறீங்க அது எப்படி என்ன ஃபீல் தரும்னு எனக்குத் தெரியாது. ஒரு வேளை வந்தாலும் அதுதான் லவ்வான்னு தெரியாது."

அர்ச்சனா, தாராவையே பார்த்துக்கொண்டிருந்தாள். "நீ வந்து இவ்ளோ நாள்ல இவ்ளோ நீளமா பேசினது இன்னைக்குத்தான். இப்ப உனக்கு என்ன தெரியணும்?"

"ஒண்ணுமில்ல விடு" என்றாள். வழக்கமாக தாரா இவ்வளவெல்லாம் பேசுபவளே அல்ல.

இந்தக் காலகட்டத்தில்தான் தாராவின் அண்ணன் தருணின் காதல் விவகாரம் வீட்டில் எழுந்தது. தருண் கல்லூரி முடிந்ததுமே சென்னையில் வேலை கிடைத்துப் போய்விட்டான். உடுமலையில் இருக்கும்போது ஒரே ஒரு ஜீன்ஸை எப்போதாவது அணிபவன்,

சென்னைக்குப் போய்விட்டு வந்ததுமே ஆளே மாறி வேறாகியிருந்தான். அவன் கொண்டு வந்த பையில் இருப்பதெல்லாம் ஜீன்ஸும் டிஷர்ட்டும்தான். ஐடி பார்க்கில் வேறொரு நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு பெண்ணோடு அவனுக்குக் காதல். அதை வீட்டில் சொல்லிவிட்டான். தாராவின் வீட்டில் அதற்கெல்லாம் அதிர்ச்சி காட்டுகிறவர்கள் அல்ல. பொண்ணு யாரு என்று மட்டும் கேட்டார்கள். தருணும் அவன் காதலித்தவளும் இன்னும் ஆறுமாதத்தில் ஆன்சைட் போகவேண்டியிருப்பதால் சீக்கிரம் கல்யாணம் நடத்த வேண்டும் என்று பேச்சு. பெண் வீட்டிலும் சாதி குறித்தபெரிய அதிர்ச்சிகளோ,சண்டைகளோ இல்லையென்றாலும் அந்தஸ்தைக் காரணம் காட்டிக் கொஞ்சம் இழுத்தடித்தார்கள். “தங்கச்சி இருக்கறப்ப இவன் கல்யாணம் கட்டிக்கறான் பாரு” என்று சொந்தக்காரர்களின் பேச்சு வந்தது. தாராவின் அப்பா அதற்குத்தான் கோபப்பட்டார். “தாராவுக்குக் கல்யாணம் பண்றது எங்க பொறுப்பு. அதுக்கும் அண்ணன் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?” என்று கேட்டு சீக்கிரமே கல்யாணத்தை ஏற்பாடு செய்து நடத்தி முடித்தார்.

அந்த ஆறுமாதத்தில் வீட்டில் இருந்த லேசான இறுக்கச் சூழல், தாராவை மீண்டும் காதலைப் பற்றிச் சிந்திப்பதிலிருந்து தள்ளிவைத்தது. தருண் கல்யாணமெல்லாம் முடிந்து மனது ஒரு சமநிலைக்கு வந்துவிட்டிருந்தது. வீட்டில் இவளுக்கும் மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று பேச்சு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்போதுதான் ஒருநாள் சூர்யா மட்டும் தனியாக இவள் இருக்கும் டேபிளுக்கு வந்தான். எப்போதும் வேலையாக வருபவன், அன்றைக்குக் கையில் எந்தப் பேப்பருமில்லாமல் வருவதைப் பார்த்ததும் ‘இவன் எதுக்கு வரான்?’ என்று தோன்றியது. பள்ளிக்கூட நாள்களில் வந்த அந்தப் பையன் நினைவில் வந்தான். ஆனால் அப்போது இருந்தமாதிரி பயமெல்லாம் வரவில்லை.

தலையை உயர்த்திச் சிரித்தாள். சூர்யாவும் சிரித்தான்.

“ரெண்டு வாரமா லீவுங்ளா?”

“ஒருவாரம்தானே..? அண்ணன் கல்யாணம்...”

“ஆங்... அர்ச்சனா சொன்னாங்க...”

அதற்குமேல் அந்த உரையாடல் தொடரவில்லை. ஒன்றிரண்டு நிமிடங்கள் மௌனம் வழிந்த அந்தச் சமயத்தில் “சூர்யாஆஆ” என்று அந்த ஃப்ளோருக்கே கேட்கும் வண்ணம் அக்கவுன்ட்ஸ் மேனேஜரின் குரல் கேட்டது. அவரது டேபிளிலிருந்து வந்துகொண்டிருந்தவர் சூர்யாவைப் பார்த்து “பதினாறாயிரம் ரூவா உன் பேர்ல சஸ்பென்ஸ் காட்டுது. இன்னும் க்ளியர் பண்லியா நீ? சீக்கிரம் க்ளியர் பண்ணுய்யா...” என்று சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் கடந்து சென்றுவிட்டார்.

சூர்யாவின் முகம் சுருங்கியிருந்தது. எதையோ பேசவந்தவன்போல இருந்த அவன் உடல்மொழி மாறி, அங்கிருந்து செல்லும் நிலைக்குத் தயாரானது. தாராவைத் தயக்கத்தோடு பார்த்துவிட்டு, திரும்பிச்சென்று விட்டான். அன்றைக்கு இரவு சூர்யாவின் முகம் இவள் மனதில் வந்து வந்து போனது. அடுத்தநாள் சூர்யா தன் டேபிளுக்கு வருவானா என்று எதிர்பார்த்தாள். அவன் ஏற்கெனவே கொடுத்த வவுச்சர்களை எடுத்து அவன் கையெழுத்து எப்படி இருக்கும் என்று பார்த்தாள். அப்போதுதான் இந்தக் கதையின் முதல் வரியில் சொல்லப்பட்ட ஐயம் அவளுக்கு வந்தது. இது காதலா, பைத்தியமா? ஏனென்றால், அன்று காலை வீட்டில் ஓடிக்கொண்டிருந்த டிவியில், ஒரு காட்சியில் சந்தானம், சிம்புவிடம் “இதெல்லாம் லவ்வுன்னு சொல்லிடாத. இது பைத்தியக்காரத்தனம்” என்று சொல்லிக்கொண்டிருந்தார். இதுவும் பைத்தியக்காரத்தனம்தானோ?

அதன்பிறகு சிலநாள்கள் சூர்யா, இவள் செக்‌ஷன் பக்கவே வரவில்லை. இவளுக்கும் அந்த எண்ணமெல்லாம் வடிந்திருந்தது. ஒருநாள் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துவிட்டு வந்திருப்பதாக அப்பா சொன்னார். பையன் பெயர் வினோத்குமார். பொள்ளாச்சியில் தனியார் கல்லூரி ஒன்றில் லைப்ரேரியன் என்று சொல்லி, புகைப்படத்தைக் காட்டினார். தாராவுக்கு அவனைப் பிடித்திருந்தது. “நீ யாரையாவது லவ் பண்றியா?” என்று சிரித்துக்கொண்டே அப்பா கேட்க, அம்மாவோ “அவ லவ்வுன்னா

• ஸ்லிம்மாக, கோபியூக்குக் கறுப்பு டி ஷர்ட்டில் வந்திருந்தான் வினோத்.

செவப்பா கறுப்பான்னு கேப்பா. அவகிட்ட கேட்டீங்க பாருங்க" என்று தாராவின் தலையில் குட்டிவிட்டுப் போனாள்.

எல்லாம் பரபரவென நடந்தது. கோயில் ஒன்றில் வைத்து தாரா, வினோத்குமாரைப் பார்த்தாள். ஸ்லிம்மாக, கோயிலுக்குக் கறுப்பு டி ஷர்ட்டில் வந்திருந்தான் வினோத். பையன் வீட்டில் ரொம்ப சிம்பிளா நடத்தினா போதும் என்றார்கள். ஜாதகத்தைக் காரணம் காட்டி, அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் என்றார்கள். தருணும், அண்ணியும் அமெரிக்கா போவதால் அப்பாவும் அதற்கு ஒப்புக்கொண்டார். தாராவிடம் போன் நம்பரை வாங்கிக்கொண்ட வினோத்குமார், இரண்டொரு முறை அழைத்தான். ஆனால், இருவருக்குமே இருந்த ஒரு தயக்கம் உரையாடலை மேற்கொண்டு செலுத்தவில்லை. பத்து நாள்களில் திருமணம் முடிந்தது. தாராவின் அலுவலகத்திலிருந்து அவள் செக்‌ஷனில் எல்லாரும் திருமணத்துக்கு வந்திருந்தார்கள். அவள் செக்‌ஷன் தாண்டி, கணேஷும், சூர்யாவும் வந்திருந்தார்கள். சூர்யா வாழ்த்திவிட்டு செல்ஃபி எடுத்துக்கொண்டு கை கொடுத்தான். அர்ச்சனா இவள் காதில் "இனி நீ தப்பிக்க முடியாது. லவ் பண்ணித்தான் ஆகணும்" என்றாள். 'பண்றேன். ஆனா அது எப்படி இருக்கும்?' என்று தோன்றிய கேள்வியை அடக்கிக்கொண்டு சிரித்துவைத்தாள்.

அன்றைக்கு முதலிரவு இவள் வீட்டில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ப்ரைவசிக்காக எல்லாரும் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். சினிமா மாதிரியெல்லாம் இல்லாமல், தாராவும் வினோத்தும் ஹாலிலேயே அமர்ந்து கொஞ்சநேரம் நார்மலாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். படிப்பு, வேலை எல்லாவற்றைப் பற்றியும் பேசியதும் வினோத் சோஃபாவில், தாராவுக்கு அருகே வந்து அமர்ந்து அவள் கைகளைப் பிடித்துத் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டான்.

"நீ யாரையாவது லவ் பண்ணீருக்கியா தாரா?"

தாரா மென்மையாகப் புன்னகைத்தாள். என்ன பதில் சொல்வது... அந்த ஸ்கூல் பையன், கல்லூரி படிக்கும்போது ஒருவன், இப்போது பணிபுரியும் இடத்தில் சூர்யா என்று இவர்கள்மேல் வந்த உணர்வை என்னவென்று சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவையெல்லாம் லவ்வா என்றே தெரியாமல் என்ன சொல்வது என்று யோசித்தாள்.

"இல்லைங்க. பெரிசா யாரையும் லவ்லாம் பண்ணினதில்ல. சிலரைப் பிடிச்சிருக்கும். ஆனா..."

"அதக்கேட்கல. ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் லவ் பண்ணினதுண்டா?"

"இல்லைங்க..."

"சரி..." வினோத் இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்தான். "உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்." தாரா வினோத்தின் கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். அவை என்னமோ சொல்லியது.

"நான் ஒரு லவ் பண்ணீருக்கேன். கிட்டத்தட்ட ஆறு வருஷ லவ். எங்க வீட்ல பிரச்னை இல்லை. பொண்ணு வீட்ல ரெண்டு வருஷமா போராடினோம், ஒத்துக்கல. ஆறு மாசம் முன்னாடி அவளுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுட்டாங்க. நான் ரொம்ப உடைஞ்சுபோய்ட்டேன். ஆனா எனக்கு, என் ஃபேமலி எல்லாச் சமயத்துலயும் ஆதரவா இருந்திருக்காங்க. அதனால அவங்க கேட்டுக்கிட்டபடி இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன். இதை மறைச்சு, ஜாதகம் அது இதுன்னு சீக்கிரமா கல்யாணம் பண்ணி வெச்சுட்டாங்க. ஆனா உன்கிட்ட சொல்லணும்னு எனக்குத் தோணிட்டே இருந்தது. ரெண்டொருக்கா டிரை பண்ணினேன். பேச முடியல. இப்ப எங்களுக்குள்ள கான்டாக்ட் இல்ல. ஆனா நான் அவளை லவ் பண்ணினது நெஜம்..."

தாராவுக்கு அடிவயிற்றில் என்னவோ செய்தது. அது அடிவயிற்றில் அல்ல... கொஞ்சம் மேலே இதயத்தில். பட்டாம்பூச்சி சிறகடிப்பதுபோல இதயத்தின் துடிப்பை உணர்ந்தாள். வினோத்தின் கைகளுக்குள் இருந்த, தன் கைகளை விடுவித்து, அவன் கைகளை இவள் இப்போது இறுகப்பற்றித் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டாள்... கேட்டாள்: "ஹேய்... சொல்லுங்கப்பா. லவ் பண்ணினேன்னீங்களே... அந்த ஃபீல் எப்படி இருந்தது?" வி

தாராவுக்கு அடிவயிற்றில் என்னவோ செய்தது. அது அடிவயிற்றில் அல்ல...

TamilBorn.com

கே.ஜி.மணிகண்டன் படம்: க.பாலாஜி

# டைட்டில் கார்டு

டைட்டில் கார்டில் தங்கள் பெயரைக் கண்ட இளம் தலைமுறை இயக்குநர்களின் அனுபவத் தொடர்



குடும்பத்துடன் இயக்குநர் ரத்னகுமார்

“ராமராஜன் சார் கல்யாணத்துல பிரச்னை வந்துடக்கூடாதுன்னு மாட்டு வண்டியில சிலம்பக் கலைஞர்களை ஏத்திக்கிட்டு அவருக்குப் பந்தோபஸ்து கொடுத்தவர், எங்க அப்பா முருககனி. பிரின்டிங் வேலை, பிளாஸ்டிக் கம்பெனி, சிலம்பக் கலைக்கூடம், பத்திரிகையாளர் வேலை.. இப்படிப் பல வேலைகளைப் பார்த்துக்கிட்டிருந்தார். அவர்கிட்ட இருந்து நான் சினிமாவை எடுத்துக்கிட்டேன்!” - ‘மேயாத மான்’, ‘ஆடை’ படங்களின் இயக்குநர் ரத்னகுமாருக்கு சினிமா ஆர்வம் வர முக்கிய காரணம் அப்பா. மிக முக்கியமான காரணம், ரத்னகுமாரின் பொய்கள்!

“அப்பாவுக்குப் பூர்வீகம் தூத்துக்குடி, அம்மாவுக்குக் கோவில்பட்டி. கல்யாணத்துக்கு முன்னாடியே அப்பா சென்னையில் செட்டில் ஆகிட்டதால, ரெட்ஹில்ஸ்லதான் பிறந்து வளர்ந்தேன். இதுதான் வேலைன்னு தீர்மானிச்சுக்காம பல வேலைகள் பார்த்தவர் அப்பா. ‘வெல்கம் பிரின்டிங் பிரஸ்’ வெச்சிருந்தார், ‘சி.பா.ஆதித்தனார் சிலம்பக் கலைக்கூடம்’ ஆரம்பிச்சு மாணவர்களுக்கும் சினிமாக் கலைஞர்களுக்கும் சிலம்பம் சொல்லிக் கொடுத்தார். ராமராஜன் படங்களுக்கு சிலம்பப் பயிற்சியாளரா இருந்திருக்கார். ‘தேசிய கீதம்’ படத்துல மாண்டேஜ் சீன்ல சிலம்பம் சுத்துவார். சிம்பு ஹீரோவா அறிமுகமான சமயத்துல அவருக்கும் சிலம்பம் சொல்லிக் கொடுத்திருக்கார். வடிவேலுவுடன் ஒருசில காட்சிகளில் நடிகராகவும் தலைகாட்டியிருக்கார். இடையில் மலேசியாவுக்குப் போனார். ‘தினகரன்’ பத்திரிகையில் 20 வருடம் நிருபரா வேலை பார்த்தார், இப்பவும் பகுதிநேர நிருபரா இருக்கார். அவருக்கு என்னை ஒரு நல்ல சிலம்பக் கலைஞர் ஆக்கணும்னு ஆசை. ஆனா, அம்மா அமுதா அதுக்குச் சம்மதிக்கல. ‘தினமணி’ பத்திரிகையில நானும் இரண்டு வருடம் நிருபரா வேலை பார்த்தேன்.” அப்பாவிடமிருந்து சிலம்பமும் பத்திரிகையாளர் பணியும் ஒட்டிக்கொண்டாலும் சினிமா ரத்னகுமாரை வாரி அணைத்திருக்கிறது.

“ரெட்ஹில்ஸைச் சுத்தியிருக்கிற கென்னடி, செயின்ட் மேரீஸ் பள்ளிகள்ல ஸ்கூல் வாழ்க்கை முடிஞ்சது. என் தம்பி ரத்ன லோகேஷ். பிளாஸ்டிக் ரீ-சைக்கிளிங் கம்பெனி வெச்சிருக்கார். தங்கச்சி ரத்ன புஷ்பாதேவி. கல்யாணம் ஆகிடுச்சு. ப்ளஸ் டூ முடிச்சுட்டு, டிப்ளோமா எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேசன் படிச்சேன். பிறகு, ‘மல்டி ஆர்க் இந்தியா’ங்கிற கம்பெனியில் ஷிஃப்ட் சூப்பர்வைஸர் வேலை. அதுக்குப் பிறகு சி.ஐ.டி நகர் ‘ஹெச்.சி.எல்’ கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தேன். மதர் போர்டு மாத்தியே நாள்களைக் கடத்துற வேலை. மிஷின்கூடவே வேலை பார்க்கிற அந்த மனநிலை எனக்குப் பிடிக்கல. ‘வேற ஏதாச்சும் பண்ணணும்’னு யோசிச்சுக்கிட்டிருக்கும்போது, அகமதாபாத்ல ஒரு டிரெயினிங் கூட்டிக்கிட்டுப் போனாங்க. அகமதாபாத் மக்கள் ராத்திரி 3 மணிக்குத் தூங்குறாங்க, காலையில பார்லேஜி பிஸ்கெட்டை டீயில முக்கிச் சாப்பிடுறாங்க, மதியம் கிடைக்கிற ‘குஜராத்தி தாலி’யில சாம்பார் இனிப்பா இருந்தது… சுருக்கமாச் சொன்னா, அந்த வாழ்க்கை எனக்கு செட் ஆகல. சினிமாவுக்கு வர இதுவும் ஒரு காரணம். அகமதாபாத்ல இருந்து நவஜீவன் எக்ஸ்பிரஸ்ல சென்னைக்குத் திரும்பும்போது, ‘கிரியேட்டிவ்’ ஃபீல்டுக்குப் போகலாம்னு முடிவெடுத்தேன். கூட வேலை பார்க்கிறவங்ககிட்ட, மேனேஜர்கிட்ட டிஸ்கஸ் பண்ணினேன். ‘நீ நிறைய பொய் சொல்வ, அந்தப் பொய்களெல்லாம் கிரியேட்டிவா இருக்கும். அதனால, உன் முடிவு சரிதான்!’னு அனுப்பி வெச்சுட்டாங்க. அந்தச் சமயத்துல, இயக்குநர் விஷ்ணுவர்தன் ஒரு பேட்டியில் ‘லயோலா காலேஜ்ல விஸ்காம் படிச்சேன், விளம்பரத் துறையில வேலை பார்த்தேன்’னு சொல்லியிருந்தார். எனக்கும் விஸ்காம் மீது ஆசை வந்தது” என்பவர், ‘விஸ்காம்’ சேர்ந்த கதை பெரும்பாடு.

“அப்பாவுக்கு சினிமாவின் நெளிவுசுளிவு தெரியும். ‘சினிமாவுல சேர்றேன்’னு சொன்னா, ஏதாச்சும் சொல்வாரோன்னு நினைச்சு ‘விளம்பரத்துறையில் வேலை பார்க்க ஆசை’ன்னு சொன்னேன். படிப்பு முடிஞ்சு சில வருடம் வேலை பார்த்ததால காலேஜ்ல சீட்டு கிடைக்கிறதுல பிரச்னை.

‘இந்த வருடம் இல்லைன்னா என்ன, அடுத்த வருடம் படி’ன்னு நம்பிக்கை கொடுத்தார் அப்பா. அப்போ எனக்கு அறிமுகமானவர்தான், ‘ஆடை’ கேமராமேன் விஜய் கார்த்திக் கண்ணன். ‘மெட்ராஸ் கிறிஸ்டின் காலேஜ்ல அப்ளை பண்ணியிருந்தேன், என் பெயர் லிஸ்ட் அவுட் ஆகியிருக்கான்னு பார்த்துச் சொல்லுங்க’ன்னு அவர்கிட்ட சொல்லியிருந்தேன். போய்ப் பார்த்தவர், என் பெயர் இல்லைன்னு சொல்லிட்டார். நேரடியாப் போய் விசாரிக்கலாம்னு கல்லூரிக்குப் போனா, ‘உங்க பெயர் இருந்தது. நீங்க வரலைன்னு வேற ஒருத்தருக்கு சீட்டு கொடுத்துட்டோம்’னு சொல்லிட்டாங்க. எங்கேயோ சின்ன தப்பு நடந்திருக்கு. அது என்ன ஏதுன்னு விசாரிக்க நேரமில்லாம, நானும் அப்பாவும் காலேஜ் டீன்கிட்ட கெஞ்சிப் பேசி சீட்டு வாங்கினோம். நானும் விஜயகார்த்தியும் சேர்ந்து கல்ச்சுரல்ஸ்ல கலந்துகிட்டோம், பொம்மலாட்டம் போட்டோம், குறும்படங்கள் எடுத்தோம். விஸ்காம் முடிச்ச பிறகு, ‘இன்டோ ஓவர்சீஸ் பிலிம்ஸ்’ கம்பெனியில போஸ்ட் புரொடக்‌ஷன் சூப்ரவைஸரா வேலை பார்த்தேன். ஜாக்கி சான், டோனி ஜா, ஜெட்லி படங்களை டப்பிங் பண்ணி இந்தியா, இலங்கை, வங்காளதேசத்துல ரிலீஸ் பண்ற நிறுவனம் அது. இங்கேதான் ஒரு படத்துக்கான போஸ்ட் புரொடக்‌ஷன் வேலைகள், ரிலீஸ் வேலைகளெல்லாம் எப்படி நடக்குதுன்னு கத்துக்கிட்டேன்.” பிறகு சீனியர் ஒருவர் சினிமா எடுப்பது தெரிந்து வேலையை உதறியிருக்கிறார், ரத்னகுமார்.





“ஒரு குறும்படப் போட்டிக்காக எடுத்திருந்த குறும்படத்தை எடுத்துக்கிட்டு, ஷங்கர் சார்கிட்ட உதவி இயக்குநரா இருந்த பிரபு ராஜசோழன் இயக்கிக்கிட்டிருந்த ‘கருப்பம்பட்டி’ படத்துல உதவி இயக்குநரா சேரலாம்னு போனேன். ஏற்கெனவே பலபேர் இருந்ததால, சேர்த்துக்க முடியாதுன்னு சொல்லிட்டார். ‘வேடிக்கை பார்க்கவாவது வரட்டுமா’ன்னு கேட்டு, ஷூட்டிங் ஸ்பாட்டுக்குப் போனேன். கூட இருந்த சில உதவி இயக்குநர்கள் ‘நீயா வேலைகளை எடுத்துப் பண்ணு’ன்னு சொன்னாங்க. நானும் களத்துல இறங்கிட்டேன். என்னைக் கவனிச்சுக்கிட்டிருந்த இயக்குநர், ‘அடுத்த ஷெட்யூலுக்கு இவனையும் சேர்த்துக்கோங்க’ன்னு மைக்ல அறிவிச்சார். உதவி இயக்குநர்களுக்கு உதவியாளரா ‘ஸ்டேஷனரி’ பேக்கை முதுகுல சுமந்து சுத்திக்கிட்டிருந்தேன். ஒரு பிரச்னையில, கிளாப் போர்டு அடிச்சுக்கிட்டிருந்த உதவி இயக்குநர் ஒருத்தர் படத்திலிருந்து விலக, ‘கிளாப் போர்டு’ என் கைக்கு வந்தது. ஃபைனான்ஸ் பிரச்னையால இடைவெளி விட்டு இடைவெளி விட்டு எடுத்த படம் அது. படம் தொடங்கி முடியறதுக்குள்ள என்னைத் தவிர எல்லா உதவி இயக்குநர்களும் போயிட்டாங்க. ‘கருப்பம்பட்டி’ ஷூட்டிங்ல இருந்து ரிலீஸ் வரை நான் மட்டும் இயக்குநர்கூடவே இருந்தேன். ஷூட்டிங்கை வேடிக்கை பார்க்கப்போன நான், ரிலீஸான படத்துல ‘இணை இயக்குநர்’ ஆகியிருந்தேன்” உதவி இயக்குநர் ஆன விஷயம் வீட்டிற்குத் தெரியாது. வட்டிக்குப் பணம் வாங்கி ‘சம்பளம் இது’வெனக் கொடுத்த ரத்னகுமார், வழக்கம்போல பொய்களைச் சொல்லியே சமாளித்திருக்கிறார்.

“காமெடி என்னன்னா, பிறகு ஒருநாள் வீட்டுல விஷயத்தைச் சொல்லும்போது ‘இதை முன்னாடியே சொல்லியிருக்கக்கூடாதா’ன்னு

சிம்பிளா சீன் வெச்சுட்டாங்க. இடையில நான் ஒரு த்ரில்லர் கதையை எழுதி முடிச்சு, விஜய் கார்த்திக்கிட்ட படிக்கக் கொடுத்தேன். 'ஆரம்பம்' படத்துல உதவி ஒளிப்பதிவாளரா வேலை பார்த்துக்கிட்டிருந்த அவர், அதிலிருந்து விலகி 'உடனே இந்தக் கதைக்குத் தயாரிப்பாளரைத் தேடுவோம்'னு சொன்னார். ஆனா, முதல் படமா அதை எடுக்க முடியும்னு எனக்கு நம்பிக்கை இல்லை. நாலைஞ்சு மாசம் அலைஞ்சு திரிஞ்சு, 'முதல்ல ஒரு குறும்படம் எடுக்கலாம்'னு முடிவெடுத்தோம். அதுதான், 'மது'ங்கிற குறும்படம். பிலிம் இன்ஸ்டிட்யூட்ல ஒளிப்பதிவுக்குப் படிச்சுக்கிட்டிருந்த விவேக் பிரசன்னாவை நடிக்க வெச்சோம். நண்பர்கள்கூட சேர்ந்து தயாரிச்சு, யூ-டியூப்ல ரிலீஸ் பண்ணினோம். விஜய் சேதுபதி அந்தக் குறும்படத்தைப் பார்த்துட்டு போன் பண்ணிப் பாராட்டினார். கார்த்திக் சுப்பராஜ் 'பென்ச் டாக்கீஸ்'ல ரிலீஸ் பணணினார். பிறகு, அந்தக் குறும்பட டிவிடியையும், என் ஸ்க்ரிப்டையும் வெச்சுக்கிட்டு, கிட்டத்தட்ட 50 தயாரிப்பாளர்களைச் சந்திச்சுப் பேசினேன். யாரும் தயாரிக்க முன்வரல. பிறகு ஒருநாள் கார்த்திக் சுப்பராஜ் கூப்பிட்டு, ' 'மது'வைப் பெரிய படத்துக்கான திரைக்கதையா எழுதுங்க'ன்னு சொன்னார். 'அப்படி வேணாம். 20 நிமிட 'மது' குறும்படம் அப்படியே இருக்கட்டும். அதுக்குப் பிறகு அந்தக் கதை எப்படியிருக்கும்னு எழுதுறேன், புதுசா இருக்கும்'னு சொன்னேன். அவரும் சம்மதிச்சார். அதுதான், 'மேயாத மான்' படமா உருவானது. ஃபிரெண்டு தங்கச்சியைக் காதலிக்கிறது, காதலுக்காக சாகப்போறது... வழக்கமான விஷயங்கள் படத்துல இருந்தாலும், அதைப் புதுசா சொன்னதுதான் அந்தப் படத்தோட வெற்றி" என்பவர், திருமணத்திற்கும் ஒரு பொய் சொல்லியிருக்கிறார்.






TabletBarn.com

" 'மேயாத மான்' கமிட் ஆகுறதுக்கு முன்னாடி எனக்குக் கல்யாணம் முடிஞ்சது. தம்பி காதல் திருமணம். ஆனா, அண்ணனுக்குக் கல்யாணம் பண்ணாம எப்படின்னு சொந்தங்கள் ஏதாச்சும் சொல்வாங்களேன்னு எனக்கும் பொண்ணு பார்த்தாங்க. வீட்டுல எனக்கு நிறைய சப்போர்ட் பண்ணியிருக்காங்க, அவங்களுக்காக கல்யாணத்துக்கு சம்மதிச்சேன். வர்ற பொண்ணுகிட்ட, 'சினிமா இல்லைன்னா தாங்க மாட்டேன் தூங்கமாட்டேன்'னு சொன்னா, 'நான் உன்கூட வாழமாட்டேன்'னு போயிடுமோன்னு பயந்து, 'தம்பிகூட சேர்ந்து பிசினஸ் பண்றேன்'னு சொன்னேன். மனைவி பெயர், அருணா தேவி. பிறகு, நான் சினிமாவுக்காக தீவிரமா அலைஞ்சுக்கிட்டிருக்கும்போது அவங்க வேலைக்குப் போய் எனக்கு ஆதரவா இருந்தாங்க. இப்போ எங்களுக்கு 'குரலினியாள்'னு ஒரு பெண் குழந்தை இருக்கு" என்றவர், 'ஆடை' உருவான கதையைச் சொன்னார்.

" '*Trapped*' சினிமாக்களில் உயிர்தான் முக்கியமான பேசுபொருளா இருக்கும். நம்ம ஊர்ல உயிரைவிட மானம்தானே பெருசு?! அதனால, மானத்தை முக்கியமான களமா வெச்சு 'ஆடை' ஒன்லைனை எழுதினேன். அமலாபால் நடிப்புக்கு மட்டுமல்ல, படத்துக்கும் நல்ல ரெஸ்பான்ஸ். இப்போ அடுத்த படத்தைப் பற்றி யோசிக்கிறேன்!" என்கிறார்.

வி



TabletBarn.com

L'ORÉAL
PROFESSIONNEL
PARIS

**பரபரப்பான லைஃப்ஸ்டைல் மற்றும் பொல்யூஷன்
உங்கள் தலை சருமம் மற்றும் கேசத்தைப் பாதிக்கிறதா?**

**அனுபவியுங்கள் உங்களின்**

HAIR SPA

DND

DETOX • NOURISH • DE-STRESS*

**உங்கள் ஆரோக்கியமான கேச பயணம்
ஹேர் ஸ்பாஉடன் ஆரம்பிக்கிறது.**

கிடைக்கிறது #ONLYINSALONS

www.lorealprofessionnel.in

/ LorealProfessionnelIndia / LorealPro / LorealProfIndia

*சலூன் சர்வீஸில்.

த.கதிரவன் படங்கள்: பா.காளிமுத்து




# தனித்தனிக் கட்சிகள்...



**செ**ன்னை லாயிட்ஸ் காலனி, எல்விபிளாக்கின் தரைத்தளத்தில் அமைந்தி ருக்கிறது அந்தச் சின்னஞ்சிறிய வீடு!

அறைமுழுக்க இறைந்து கிடக்கும் புத்தகங்கள், அழுக்கேறிய மின்விசிறி, பனை மரத்தாலான பழைய நாற்காலி, மேஜை, பீரோவுக்கிடையே மெலிந்த தேகத்துடன் நார்க்கட்டிலில் அமர்ந்து, புத்தகம் வாசித்துக்கொண்டிருக்கிறார் குமரி அனந்தன்; தெலங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜனின் தந்தை!

சுவரில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட ஒட்டடைகளும் அறைமுழுக்க அடர்ந்து நிற்கும் முடைநாற்றமும்... குடும்ப உறுப்பினர்கள் எவருடைய துணையுமின்றி குமரி அனந்தன் தனித்திருக்கும் செய்தியை அழுந்தச் சொல்கிறது.

எழுத்தாளர், பேச்சாளர், பழம்பெரும் அரசியல் தலைவர் எனப் பன்முகத் திறன்கொண்ட குமரி அனந்தனிடம் நம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு பேச ஆரம்பித்தோம்.

“வீடு தேடி வந்திருக்கிற உங்களை வரவேற்று உபசரிக்கிற சூழல்கூட இங்கே இல்லையே...” என்று வருத்தத்துடன் புன்னகைத்தவர், தன் பால்யகால நினைவுகளை நம்மோடு பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தார்.

‘‘கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குமரிமங்கலம் என்ற சிறிய கிராமம்தான் என் சொந்த ஊர். அப்பா ஒரு வில்லிசைக் கலைஞர்.

தீண்டாமைக் கொடுமைகள் நிறைந்திருந்த அந்தக் காலங்களில், எங்கள் சாதியினரை ‘தலைப்பாகை அணியக்கூடாது, தோளில் துண்டு போடக்கூடாது’ என்றெல்லாம் ஆதிக்கச் சாதியினர் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனாலும்கூட என் தந்தை, கோயிலில் வில்லிசை இசைக்கும் நேரத்தில், கிரீடம் போன்று அழகாகத் தலைப்பாகை அணிந்திருப்பார்.

# தனித்தனி வீடுகள்!

TabletBarn.com

இந்தத் தலைப்பாகையின் அழகைக் காண்பதற்காக மக்கள் நிறைய கூடுவார்கள்.

சுதந்திரத்துக்கு முந்தைய அந்தக் காலகட்டத்தில், மகாத்மா காந்தியின் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட என் தந்தை, எங்கள் வீட்டிலேயே 16 ராட்டைகள் அமைத்துக் கதர் உற்பத்தி செய்துவந்தார். தந்தை காந்தியவாதியாக இருந்ததால், சிறு வயதிலிருந்தே எனக்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் மீது ஈடுபாடு வந்துவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், 'நான் வில்லிசையில் கருவானேன்; ராட்டை இசையில் உருவானேன்!" என்று சொல்லிச் சிரிக்கும் குமரி அனந்தனுக்கு வயது 87. இப்போதும் கட்சிக் கூட்டங்கள், இலக்கிய மேடைகள் எனச் சுறுசுறுப்பாக இயங்கிவருகிறார்.

"எங்கள் கிராமத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலிருந்த அரசுப் பள்ளிக்கு நடந்து சென்று 5-ம் வகுப்பு படித்தேன். மதுரையில்தான் இளங்கலை படித்தேன். கல்லூரியில் ஒருமுறை, நேரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இன்னும் கால் மணிக் கூறு இருக்கிறது' என்று கூறிவிட்டேன். உடனே அங்கிருந்த மாணவர்கள் அனைவரும் 'இவன் என்ன மலையாளம் மாதிரி பேசுகிறான்' என்று கூறி, கைதட்டிக் கிண்டல் செய்தனர். இந்தச் சம்பவம் எனக்குப் பெருத்த அவமானமாகிவிட்டது.

அந்த நேரத்தில்தான் கல்லூரியின் பேச்சுப்போட்டி அறிவிப்பு வெளியானது. 'இந்தப் போட்டியில் கலந்துகொண்டு நம் திறமையை நிரூபிக்கவேண்டும்' என்ற வைராக்கியத்தோடு முதன் முதலாகப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டேன். நினைத்ததுபோலவே முதல் பரிசு கிடைத்தது. கூடவே, மாணவர் தலைவன் என்ற அங்கீகாரமும் கிடைத்தது. தொடர்ச்சியாக காங்கிரஸ் தலைவர்களோடும் தொடர்பில் இருந்துவந்தேன்.

பின்னர் அண்ணாமலையில் முதுகலை படித்தபோது, என் தமிழ் ஆர்வத்தை மேலும் வளர்த்துக்கொண்டேன். 'வெற்றி தனிப்பயிற்சிக் கல்லூரி'யில் ஆசிரியராகப் பணியில் அமர்ந்தேன். பகல் முழுவதும் ஆசிரியர் பணி, மாலையில் பக்கத்து ஊர்களுக்கு காங்கிரஸ் கட்சி பிரசாரத்துக்குச் சென்றுவிடுவேன்'' என்று ஆர்வமாகப் பேசுபவர் அரசியலில், காமராஜருடனான அனுபவம் குறித்துப் பேசும்போது, இன்னும் பிரகாசமாகிறார்.

''கல்லூரிப் பேராசிரியர் பணியில் இருந்தபோதே எனக்குத் திருமணமாகி, குழந்தைகளும் பிறந்துவிட்டார்கள். ஒருமுறை மதுரையில், பெருந்தலைவர் காமராஜரும், சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத்தும் பேசுகிற ஒரு பொதுக்கூட்டம். தலைவர்களது பேச்சைக் கேட்கும் ஆர்வத்தில் நானும் ஒரு தொண்டனாகச் சென்றிருந்தேன். அங்கே தலைவர்கள் வரக் காலதாமதம் ஆக, அதுவரையில் என்னைப் பேசச்சொல்லி அழைத்தார்கள்.

நானும் மேடையேறிப் பேசினேன்... சிறிதுநேரத்தில், காமராஜர் வந்துவிட்டார். அதனால், நான் பேச்சை முடித்துக்கொள்ள எத்தனிக்கையில், காமராஜரே என் அருகில் வந்து 'நல்லாப் பேசுறே... தொடர்ந்து பேசுண்ணேன்...' என்று தோளில் தட்டி உற்சாகம் கொடுத்தார்.

அடுத்தசில நாள்களிலேயே காமராஜரிடமிருந்து சென்னைக்கு வரச்சொல்லி எனக்கு அழைப்புவந்தது. நேரில் வந்து சந்தித்தேன்... 'நீ நல்லாப் பேசுறே... அதனால காங்கிரஸ் கட்சியில் உனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்கலாம்னு நெனைக்கிறேன். ஆனா இங்கே சம்பளம் எல்லாம் கிடையாது' என்று கூறியவர், என் மாமனாரை அழைத்து, என் குடும்பத்தைக் கவனித்துக்கொள்வதற்கான உறுதிமொழியையும் அவரிடம் வாங்கிக்கொண்டார். அதன் பிறகே என்னை 'இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர்' ஆக்கினார்" என்று முகம் மலர்பவர், இப்போதும் தீவிர அரசியல் பணியாற்றிவருகிறார். 'பூரண மதுவிலக்கு கோரி' வருகிற 15-ம் தேதி அனைத்துக் கட்சியினர் கலந்துகொள்ளும் 'உண்ணாவிரதப் போராட்ட'த்துக்கான ஏற்பாடுகளையும் மும்முரமாகச் செய்துவரும் குமரி அனந்தனிடம், 'தமிழிசை சௌந்தர்ராஜனின் அரசியல் பிரவேசம் குறித்துப் பேசினேன்.

"நான் அரசியலில் ஈடுபட்டபோது, எனக்கு உறுதுணையாக இருந்தவர் என் மகள் தமிழிசை. மகாத்மா காந்தியைப் போற்றும்வகையில், கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை வரை 125 தொண்டர்களோடு நான் பாதயாத்திரை மேற்கொண்டேன். அப்போது, பாதயாத்திரையில் பங்கேற்பவர்கள் அனைவருக்கும் மருத்துவம் பார்ப்பதற்காக, தன் இரண்டு குழந்தைகளையும் கையோடு அழைத்துக்கொண்டு உடன் வருவார் என் மகள் தமிழிசை. ஒருமுறை யாத்திரை அச்சிரப்பாக்கம் வந்தபோது, அங்கிருந்த சிலர் எங்கள் குழுவினரைக் கல்லால் தாக்கித் துன்பப்படுத்திவிட்டார்கள். அப்போது, என் உடல்நலனையும் பரிசோதித்துக்கொண்டு,



தொண்டர்களுக்கும் மருத்துவம் பார்த்தபடியே வந்தவர்தான் தமிழிசை.

என்னுடைய வாழ்க்கையைப் பார்த்தும் என்னை மற்றவர்கள் எப்படியெப்படி எல்லாம் நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்தும் அவரது மனதிலே என்ன எண்ணம் வந்ததோ தெரியாது... திடீரென பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துவிட்டார்! எனக்கு அதில் விருப்பமில்லாமல் இருந்தது. அதனால் கொஞ்சநாள் நான் அவருடன் பேசாமல்கூட இருந்தேன். ஆனாலும்கூட பிடித்த கொள்கை கொண்ட கட்சியில் இணைவதென்பது அவரவர் தனிப்பட்ட விருப்பம். எனவே, அவரவர் பணியை நிறைவாகச் செய்துகொண்டிருக்கிறோம் என்று மன அமைதி பெற்றோம்" என்றார்.

குடும்பத்தினரைப் பிரிந்து தனியே தங்கியிருக்கும் சூழல் குறித்துப் பேச்சு திரும்பியபோது, கனத்த மௌனம் காத்தவர், அதற்கான காரணங்களை அவிழ்த்துப் பேச ஆரம்பித்தார்.

"என் மனைவி பெயர் கிருஷ்ணகுமாரி. எங்களுக்கு ஒரு மகன் மற்றும் நான்கு பெண் மக்கள். தமிழும் இசையும் எனக்குப் பிடிக்கும் என்பதால், என் மூத்த மகளுக்குத் தமிழிசை எனப் பெயரிட்டேன். என் கடைக்குட்டி மகள் பிறந்தபோதும்கூட நான் கட்சிப் பணியாகச் சுற்றிக்கொண்டிருந்தேன். விஷயம் கேள்விப்பட்டு காமராஜரே என்னை அழைத்து 'ஏன்யா உன் வீட்டுப் பொம்பளை ஆஸ்பத்திரியிலே இருக்காளாமே... நீ என்னடான்னா கடலூர்க் கூட்டத்துக்குப் போகப்போறேன்னு சொல்றே. அதெல்லாம் பார்த்துக்கலாம். உடனே நீ ஆஸ்பத்திரிக்குப் போ' எனக் கடிந்துகொண்டார்.

உடனே, மருத்துவமனை சென்று மனைவியைப் பார்த்தேன். பெண் குழந்தை பிறந்திருந்தது. கோபத்திலிருந்த என் மனைவி, 'பிரசவ வேதனையில் நான் துடித்துக் கொண்டிருக்கும்போதும்கூட நீங்கள் கட்சி கட்சி என்று ஊரைத்தானே சுற்றிக்கொண்டிருந்தீர்கள். இந்த டாக்டர்தான் எனக்குத் தாயாகவும் இருந்து என்னைப் பார்த்துக்கொண்டார். அதனால், அவரது பெயரையே நம் குழந்தைக்கு வைத்துவிட்டேன்' என்றார். இப்படித்தான் என் தனிப்பட்ட வாழ்க்கை இருந்தது.

இப்போதும் என் மனைவி, தமிழிசை குடும்பத்துடன்தான் இருக்கிறார். 'தனியாக இருந்து ஏன் சிரமப்படுகிறீர்கள் அப்பா... என் வீட்டிலேயே வந்து எங்களோடு தங்கிக்கொள்ளுங்களேன்' என்று தமிழிசையும் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்தான்.

ஆனால், நான் எப்போதும் ராட்டைக் கொடியுடன் கூடிய என் காரில்தான் பயணிக்கிறேன். அவரோ வேறு ஒரு கட்சியின் தலைவர், அவரது காரில் தாமரைக் கொடி பறக்கும். கட்சி ரீதியாக அவரைச் சந்திப்பதற்குப் பலரும் வந்துபோவார்கள். அந்த இடத்தில், இந்த வேறுபாடுகளையெல்லாம் எல்லோரும் பெருந்தன்மையாக எடுத்துக்கொள்வார்களா? மாறாக, இந்த வேறுபாடே ஒரு காரணமாக அமைந்து, என் மகளின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு நாமே தடையாக இருந்துவிடக் கூடாது என்றுதான் மறுத்துவிட்டேன். ஒரு தந்தையாக நான் உதவ முடியாவிட்டாலும்கூட, ஒருபோதும் தடைக்கல்லாக இருந்துவிடக் கூடாதல்லவா?

இப்போதும் நான் சென்னையில் இருக்கும் நாள்களில் எல்லாம் எனக்கான தினசரி உணவு என் மகள் தமிழிசையின் வீட்டிலிருந்துதான் வருகிறது. ஆனாலும் எங்கள் இருவருக்குமிடையே கட்சி, கொள்கை, கோட்பாடு வேறுவேறுதான்!'' அழுத்தமாகச் சொல்லிச் சிரிக்கிறார் இலக்கியச் செல்வர்!

வி

TabletBarn.com



# “இசை என்னைக் கைவிடாது!”

சௌந்தர்யன்

# “இசை என்னைக் கைவிடாது!”



சௌந்தர்யன்

குணா எம்.எல் படங்கள்: சொ.பாலசுப்ரமணியன்

‘சிந்துநதி பூ’ படம் வந்த புதிதில், அந்தப் படத்தின் பாடல்கள் கோயில் திருவிழாக்கள் தொடங்கி டவுன்பஸ் வரை ஒலித்துக்கொண்டிருந்தன. நீண்ட வருடங்களுக்குப் பிறகு விஜய் டிவி, மதுரை ராமர் புண்ணியத்தில் ‘ஆத்தாடி என்ன உடம்பு’ பாடல் திடீர் ஹிட் ஆகி, சோஷியல் மீடியாக்களிலும் உலா வருகிறது. பாட்டுக்கு இசையமைத்த சௌந்தர்யன் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்ற நீண்ட தேடலில் சிக்கினார். சாலிகிராமத்தில் ரெக்கார்டிங் தியேட்டரில் இருப்பதாகச் சொன்னவரை, நேரில் சந்தித்தேன்.

“நான் காலேஜில் படிக்கும்போது ‘உன் பேர் என்ன?’ என்று வாத்தியார் கேட்டார். நான் ‘சௌந்தரராஜன்’ என்று சொன்னேன். ‘ஓ... நீ டிஎம்எஸ் மாதிரி பெரிய பாடகனா?’ என்று எனக்குள் இசையை விதைத்தவர் அவர்தான். என் காலேஜ் பசங்களும் நானே எழுதி மெட்டுப்போட்டுப் பாடியதைக்கேட்டு ‘சினிமாவுக்குப் போனால் நீ பெரிய ஆளா வருவ’ என்று என்னை ஏற்றிவிட்டனர். தியாகராஜன் என்ற இசை ஆசிரியரிடம் சங்கீதமும், ஜெகதீஷ் என்பவரிடம் கிடாரும் கத்துக்கிட்டேன். சினிமா வாய்ப்புக்காக ஒவ்வொரு இயக்குநரையும் ஒவ்வொரு அலுவலகத்தையும் தேடித் தேடி அலுத்துக் களைத்துப்போனபோது ஒருநாள், இயக்குநர் கே.எஸ்.ரவிகுமாரைச் சந்தித்தேன். அவரது முதல் படம் ‘புரியாத புதிர்’ வெளியாகியிருந்த நேரம்.

‘முதல்படம் நல்லபேர்தான் வாங்கிக் கொடுத்திருக்கு. ஆனா கமர்ஷியலா பெரிசா ஒண்ணுமில்ல... நானே அடுத்து என்ன பண்றதுன்னு யோசிச்சிட்டு இருக்கேன்’னு சொன்னார். அப்பவும் மனசைத் தளரவிடாம நான் எழுதி இசையமைச்ச பாடல்களைப் பாடிக் காண்பிச்சேன். பாடல் வரிகளை உள்வாங்கிக் கேட்டு ரசிச்சார்.



அடுத்ததா ரவிகுமார் சாரை சூப்பர் குட் பிலிம்ஸ்ல கூப்பிட்டாங்க. என்னையும் அவர் கூட்டிட்டுப்போய் ஆர்.பி.சௌத்ரி சாரிடம் அறிமுகம் கொடுத்தார். ரவிகுமார் சாரிடம் பாடிக்காட்டினதைப் போலவே சௌத்ரி சாரிடமும் பாடினேன். அவருக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு. ‘ஓ நல்லா இருக்கே... இவரையே மியூசிக் டைரக்டரா போட்டுடலாம்’னு ரவிகுமார் சாரிடம் சொன்னார். ஒரு வழியா ‘சேரன் பாண்டியன்’ படத்துல ஒப்பந்தமானேன்.

மறுநாள் ஏ.வி.எம் ரெக்கார்டிங் தியேட்டரில் பாடல் பதிவு. ‘காதல் கடிதம் வரைந்தேன் உனக்கு...’ பாடலைப் பதிவுசெஞ்சப்ப அங்க இருந்தவங்க ‘இசை, பாட்டு எல்லாம் புதுசா இருக்கே...’ என்று ரவிகுமார் சாரிடமும், சௌத்ரி சாரிடமும் பாராட்டித் தள்ளினாங்க. இளையராஜாவின் இசையில் உருவான ‘என் ராசாவின் மனசுல’, ‘சின்னத்தம்பி’ ரிலீஸான காலகட்டத்துல ‘சேரன் பாண்டியன்’ படமும் ரிலீஸாகி செம ஹிட் ஆச்சு. எனக்குப் பெரிய புகழைத் தேடிக்கொடுத்தது. அதன்பிறகு சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிப்பில் கே.எஸ்.ரவிகுமார் டைரக்‌ஷனில் வெளிவந்த ‘புத்தம் புது பயணம்’, ‘முதல் சீதனம்’, ‘முத்துக்குளிக்க வாரிகளா’ படங்களுக்கு நான்தான் இசையமைச்சேன். ஆனா அந்தப் படங்கள் எதிர்பார்த்த அளவுக்குப் போகல.

‘சேரன் பாண்டியன்’ ஹிட் படம் கொடுத்தும் வெளி சினிமா கம்பெனில இருந்து யாரும் அழைக்கலையேன்ற வருத்தம் எனக்கு இருந்தது. இடையில் நாலு வருஷம் கழிச்சு ‘சிந்துநதி பூ’ படத்துக்கு இசையமைக்கிற வாய்ப்பை

TabletBarn.com



குஞ்சுமோன் சார் கொடுத்தார். 'சிந்துநதி பூ' படத்துக்கு எல்லாப் பாடலையும் வைரமுத்து சார் எழுதியிருந்தார். 'அடிப்போடி உள்ளுக்குள்ளே போட்ட விதை முட்டி முட்டி முளைச்சு விடாதா...', 'அடியே அடி சின்னப்புள்ளே...', 'கடவுளும் நீயும் ஒரு தாய் பிள்ளை இருவரும் தனிமரம்தானே' போன்ற பாடல்கள் எல்லாம் ஹிட்டாச்சு.

இதுவரைக்கும் 52 படத்துக்கும் மேல இசையமைச்சிருக்கேன். எவ்வளவு ஏற்றங்களும் மாற்றங்களும் வந்தாலும் இசைதான் என் வாழ்க்கை. இசை என்னைக் கைவிடாது. இப்போ 'லைக் பண்ணுங்க ஷேர் பண்ணுங்க' படத்துக்கு இசையமைச்சிட்டிருக்கேன். இளையராஜா வீட்டில் இருந்து கார்த்திக், யுவன் ஷங்கர் ராஜா வந்தாங்க. ஏ.ஆர். ரஹ்மானிடம் இருந்து ஜி.வி.பிரகாஷ் வந்தார். என் வீட்டுல இருந்தும் என் மகன் இசையமைப்பாளரா விரைவில் வருவான்" என்று நம்பிக்கையோடு பேசியவரைப் புகைப்படம் எடுக்கத் தயாரானபோது, திடீரென முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தார்.

நீண்டநேரம் அவரை ஆசுவாசப்படுத்தி, பேசினேன். "என் மனைவி அப்பவே எம்.டெக் படிச்சிட்டு டெக்ஸ்டைல் என்ஜினீயரிங் காலேஜுக்கு பிரின்ஸ்பலா இருந்தாங்க. எனக்கு இசைத்தொழிலில் சறுக்கல் ஏற்பட்டப்ப எல்லாம் அவங்கதான் தாங்கிப்பிடிச்சாங்க. ரெண்டு மகன்கள். பெரியமகன் அமர்கீத் காலேஜ்ல பிலிம் டெக்னாலஜி படிக்கிறான். சின்னவன் கவிமொழியன். டிஏவி ஸ்கூல்ல பத்தாம் க்ளாஸ் படிச்சிட்டிருந்தான். பெரியவனை மியூசிக் டைரக்டராவும், சின்னவனை நீதிபதியாவும் ஆக்கணும்னு நானும், என் மனைவியும் பெரிய கனவுல மிதந்துட்டிருந்தோம். ஒருநாள் சின்னவனுக்கு கன்னத்துல திடீர்னு தேமல் வந்தது. சாதாரண தேமல்னு ஆரம்பத்துல விட்டுட்டோம். ஒருநாள் சந்தேகம் வந்து மெடிக்கல் செக்கப் செஞ்சப்ப கேன்சர்னு சொன்னாங்க. அப்படியே உடைஞ்சு போயிட்டோம். தனியார் ஆஸ்பிட்டல்ல ட்ரீட்மென்ட் பார்த்தோம். எந்த ரவிகுமார் சார் என்னை சினிமாவில் அறிமுகம் செஞ்சாரோ அவர்தான் உயிருக்குப் போராடின என் மகன் மருத்துவச் செலவுக்கு 2 லட்ச ரூபாய் கொடுத்து உதவினார். ஆஸ்பிட்டல்ல என் மகன் தினமும் மரணத்துடன் போராடிக்கிட்டு இருந்தான். ஒவ்வொருநாளும் 'அப்பா என் உயிரைக் காப்பாத்திடுவீங்களாப்பா'ன்னு கேட்கும்போதெல்லாம் ரணவேதனையா இருக்கும். நாலு வருஷத்துக்கு முன்னாடி அவன் இறந்துட்டான். சின்னவனுக்கு போட்டோ பிடிக்கறதுன்னா ரொம்பப் பிடிக்கும். அதனாலதான் அவன் போன பிறகு நாலு வருஷமா நான் போட்டோவே எடுத்துக்கலை" என்று அழுதவரைத் தேற்றி, புகைப்படம் எடுத்தோம்.

இசைக்குப் பின்னால் எத்தனை சோகம்!

வி



TabletBarn.com

**? புறநானூறு சொல்லி பட்ஜெட் தாக்கல் செய்த நிர்மலா சீதாராமனுக்கு புதுக்குறள் ஒன்று சொல்லுங்களேன் பார்ப்போம்!**

ஹோட்டல் சாப்பாடும் அதற்கான ஜிஎஸ்டியும்
தீரா இடும்பை தரும்.

**இரா. கமலக்கண்ணன், சித்தோடு.**



தனித்தனியே பிரித்துவைத்த வங்கியெல்லாம்
தமிழச்சிநீ சேர்த்து மகிழ்!

**எஸ்.ஏ. வாசுதேவன், கோவிலம்பாக்கம்.**

வரிஏய்ப்பு செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
ரெய்டு செய்து விடல்!

**absivam**

ஜிஎஸ்டியில்வந்த பணம் பத்தாதபோது சிறிது
ஆர்பிஐ ரிசர்விலும் கைவைக்கப்படும்.

**mekalapugazh**

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
ஜிஎஸ்டியால் சுட்ட வடு.

**manipmp**

திருக்குறளைவிட சேக்கிழார் எழுதிய 'கம்பராமாயணத்தில்' இருந்து சொன்னா நல்லா இருக்கும்னு நினைக்கிறேன்.

**Ramesh46025635**

மந்தநிலை வந்தாலும் எந்தநிலை வந்தாலும்,

# குச்சிமிட்டாய் ஜெயக்குமார், குருவிரொட்டி பன்னீரு!

TamilRarn.com

# வாசகர் மேடை

திசைதிருப்ப உண்டு மதம் என்னும் மிருகம்.

smhrkalifa

நிறைகுடம் தளும்பாது ஆனால்
நிர்மலா நிர்வாகம் தளும்பி விடும்.

AmbrosePravin

வயலில் இறங்க வேண்டிய யானை
வங்கியில் நுழைய லாமா..?

Govindasamy Kalaimani

எட்டுத் தொகைபாடி என்னபயன் - நல்ல
பட்ஜெட் அமையா விடின்.

Gaffor Ali

**? ஸ்போர்ட்ஸ் படங்களில் உங்களை எரிச்சலூட்டும் விஷயம் எது?**





சொந்தக் காசிலேயே வீரர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரும் கோச்...

இரா. கமலக்கண்ணன், சித்தோடு

மேட்ச் ஃபைனலின் போது கோச் ஒன்று காணாமல்போய் விடுவார்... அல்லது, மிகுந்த உடல் வலியுடனோ, மன வலியுடனோ தான் காணப்படுவார்.

எஸ்.ஏ. வாசுதேவன், கோவிலம்பாக்கம்.

தோற்பதுபோல வந்து கடைசி நிமிஷத்தில் ஏற்படுத்தும் அற்புதங்கள். ஏன் நல்லா விளையாடுறவன் முதல்ல இருந்தே ஆதிக்கம் செலுத்தக்கூடாது. இந்த ஸ்போர்ட்ஸ் படங்களோட க்ளைமேக்ஸ் பார்த்தா ஏதோ அதிர்ஷ்டத்துல ஜெயிச்ச மாதிரியே வைக்குறாங்க! ‘கில்லி’ விஜய்ல ஆரம்பிச்சு, ‘கராத்தே கிட்’ வரைக்கும் ஒரே கான்செப்ட்!

kaattuvaasi

பணக்காரவீட்டுப் பிள்ளை ஜெயிக்கவேண்டுமென வில்லன் கோச் கங்கணம் கட்டித் திரிவது.

pachaiperumal23

என்னதான் செமி ஃபைனலில் தோற்றாலும் ஃபைனலில் ஜெயித்துக்காட்டும் வீரம்.

Gopi_Ontheway

பார்வையாளர் மாடத்துல லவ்வரையோ, வேண்டியவங்களையோ பார்த்திட்டாக்கூட அடிஷனல் கோல் கிடைக்கும் என்பது எழுதப்படாத விதி... தலைவிதி.

Jerry Darvey

ஒரே அணியில் ஈகோ பிடித்தவர் ஒருவர் இருப்பார், அவர் எதிர் அணிக்கு உதவுவது போலவே இருக்கும், கடைசியில் திருந்திவிடுவார், டெம்ப்ளேட்!

Jaleel Shahul Hameed

ஒருத்தன் வாழ்நாள் பூரா ட்ரெயினிங் பண்ணுவான், ஒரு வெங்கலக் கோப்பைகூடக் கிடைக்காது. ஆனா ஹீரோ நாலுநாள் ட்ரெயினிங் ஆய்ட்டு கப் ஜெயிப்பார் பாருங்க... எ.கா. பத்ரி பாக்ஸர், மான்கராத்தே பாக்ஸர்.

Manikandan Thirunavukkarasu

**? ஃபாரின் டூர் போகும் எடப்பாடி, இந்தியா திரும்பும்போது என்ன வாங்கி வரலாம்? ஜாலி ஐடியாக்கள் ப்ளீஸ்...**

முதல்வர் நாற்காலியை *OPS* அசைக்காமல் இருக்கவும்,

'ஜெ'வின் மருத்துவமனை நாள்களை விவரிக்கும் அமைச்சர்களின் நாக்கை ஒட்டவும்,

'தரமான ஃபாரின் பசை' வாங்கி வரட்டும் *EPS*.

த. இராஜு வேல், தேனி.

பார்த்த கணத்தில் ஸ்லீப்பர் செல்லை

அடையாளம் காட்டும் ஹைடெக் ஃபைண்டர்.

இ.எம்.எஸ். பாலகுமாரன், போரூர்.

பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா உருவம் பொறித்த டி-ஷர்ட்கள் வாங்கி வரலாம்.

amuduarattai

அண்ணன் ஜெயக்குமாருக்குக் குச்சி மிட்டாயும், தலைவர் ஓ.பி.எஸ்ஸுக்குக் குருவி ரொட்டியும் வாங்கி வரலாம்.

Pethusamy

விஜயபாஸ்கருக்குக் கணக்குவழக்கெலாம் டயரியில் எழுதி மாட்டாம இருக்க ஒரு ஆப்பிள் லேப்டாப் வாங்கிட்டு வரலாம்...

johnwick194

பன்னீர்க்கு மினி ஜெ.ஸ்டேட்சூ... தங்கமணிக்கு கோல்டு ரிமோட் ஸ்விட்ச்... வேலுமணிக்கு டைமண்ட் வாட்ச்... ஜெயக்குமார்க்கு

TabletBam.com



# வாசகர் மேடை

பிளாட்டினம் ஃபிஷ்... திண்டுக்கல் சீனிவாசனுக்கு சில்வர் போன்சாய் ட்ரீ...!

**Raja90881339**

திரும்பி வரும் வரை மீண்டும் தர்மயுத்தம் செய்யாமல் இருந்த ஓபிஎஸ்ஸின் மனதைரியத்தைப் பாராட்டி, தான் அணிந்திருந்தது போலவே ஒரு கோட் சூட் வாங்கி வந்து பரிசளிக்கலாம்..!

**Pamaran Paramaguru**

சிங்கிள் சிங்கமாகக் களத்தில் நின்று கலக்கும் சின்ன ஓபிஎஸ் அவர்களின் மனதைரியத்தைப் பாராட்டி ஒரு ஃபாரின் சென்ட் பரிசாக வாங்கி வரலாம்.

**ரம்யா ரவிக்குமார்**

டெலஸ்கோப் வாங்கிட்டு வந்து செல்லூர் ராஜுக்குத் தந்தா அவரோட ஆராய்ச்சிக்கு உதவியா இருக்கும்.

**Ravikumar Mgr**

**? பள்ளிப்பருவம்... கல்லூரிப்பருவம்...குடும்பத்தலைவன் - ஆண்களின் வாழ்க்கையை மூன்றே வார்த்தைகளில் விளக்குக.**

பள்ளிப்பருவம் - திரியர்ஸ்

கல்லூரி - அரியர்ஸ்

குடும்பத்தலைவன் - வொரியர்ஸ்

**மல்லிகா குரு, மேற்கு மாம்பலம்.**

சிக்கன் பிரியாணி

சிக்கன் நூடுல்ஸ்

உப்புமா

**malarsoorya**

கார்ட்டூன்சேனல்

மியூசிக்சேனல்

நியூஸ்சேனல்

**AmbikaArun**

1.முத்தமிழ் மன்ற உறுப்பினர். 2.கவுன்சிலர். 3.கவர்னர்.

**Balumarappan2**

பள்ளிப்பருவம் - அப்பாவின் பேச்சைக் கேட்பது.

கல்லூரிப்பருவம் - காதலியின் பேச்சைக் கேட்பது.

குடும்பத் தலைவன் - மனைவி, குழந்தைகளின் பேச்சைக் கேட்பது. ஒரே கஷ்டம்ப்பா!

**imayavan340**

எப்பவும் படிப்பா, என்ன வாழ்க்கை இதுன்னு நார்மலா நினைச்சா பள்ளி மாணவன்.

என்ன வாழ்க்கைடா இதுன்னு சந்தோஷமா இருந்தா கல்லூரி மாணவன்.

என்னடா வாழ்க்கை இதுன்னு சோகமா தோணுச்சுன்னா அவன் குடும்பத்தலைவன்.

**saravankavi**

“குச்சி மிட்டாய் குருவி ரொட்டி, KFC சிக்கன், BP & SUGAR TABLETS!”

**Srs Ramasubramanian**

**? ‘35 வயதுவரை இளைஞரணியில் சேரலாம்’ என்று தி.மு.க-வில் புதிய விதி உருவாக்கப்பட்டுள்ளது. தி.மு.க-விலும் அ.தி.மு.க-விலும் வேறு என்னென்ன விதிகளைக் கொண்டுவரலாம்?**

ஒவ்வொருவரும் ஒரு ஸ்லீப்பர் செல்லை எதிர்க்கட்சியில் உருவாக்க வேண்டும்.

**manipmp**

சினிமாவில ஒரு சீன்லயாச்சும் தலை காட்டின ஆளுக்குத்தான் பதவின்னு ஒரு ரூல் கொண்டு வரலாம்.

**ItsJokker**

சயின்டிஸ்ட், ஹிஸ்டோரியன், ஜியோகரபி, மேத்ஸ் இத்யாதி என எல்லா கேட்டகரிக்கும் ஒதுக்கீடு ஃபிக்ஸ் பண்ணி, சேர்த்துக்கொள்ளலாம். ஏன்னா, திடீர்னு தெர்மாகோல் சயின்ஸ், சேக்கிழார் காவியம் போன்றவற்றைத் தவிர்த்து intel கட்சி மதிப்ப தேத்திக்கலாம் இல்லியா?

**Sowmya Red**

கட்சில சேர்ந்தா, குறிப்பிட்ட வருஷத்துக்கு வேற கட்சிக்குத் தாவக்கூடாதுன்னு ஒரு விதியை கண்டிப்பா எல்லாக் கட்சியுமே சேர்க்கலாம்.. ஏன்னா, ஒரு நாள் செய்தி பார்க்கலைன்னாலும், இப்ப யாரு எந்தக் கட்சில இருக்காங்கன்னு தெரியமாட்டேங்குது.

**ரம்யா ரவிக்குமார்**

வி



TabletBarn.com

“ டினா வின்சென்ட்



**‘ஆனந்த விகடன்’ வாசகர்களுக்காக வாரந்தோறும் ஒவ்வொரு விஷயத்தைப் பரிந்துரைக்கிறார்கள் பிரபலங்கள். இந்த வாரம், பருமனான உடல்வாகு கொண்டவர்களுக்கான ஆடைத் தேர்வுகளைப் பரிந்துரைக்கிறார் சென்னையில் உள்ள ‘XXL டினா வின்சென்ட்’ லேபிளின் நிறுவனர் டினா வின்சென்ட்.**



முன்பெல்லாம் கடைகளில் ஸ்மால்(S), மீடியம்(M) மற்றும் லார்ஜ்(L) என்ற வழக்கமான அளவுகளே கிடைத்தன. காலப்போக்கில் எக்ஸ்ட்ரா ஸ்மால்(XS), எக்ஸ்ட்ரா லார்ஜ்(XL) அளவுகளும் கிடைக்க ஆரம்பித்தன என்றாலும், டபுள் எக்ஸ்செல்(XXL) அளவில் உடைகள் அனைத்துக் கடைகளிலும் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அதில் அதிக வெரைட்டி இருக்காது. இதற்குத் தீர்வாக, பல முன்னணி ஆடை வடிவமைப்பு நிறுவனங்கள், ‘ப்ளஸ் சைஸ்’ நபர்களுக்கும் ஒரு ஸ்டாண்டர்டு சைஸில் உடை வடிவமைக்கத் திட்டமிட்டுவருகின்றன. சில நிறுவனங்கள் ப்ளஸ் சைஸ் உடைகளை ஏற்கெனவே சந்தைக்கு அறிமுகப்படுத்திவிட்டன.

பருமனான பெண்களுக்கான தீர்வு, தையல் கலைஞர்கள் மற்றும் ஆடை வடிவமைப்பாளர்கள்தான். ப்ளஸ் சைஸ் நபர்களுக்கு என்றே ஆடை வடிவமைக்கும் டிசைனர்கள் பலர் இருக்கின்றனர். ‘டிசைனர் என்றால் கட்டணம் அதிகமாக இருக்குமே’ என்று யோசிப்பவர்களுக்கு ஒரு தீர்வு இருக்கிறது. சல்வார், ஃபுல் டிரெஸ், பேன்ட், ஸ்கர்ட் என நீங்கள் அடிக்கடி உபயோகிக்கும், உங்களுக்கு விருப்பமான ஓர் உடையை ஒரு டிசைனரிடம் வடிவமைத்துக்கொள்ளுங்கள். பிறகு, உங்களுக்கு அருகில் உள்ள ஒரு தேர்ந்த தையல் கலைஞரிடம், அந்த உடையை அளவாகக் கொடுத்து, அடுத்தடுத்த உடைகளை உங்கள் பட்ஜெட்டுக்குள் தைத்துக்கொள்ளலாம்.

பருமனானவர்கள் சந்திக்கக்கூடிய முக்கியப் பிரச்னை, அதிக எடை காரணமாக உடல்பாகங்களின் தசைப்பகுதிகளில் ஏற்படும் தொய்வு. இறுக்கமான உடைகளை அணியும்போது இந்தத் தொய்வு கண்களை உறுத்தும். எனவே இந்தப் பிரச்னை உள்ளவர்கள் இறுக்கமான உடைகளைத் தவிர்ப்பதுடன், சரியான உள்ளாடைகளையும் தேர்வு செய்வது அவசியம்.



உள்ளாடைகளைப் பொறுத்தவரையில், அண்டர் ஒயர் பிராக்களைத் தேர்ந்தெடுக்கும்போது நல்ல சப்போர்ட் கொடுக்கும். ஃபுல் பேன்டியைத் தேர்வு செய்யும்போது இது சராசரி பேன்டியைப் போல் இல்லாமல், சற்றே வயிற்றின் மேல்பகுதியில் இருந்து ஆரம்பித்து தசைகளின் தொய்வைக் கட்டுப்படுத்தும். தவிர, ஷேப்வேர்களையும் பயன்படுத்தலாம். இவையெல்லாம் உடலமைப்பை அழகாகக் காட்டுவதுடன் தொய்விலிருந்தும் காக்கும்.

உடைக்கான மெட்டீரியலைத் தேர்வு செய்யும்போது ரேயான், சிஃபான், ஜியார்ஜெட், க்ரேப் போன்றவற்றைத் தேர்வு செய்யுங்கள். இது அங்க அசைவுகளை வெளிப்படுத்தாமல் இருக்கும்.

TabletBarn.com

## பரிந்துரை

இந்த வாரம்

# பருமனான உடல்வாகு கொண்டவர்களுக்கான உடைகள்!

### ஆண்கள் ஏரியா!

பேன்டுக்குள் சட்டையைத் திணித்து, இறுக்கமாக பெல்ட் அணியும் பழக்கமுள்ள பருமனான இந்திய ஆண்கள், உடல்பருமனைச் சமாளிக்க பெண்களைப் போல ஆடைகளில் நிறைய விஷயங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. இவர்களுக்கான எளிய தீர்வு, பிளேசர், கோட் போன்ற ஜாக்கெட் வகைகள். தற்போது இது வழக்கமான உடையாக மாறிவருகிறது.

ஜாக்கெட் அணிய முடியாத பட்சத்தில் சட்டையை டக் இன் செய்யாமல், லூஸான முழுக்கைச் சட்டையை அணியலாம்.

டக் இன் செய்ய வேண்டிய அவசியம் இருப்பின் பெல்ட்டின் பக்கிள் பெரிதாகவோ ஃபேன்ஸியாகவோ இல்லாமல் சிம்பிளாக இருப்பது அவசியம். அதேபோல் பட்டையாக இல்லாமல் சற்று மெல்லிய பெல்ட்டை அணியவும்.

பருமனான ஆண்கள் குர்தா - பைஜாமா, ஜீன்ஸ் - லூஸ் டி ஷர்ட் போன்ற உடைகளை அணியும்போது பார்ப்பவர்களை 'டயட்டா?', 'எடை குறைச்சுட்டீங்களா?' எனக் கேட்க வைக்கலாம்.

உங்கள் உடலின் ப்ளஸ், மைனஸ்களைச் சரியாகப் புரிந்துகொண்டால், மற்றவர்களைப் போலவே நீங்களும் அனைத்து வகையான உடைகளையும் அணியலாம். உதாரணமாக, இடுப்புப்பகுதி பெரிதாக இருப்பவர்கள் ஸ்கர்ட், ஜீன்ஸ், லெகிங்ஸ், பலாசோ என எது அணிந்தாலும் மேலாடையை சற்று லூஸாகவும், நீளமாகவும் அணிந்துகொள்ளலாம். அனார்கலி உங்களுக்குப் பொருத்தமான ஓர் உடை.

உடலின் மேல்பாகம் பெரிதாக இருப்பவர்கள் ஷார்ட் ஸ்லீவ் மற்றும் ஸ்லீவ்லெஸ் உடைகளைத் தவிர்க்கவும். ஃபுல் ஹேண்டு, த்ரீ ஃபோர்த், எல்போ ஸ்லீவ் போன்றவை உங்களை ஸ்லிம்மாகக் காட்டும்.




ஃப்ளோரல் மற்றும் பிரின்ட்டட் டிசைன்களைத் தவிர்த்து, டார்க், ப்ளெய்ன் உடைகளாகத் தேர்ந்தெடுங்கள். சல்வாரைப் பொறுத்தவரை, டாப் மற்றும் பாட்டம் இரண்டையும் ஒரே நிறத்தில் தேர்வு செய்து,துப்பட்டாவை கான்ட்ராஸ்டாகப் போடலாம். இது உங்களை ஒல்லியாக மட்டுமல்லாமல் உயரமாகவும் காட்டும்.

சிலருக்கு உடல் பருமனாக இருந்தாலும் கைகள், கால்கள் எனச் சில பகுதிகள் மெலிதாக இருக்கும். அதற்கு ஏற்றவாறு விதவிதமான டிசைனர் ஸ்லீவ் வைத்துத் தைத்த உடைகள், ஸ்கின்னி பேன்ட் என உங்களுடைய ப்ளஸ் பாயின்ட்களை ஹைலைட் செய்யும் விதமாக உடைகளை அணியும்போது மைனஸ்கள் மறைக்கப்படும்.

அனைத்துக்கும் மேலாக, நாம் எப்படி இருக்கிறோம் என்பதில் நமக்கான தன்னம்பிக்கையை முன்னிலைப்படுவது மிக மிக அவசியம்.

தொகுப்பு: **இந்துலேகா.சி**

TabletBarn.com

ஆ.பழனியப்பன் ஓவியம்: பாரதிராஜா

தேசத்துரோகச் சட்டப் பிரிவில் மாணவர் தலைவர் கன்ஹையா குமார் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, தேசிய அளவில் சர்ச்சையின் மையமாக விளங்கிய டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (ஜே.என்.யூ), மீண்டும் ஒரு சர்ச்சையில் சிக்கியுள்ளது.

புகழ்பெற்ற வரலாற்று அறிஞரான ரொமிலா தாப்பர், ஜே.என்.யூ-வில் பல ஆண்டுகள் பணியாற்றியவர். ஜே.என்.யூ-வை வளர்த்தெடுத்த பேராசிரியர்களில் ஒருவர் என்ற பெருமைக்குரியவர். பணி ஓய்வுக்குப் பிறகு, கௌரவப் பேராசிரியர் *(Professor Emeritus)* என்ற அந்தஸ்து இவருக்கு வழங்கப்பட்டது. தற்போது, அந்த அந்தஸ்தைப் பரிசீலனை செய்வதற்காக, தன்விவரக் குறிப்பை (*Curriculum vitae*) அனுப்புமாறு ரொமிலா தாப்பரிடம் ஜே.என்.யூ நிர்வாகம் கேட்டிருப்பதுதான் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது. பல்கலைக்கழகத்தின் இந்த நடவடிக்கையைக் கல்வியாளர்கள் பலரும் விமர்சித்துள்ளனர்.

ஜே.என்.யூ-வில் பணியாற்றிய பொருளாதாரப் பேராசிரியர் பிரபாத் பட்நாயக், “ஓய்வுபெற்ற பேராசிரியர்களுக்கு, கடந்த காலத்தில் அவர்கள் ஆற்றிய அளப்பரிய பங்குக்காகப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுவதுதான் கௌரவப் பேராசிரியர் என்கிற அந்தஸ்து. எதிர்காலத்தில் அவர்கள் ஆற்றப்போகிற பணிகளுக்காகவோ, ஆற்ற வேண்டிய பணிகளுக்காகவோ வழங்கப்படுவது அல்ல.ஜே.என்.யூ நிர்வாகத்தின் நடவடிக்கை முரண்பாடானதாக இருக்கிறது. கௌரவப் பேராசிரியர்களுக்கு எந்தவொரு சிறப்பு ஏற்பாடும் வழங்கப்படுவது கிடையாது. ஊதியமும் கிடையாது. இந்த அந்தஸ்து, அவர்களின் வாழ்நாளுக்கானது” என்று கூறியுள்ளார்.

டெல்லி முதல்வரான அர்விந்த் கெஜ்ரிவால், “அரசின் செயல்பாடுகளை விமர்சிப்பதனாலேயே, உலகின் மிகச்சிறந்த வரலாற்று அறிஞரான ரொமிலா தாப்பரிடம் தன்விவரக் குறிப்பு கேட்டுள்ளார்கள். நம்முடைய உயர்ந்த பல்கலைக்கழகம் சங்பரிவாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இதுபோன்ற செயல் நடக்கிறது” என்று விமர்சித்துள்ளார்.

“புகழ்பெற்ற ஒரு வரலாற்று அறிஞரைச் சிறுமைப்படுத்துகிற, இழிவுபடுத்துகிற முயற்சி” என்று விமர்சித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் அருணனிடம் பேசினேன்.

“ரொமிலாதாப்பர், சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒரு வரலாற்றியலாளர். வரலாற்றுத்துறையில் அவர் செய்துள்ள ஆய்வுகளும், அவருடைய நூல்களும் உலகப் புகழ்பெற்றவை. அப்படிப்பட்ட ஒரு அறிஞரைக் கௌரவப் பேராசிரியராக வைத்துக்கொள்ளவே எந்தவொரு பல்கலைக்கழகமும் விரும்பும். ஆனால் அவரிடம், உங்கள் பயோடேட்டாவைக் கொடுங்கள் என்று கேட்பது சிறுமைத்தனம், உலகின் மிகப்பெரிய தத்துவ ஞானிகளில் ஒருவரான பெர்ட்ரண்ட் ரஸ்ஸலைச் சந்தித்து உரையாடியவர் ரொமிலா. இப்படிப்பட்ட ஓர் அறிஞரை அவமதிப்பது என்பது, ஒட்டுமொத்த இந்திய அறிவுலகத்தையே அவமதிப்பதற்குச் சமம்.

வரலாறு என்றால் அதை உரிய ஆதாரங்களுடன் கட்டமைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர் ரொமிலா தாப்பர். ஆதாரம் இல்லாமல் எதையும் அவர் வரலாறு என்று சொன்னது கிடையாது. எனவே, அயோத்யா விவகாரம், ஆரிய திராவிடப் பிரச்னை, மன்னர்கள் பற்றிய பார்வை என இந்துத்துவவாதிகள் முன்வைக்கிற கருத்தோட்டங்களுக்கு இவர் உடன்படுபவர் அல்லர். எனவே, இப்படிப்பட்ட ஒருவர் பல்கலைக்கழகத்தில் இருப்பது, தங்களின் வகுப்புவாத வரலாற்றுக் கண்ணோட்டத்துக்கு ஒத்துவராது என்பதால், அவரை அங்கிருந்து அகற்ற முயற்சி செய்கிறார்கள். இதை ஒரு தனிப்பட்ட விஷயமாகப் பார்க்க முடியாது.அரசியல்சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளை ஒவ்வொன்றாக அழித்துக் கொண்டிருக்கும் மத்திய ஆட்சியாளர்கள், இப்போது



அருணன்



ராஜலட்சுமி

# அறிவுத்துறைக்கு நிகழ்ந்த அவமானம்!



TabletBarn.com

## பத்மபூஷண் விருதை மறுத்தவர்!

பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய அதிகாரியின் மகளான ரொமிலா தாப்பர், லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்தவர். குருக்ஷேத்ரா பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சில ஆண்டுகள் பணியாற்றியவர், பின்னர் ஜே.என்.யூ-வில் சேர்ந்தார். 1991-ல் பணி ஓய்வுபெற்ற அவருக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக, கௌரவப் பேராசிரியர் (Professor Emeritus) என்ற அந்தஸ்தை 1993-ம் ஆண்டு ஜே.என்.யூ அவருக்கு வழங்கியது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் குறித்து ஆய்வைத் தொடங்கியவர். பண்டைய இந்தியா குறித்த இவர் செய்துள்ள ஆய்வுகள் முக்கியமானவை. ‘அசோகரும் மௌரியப் பேரரசின் வீழ்ச்சியும்’ என்ற இவரது ஆய்வு நூல், அதுவரை இருந்துவந்த இந்தியா பற்றிய தட்டையான கண்ணோட்டத்தை அடியோடு புரட்டிப்போட்டது.

அமெரிக்க லைப்ரரி காங்கிரஸ் அளிக்கும், நோபல் பரிசுக்கு இணையான ‘க்ளுஜ்’ விருதைப் பெற்றுள்ள ரொமிலா தாப்பர், இந்திய அரசு இவருக்கு இருமுறை அறிவித்த பத்மபூஷண் விருதை ஏற்க மறுத்துவிட்டார். ‘கல்வி நிறுவனங்கள் அளிக்கும் விருதுகளை மட்டுமே ஏற்பேன். அரசின் விருதுகளை ஏற்கமாட்டேன்’ என்று விளக்கமளித்தார்.

அறிவுத்துறையையும் அழிக்கப்பார்க்கிறார்கள். அதற்கான ஆரம்பக்கட்டம்தான் இது என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

கற்பிதங்களை வரலாறு என்றும், புராணங்களை சரித்திரம் என்றும் சொல்பவர்கள்தான் மத்தியில் ஆட்சியில் இருக்கிறார்கள். அவர்கள் தங்களின் கருத்துக்கு மாறுபட்ட நிலைப்பாடு கொண்ட வரலாற்று அறிஞர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தவே இப்படிச் செய்கிறார்கள். ஆனானப்பட்ட ரொமிலா தாப்பருக்கே இந்த நிலைமையா என்று மற்றவர்கள் அஞ்சுவார்கள் என்ற திட்டத்துடன் இத்தகைய நடவடிக்கையை எடுக்கிறார்கள்” என்றார்.

பல்கலைக்கழக விதிகளின்படி எடுக்கப்படும் வழக்கமான ஒரு நடவடிக்கைதான் என்று சொல்லும் ஒரு சாரார், இந்தப் பிரச்னை தேவையில்லாமல் அரசியல் ஆக்கப்படுகிறது என்கிறார்கள். இதுகுறித்து பா.ஜ.க-வின் அறிவுசார் பிரிவின் தமிழகத் தலைவரும் ஓய்வுபெற்ற பேராசிரியருமான என்.ராஜலட்சுமி, “பல்கலைக்கழக மானியக் குழுவில் (யூ.ஜி.சி) சில விஷயங்களைச் சரிசெய்வதற்காக, சில மாற்றங்களைக் கொண்டுவருகிறார்கள். எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் விதிமுறைகளை மாற்றியிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. பொதுவாக, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஓய்வுபெற்ற பேராசிரியர்களில் சிலருக்கு கௌரவப் பேராசிரியர் என்ற அந்தஸ்து வழங்கப்படும். அது குறிப்பிட்ட காலத்துக்குத்தான். சிலர் ஊதியத்துடனும், சிலர் ஊதியம் இல்லாமலும் கௌரவப் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தனியாக அறை ஒதுக்கப்படுகிறது. ஜே.என்.யூ., ஐ.ஐ.டி போன்ற பெரிய கல்வி நிறுவனங்களில் கௌரவப் பேராசிரியர்கள் நிறைய பேர் இருப்பார்கள்.

ஜே.என்.யூ என்பது எல்லா அரசியல் சித்தாந்தங்களுக்கும் இடம் அளிக்கிற ஓர் இடம். பேராசிரியர் ரொமிலா தாப்பர் அவரின் துறையில் நிறைய ஆய்வுகள் செய்திருக்கிறார். அதற்குள் நாம் போகவேண்டியதில்லை. இப்போது அவருக்கு 87 வயது ஆகிறது. இந்த வயதில் அவரால் அந்த இடத்தில் இருந்து என்ன செய்ய முடியும், அவரால் அந்த இடத்தில் தொடர முடியுமா என்று அறிந்துகொள்வதற்காக நிர்வாகம் அப்படிக் கேட்டிருக்கலாம்.

கௌரவப் பேராசிரியர்கள் அனைவரும் ஒவ்வோர் ஆண்டும் தங்களின் பணிகள் குறித்த விவரங்களை மதிப்பீட்டுக்காகச் சமர்ப்பிக்க வேண்டும். தன்விவரக் குறிப்புடன் சேர்த்து அதைச் சமர்ப்பிக்க வேண்டும். அதுபோலத்தான், ஜே.என்.யூ-வில் நீண்டகாலம் கௌரவப் பேராசிரியர்களாக இருந்துவரும் ரொமிலா தாப்பர் உள்ளிட்ட சிலரிடம் தன்விவரக் குறிப்புகளைக் கேட்டுள்ளனர். யூ.ஜி.சி விதிகளின்படி, அந்தப் பல்கலைக்கழக நிர்வாகம்தான் அதைக் கேட்டுள்ளது. இது வழக்கமான ஒன்றுதான். இதில் தவறு எதுவும் இல்லை. இதைஏன் இவ்வளவுபெரிதாக்குகிறார்கள் என்று புரியவில்லை” என்றார்.

இந்தியாவின் முக்கியமான வரலாற்றாசிரியர்களில் ஒருவர் ரொமிலா தாப்பர். வரலாற்றை சமூகநோக்கோடு அணுகும் ரொமிலா, அறிவுஜீவிகளின் அடையாளம். அவரை அவமானப்படுத்துவது என்பது அறிவையும் வரலாற்றையும் அவமானப்படுத்துவதுதான்.

வி



TabletBarn.com

ஜோக்ஸ் ஓவியங்கள்: கண்ணா



"சி.பி.ஐ அதிகாரி ரொம்பக் கோபமா இருக்கிற போட்டோவைத் தலைவருக்கு அனுப்பி வெச்சிருக்காங்களே?"

"விசாரணையோட ஃபர்ஸ்ட் லுக்காம்!"

- அஜித்



"அந்த நகைக்கடையில திருடும்போது நீ ஏன் செல்ஃபி எடுத்தே?"

"மற்ற நகைக்கடையில திருட்டுப் போனதையும் சேர்த்து என்மேல கேஸ் போட்டுடக்கூடாதேன்னுதான்!"

- எஸ் முகம்மது யூசுப்

TabletBarn.com



"எதிரி மன்னன் போருக்கு வருவதை எதற்கு வீடியோ எடுக்கிறாய் தளபதியே?"

"அவன் வீரத்தோடு நடந்து வரும் வீடியோவுக்கு உங்களின் ரியாக்ஷனைப் படம் பிடித்து யூடியூபில் போட்டால் நானும் சிறிது வருமானம் பார்ப்பேன் மன்னா!"

- அஜித்



"என்ன சார், ஓய்வு பெற்றதும் என்ன செய்யப் போறீங்க!"

"ஏதாவது ஒரு கட்சியில் இளைஞர் அணியில் சேர்ந்திட வேண்டியதுதான்!"

- கி.ரவிக்குமார்

கவிதை: வ.ஐ.ச.ஜெயபாலன் | ஓவியம்: ஹாசிப்கான்

# பாட அஞ்சலி

உதிர்கிற காட்டில்
எந்த இலைக்கு நான் அஞ்சலி பாடுவேன்?

சுனாமி எச்சரிக்கை கேட்டு
மலைக்காடுகளால் இறங்கி
கடற்கரைக்குத் தப்பிச் சென்றவர்களின்
கவிஞன் நான்.
பிணக்காடான இந்த மணல்வெளியில்
எந்தப் புதைகுழியில் எனது மலர்களைத் தூவ...
யாருக்கு எனது அஞ்சலிகளைப் பாட...

வென்றவரும் தோற்றவரும் புதைகிற உலகோ
ஒரு முதுகாடாய் உதிர்க்கிறது.
எந்தப் புதைகுழியில் என் மலர்களைச் சூட
எந்த இலையில் என் அஞ்சலிகளை எழுத...

இந்த உலகிலும் பெரிய இடுகாடெது?
பல்லாயிரம் சாம்ராச்சியங்களைப் புதைத்து
புதிய கொடிகள் நாட்டப்படுகிற
பெரிய அடக்கத் தலம் அது.
நடுகற்களின் கீழ்
அடிபட்ட பாம்புகளாய்
கிழிந்த எங்களூர்ச் சிறுமிகளின்
இறுதிச் சாபங்கள் அலைகிறதே.
எந்த சாபத்துக்கு நான் கல்வெட்டுப் பாடுவேன்.

அகலும் வலசைப் பறவைகளின்
புலம்பல்கள் தேயும் மண்ணில்
மொட்டை மரங்கள் பாடுகின்றன
“வரலாறு காடுகளைப் பூக்கச் செய்யும்.”

வி



TabletBarn.com



TabletBarn.com



பாதகங்களைச் சாதகமாக்குவதுதான் ஒரு உலகத்தர வீரருக்கான அடையாளம். பும்ரா அதைத்தான் செய்திருக்கிறார்.

→



# பூம்... பூம்... பும்ரா!

TabletBarn.com

**மு.பிரதீப் கிருஷ்ணா** | ஓவியம்: கார்த்திகேயன் மேடி

ஜஸ்ப்ரீத் பும்ரா... விவியன் ரிச்சர்ட்ஸ், சச்சின் டெண்டுல்கர், மைக்கேல் கிளார்க், ஜோ ரூட் என ஒவ்வொரு தலைமுறை பேட்ஸ்மேனையும் வியக்கவைத்துக் கொண்டிருக்கும் பந்துவீச்சுப் புலி. எவ்விதப் போட்டியுமின்றி விராட் கோலி அணிந்திருக்கும் கிரிக்கெட் மகுடத்திற்கு உரிமை கொண்டாடப்போகும் பாகுபலி!

பேட்களையே பிடித்துப் பழகிய சிறுவர்களின் கைகள் இன்று இவரது பௌலிங் ஆக்சனைப் பயிற்சி செய்துகொண்டிருக்கின்றன. கோலியும், தோனியும் ஆட்கொண்டிருந்த ஃபேஸ்புக் புரொஃபைல் போட்டோக்களை பும்ரா ஆட்கொண்டிருக்கிறார். இந்தியாவில் ஒரு பௌலர் இப்படிக் கொண்டாடப்படுவது இதுவரை வழக்கத்தில் இல்லாதது. இஷாந்த், உனத்கட் போன்ற பௌலர்கள் தமிழ் சினிமாக்களில்கூட கலாய் பொருளாக இருந்த நிலையில், இப்படியான ஒரு மாற்றத்தை பும்ரா ஏற்படுத்தியிருக்கிறார் என்பது சாதாரண விஷயம் இல்லை.

இந்த எழுச்சி சாதாரணமாக நிகழ்ந்ததல்ல. வெறும் எண்களால் சொல்லக்கூடியதும் அல்ல. தீர்க்கமான முயற்சியால் ஏற்பட்ட முன்னேற்றம் இது.'இந்த பௌலிங் ஆக்சனை வைத்துக்கொண்டு அதிக காலம் ஈடுகொடுக்க முடியாது' என்றார்கள். 'அடிக்கடி காயம் ஏற்படலாம்' என்று அச்சுறுத்தினார்கள். 'கைகளை இப்படிப் பயன்படுத்தினால் ஸ்விங் செய்ய முடியாது' என்றார்கள். 'டெஸ்ட் போட்டிகளில் வெற்றி கிட்டாது' என்று ஆருடம் சொன்னார்கள். 'அவுட்ஸ்விங் செய்யவே முடியாது' என்றும் சொன்னார்கள். அவரது வித்தியாசமான பௌலிங் ஆக்ஷனால் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்மீது கேள்வியும் சந்தேகங்களும் எழுந்துகொண்டேதான் இருந்தன. ஆனால், அனைத்திற்கும் பதில் சொல்லியிருக்கிறார் பும்ரா, அதே வித்தியாசமான பௌலிங் ஆக்சனால் !

கிரிக்கெட் வீழ்ந்துகொண்டிருக்கிறது என்கிறார்கள். மாற்றங்கள் செய்யவேண்டும் என்கிறார்கள். ஆனால், கிரிக்கெட்டின் அடிப்படையிலும் அந்த மாற்றத்தைப் புகுத்திவிடுகிறார்கள். அதனால்தான் சரிவில் விழுந்த இந்த விளையாட்டால் மீள முடியவில்லை. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். ஆனால், ஒரு விஷயத்தின் உண்மைத்தன்மையில் ஏற்படும் மாற்றம்... அஸ்திவாரத்தில் ஏற்படும் மாற்றம், அதைச் சுற்றி எழுப்பப்படும் எப்பேர்ப்பட்ட கோட்டையையும் ஆட்டம் காணச் செய்துவிடும். பும்ரா, இதில் புத்திசாலி. பும்ரா என்ற அந்த விசித்திர பௌலரை உருவாக்கிய எந்த விஷயத்தையும் மாற்றவில்லை. தன் அடிப்படையில் எந்த மாற்றமும் செய்யாமல், தன்னை மெருகேற்றிக்கொண்டே இருந்தார்.

மிகச் சிறிய இடத்தில், டென்னிஸ் பால் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்ததால், மற்ற வேகப்பந்துவீச்சாளர்களைப் போல் வெகுதூரம் ஓடிவந்து பந்துவீசப் பழகவில்லை. அந்தச் சிறிய இடத்திலேயே ஓடிவந்து தன் மணிக்கட்டைப் பயன்படுத்தி பந்துக்கு வேகம் கொடுத்தார். மாவட்ட, மாநில, தேசிய அளவில் ஆடியபோதும் சரி, சர்வதேச அரங்கில் ஆடியபோதும் சரி, அவர் ஓடிவருவதற்கு நிறையவே இடம் இருந்தது. ஆனால், பும்ரா அதைச் செய்யத் தயாராக இல்லை. தான் யாரோ, தன்னை உருவாக்கியது எதுவோ அதை அப்படியே தொடர்ந்தார்.

அந்த ரன்-அப்பிற்குப் பிறகான தன் ஒவ்வொரு

> **"அந்த வேகம், அந்த அக்ரஸன், அந்தத் திறமை, தரமான பேட்ஸ்மேன்களைத் தடுமாற வைக்கும் அந்த வியூகம், அவர்களின் திட்டங்களைத் தகர்த்தெறியும் ஆற்றல்... இவற்றையெல்லாம் பார்க்கும் போது, அவர் நிச்சயமாக எங்களுள் ஒருவராக இருந்திருப்பார். அவர் ஒரு முழுமையான பௌலர். எந்தக் காலகட்டத்திலுமே அவரால் விளையாடியிருக்க முடியும்!"**
>
> **- கர்ட்லி ஆம்ப்ரோஸ், வெஸ்ட் இண்டீஸ்**



“பும்ரா மட்டும் எங்கள் காலகட்டத்தில் பிறந்திருந்தால், அவரை நிச்சயமாக எங்கள் பந்துவீச்சுக் கூட்டணியில் சேர்த்துக்கொண்டிருப்போம். கணிக்க முடியாத ஒரு வித்தியாசமான பௌலர்தான் எங்கள் பந்துவீச்சில் இல்லாமலிருந்தார். சொல்லப்போனால், பும்ரா போன்ற ஒரு பௌலரைத்தான் எங்களால் உருவாக்கவே முடியவில்லை.”

**- ஆண்டி ராபர்ட்ஸ், வெஸ்ட் இண்டீஸ்**



அவரிடம் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பெரும்பாலான பௌலர்களின், பௌலிங் ஆக்‌ஷனில் இருக்கும் நேர்த்தியும் அழகும் அவரிடம் இல்லை. எக்ஸ்ட்ரா பௌன்ஸ் ஏற்படுத்துகிறார். மிகப்பெரிய ரன் - அப் இல்லை; மெதுவாகவே ஓடிவருகிறார். தன் ஆற்றலைச் சரியாகச் சேமித்துவைக்கிறார். பலமாகப் பந்தை பிட்ச் செய்கிறார். கொஞ்சம்கூட அவரிடம் பயமில்லை. பேட்டிங் செய்வது யார் என்பது பற்றிய கவலையில்லை. அதுதான் அவரை வெற்றிபெற வைத்திருக்கிறது.

**- சர் விவியன் ரிச்சர்ட்ஸ், வெஸ்ட் இண்டீஸ்**




அசைவிலும் ஆச்சர்யத்தைப் புதைத்துவைத்திருந்தார். அதுதான் அவருக்கு ஒவ்வொரு நாளும் விக்கெட்டுகளையும் முன்னேற்றத்தையும் பரிசளித்தது. லைன் & லென்த்தில் துல்லியமாகப் பந்து வீசினார். தன் முழங்கையை மடக்காமல் அற்புத யார்க்கர்கள் வீசினார். தன் கைகளைப் பார்த்து பேட்ஸ்மேன்கள் கணிக்க முடியாத அளவுக்கு வேரியேஷன்கள் காட்டினார். இன் ஸ்விங், அவுட் ஸ்விங் என இருபக்கமும் பந்தை மூவ் செய்து மிரட்டினார். பௌன்ஸுக்கு ஒத்துழைக்காத ஆடுகளங்களிலும் பேட்ஸ்மேன்களின் ஹெல்மெட்களைப் பதம் பார்த்தார். ஷார்ட் லென்த்தில் பிட்சாகும் பந்துகளை, பௌன்ஸ் ஆகாதவகையிலும் வீசினார். எல்லாம் 140 கிலோமீட்டர் வேகத்தில்!

இயான் பிஷப் போன்ற ஜாம்பவான்களே ‘பும்ராவின் பந்துவீச்சைப் புரிந்துகொள்ள முடியவில்லை’ என்று வியந்தார்கள். அதைப் புரிந்துகொள்ள முற்படவேண்டாம் என்றார்கள் வல்லுநர்கள். ராக்கெட் அறிவியல், மேக்னஸ் எஃபெக்ட், லேமினார் ஃப்ளோ, டர்ப்யூலன்ட் ஃப்ளோ என இயற்பியல் உதவிகொண்டு பும்ரா எனும் அதிசயத்தைப் புரிந்துகொள்ள முற்பட்டனர் பலர்.

ஆம், பும்ரா எனும் இந்த அதிசயத்தைப் புரிந்துகொள்ள கிரிக்கெட் தெரிந்தால் மட்டும் போதாது. அதன் ஒவ்வொரு அசைவையும் அனுபவிக்க வேண்டுமெனில், ஆச்சர்யப்பட வேண்டுமெனில், சிலாகிக்கவேண்டுமெனில் அந்த அறிவியலும் புரியவேண்டும்.

பாதகங்களைச் சாதகமாக்குவதுதான் ஒரு உலகத்தர வீரருக்கான அடையாளம். பும்ரா அதைத்தான் செய்திருக்கிறார். எந்தெந்த விஷயமெல்லாம் அவருக்கு நெகட்டிவ் என்றார்களோ, இன்று அதைத்தான் பாசிட்டிவ் என்று கொண்டாடுகிறார்கள். டெஸ்ட் கிரிக்கெட்டில் தாக்குப்பிடிக்க முடியாது என்றவர்களுக்கு, ஹாட்ரிக் விக்கெட்டோடு சாதித்துக் காட்டியிருக்கிறார். மொத்த உலகமும் வியந்த, வியக்கும் வெஸ்ட் இண்டீஸ் பௌலிங் ஜாம்பவான்களே வியந்து பேசும் அந்த வார்த்தைகள் போதும்... அதற்கு மேல் அவரைப் புகழ்வதற்கு வார்த்தைகள் கிடையாது.

சச்சின், தோனி, கோலி என்று பேட்ஸ்மேன்களையே மையமாக வைத்து இயங்கிக்கொண்டிருந்த இந்திய கிரிக்கெட்டுக்கு மாற்றுப்பாதை காட்டியிருக்கிறது இந்த வேகப் புயல்!

வி

TabletBarn.com

இரா.குருபிரசாத் படங்கள்: தி.விஜய்




# அய்யாச்சாமி என்னும் அறிவிப்பாளர்!

“சுற்றுலாப் பயணிகளின் கனிவான கவனத்துக்கு... இடது பக்கம் யாரும் போகக்கூடாது. அது வனப்பகுதி. சோப்பு, ஷாம்பு எல்லாம் பயன்படுத்தக் கூடாது. உங்க பொருள்களை எல்லாம் பத்திரமா வெச்சுக்கோங்க” ஆர்ப்பரித்துக் கொட்டும் சிறுவாணி நீர்வீழ்ச்சிக்கு மத்தியிலும் கணீரென்று ஒலிக்கிறது அய்யாச்சாமியின் குரல்.

கோவை, சாடிவயல் பகுதியில் உள்ள கோவைக் குற்றாலத்தில் (Eco Tourism) அறிவிப்பாளராகப் பணிபுரிந்துவருகிறார் அய்யாச்சாமி என்ற பழங்குடி இளைஞர். பரந்து விரிந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம்... பாய்ந்து வரும் சிறுவாணி நீர்... வனவிலங்குகள்... இவற்றுக்கு மத்தியில் பணிபுரியும் அய்யாச்சாமியின் இடது கண், முழுவதும் பார்வைத்திறனற்றது. வலது கண்ணிலோ 50 சதவிகிதம் மட்டுமே பார்வை தெரியும். அந்த 50 சதவிகிதப் பார்வையை வைத்துக்கொண்டுதான், சாடிவயல் வனப்பகுதி முழுவதும் வலம் வந்துகொண்டிருக்கிறார் இந்த வனமகன்.

“சாடிவயல்தான் எனக்குச் சொந்த ஊர். என் அப்பா, ஒரு காலேஜ் கேன்டீன்ல வேலை செய்யறார். அம்மா வீட்ல இருக்காங்க. ஒரு அக்கா, ரெண்டு தம்பிங்க. அக்காவுக்குக் கல்யாணம் ஆகிடுச்சு. ஒரு தம்பி காதல் கல்யாணம் பண்ணிட்டு, தனியா இருக்கான். இன்னொரு தம்பி கிடைக்கற வேலைக்குப் போயிட்டிருக்கான். பார்வைக்குறைபாடால 9-ம் வகுப்பு வரைதான் படிக்க முடிஞ்சது. படிச்சு முடிச்சுக் கொஞ்ச நாள் சும்மாதான் இருந்தேன். ஒரு வனத்துறை அதிகாரி, கோவைக்

→



குற்றாலத்துல வேலை வாங்கிக் கொடுத்தாரு. ஆறு வருஷம் ஆச்சு. முன்னாடி, டிக்கெட் செக்கிங், ரோந்துப் பணி, வனப்பகுதில தம், சரக்கு அடிக்கறவங்களை, தனியா இருக்கற காதலர்களை விரட்டுறது'ன்னு சுத்திட்டிருந்தேன். யானை வருவதை 3 கி.மீ-க்கு முன்னாடியே அதோட வாசனையை வெச்சுக் கண்டுபிடிச்சு அலர்ட் பண்ணிடுவேன்.

இங்க டூரிஸ்ட்டுங்களோட எண்ணிக்கை அதிகமா இருக்கறதனால, அறிவிப்பாளர் வேணும்னு கேட்டுட்டிருந்தாங்க. நான் படிக்கறப்ப பேச்சுப் போட்டில எல்லாம் கலந்துப்பேன். சின்ன வயசுல இருந்தே சத்தமாவும் தெளிவாவும் பேசுவேன். அதனால இந்த வேலை எனக்கு நல்லா செட் ஆகிடுச்சு" என்றவர், சற்று இடைவெளி விட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"இங்க வர சுற்றுலாப் பயணிகள் சிலரே, என்னைக் கிண்டல் பண்ணுவாங்க. அதையெல்லாம் நான் கண்டுக்க மாட்டேன். 'நீ கடவுள் கொடுத்த வரம்'னு அம்மா அடிக்கடி சொல்லுவாங்க. அதனால நானும் இப்படி இருக்கோமேன்னு நினைச்சு, வாழ்க்கைல எப்பவும் கவலைப்பட்டது இல்ல. சின்ன வயசுல போலீஸ் ஆகணும்னு ஆசைப்பட்டேன். அது நடக்கலை. ஒரு முறையாவது கப்பல்ல போகணும்னு ஆசை இருக்கு. அது நிறைவேறிடும்னு மனசுக்குள்ள ஒரு ஓரமா நம்பிக்கையும் இருக்கு! வேற எது மேலயும் ஆசை இல்ல. என் வாழ்க்கைல முதல்முறையா ஒரு பொண்ணு வந்தா. நல்லாப் பேசினோம். ரெண்டு பேருக்கும் ரொம்பப் புடிச்சுது. கல்யாணம் பண்ணிக்கிட்டோம்.

இப்படி ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டோமேன்னு அவ வருத்தப்படாம, அடுத்தவங்க ஆச்சர்யப்படற மாதிரி வாழணும்னு நினைச்சேன். ஆனா மூணு மாசத்துலயே, 'இப்படி ஒருத்தன்கூட வாழ முடியாது'ன்னு சொல்லி என் மனைவி என்னைப் பிரிஞ்சு போயிட்டா. அதுதான் ரொம்ப வலிச்சுது" என்று சொல்லும்போது அய்யாச்சாமியின் கணீர்க் குரல் உடைந்துபோனது. பிரிவு, உடைக்காத மனங்கள் இல்லையே!

"நான் இப்ப சந்தோசமா இருக்கேன் அப்படின்னா, அதுக்கு என் வேலைதான் முக்கிய காரணம். இந்த மலையும் காடும்தான் எனக்கு எல்லாமே. எவ்வளவோ சங்கடங்கள் இருந்தாலும், இங்க வர சுற்றுலாப் பயணிகள் சிலர், 'இந்த நிலைமைலேயும் உழைச்சுச் சம்பாதிக்கணும்னு நினைக்கறே. உன் அறிவிப்பு மூலம் எங்களைப் பாதுகாக்கற. நீ கடவுள் மாதிரி தம்பி'னு பாராட்டுவாங்க. அப்ப ஒரு சந்தோஷம் கிடைக்கும் பாருங்க. அதுக்கு எதுவுமே ஈடாகாது.

ஆரம்பத்துல, பார்வைக்காக சிகிச்சை எடுத்தேன். அப்பறம், இப்படியே இருக்கட்டும்னு விட்டுட்டேன். இப்பவும் எனக்குப் பார்வை வரணும்னு ஆசை இல்ல. எந்தச் சூழ்நிலையேயும் என்னைக் கைவிடாம இருக்கறது அப்பா, அம்மா மட்டும்தான். அவங்களை எப்பவும் கைவிடாம நல்லாப் பார்த்துக்கணும். நாலு பேருக்கு உதவி பண்ணணும். ஏன்னா, நம்மளவிட கஷ்டப்படறவங்கள நாமதானே சார் பார்த்துக்கணும். மாற்றுத்திறனாளிகளுக்குக் கிடைக்கற உதவித் தொகைக்கு, யார்கிட்ட கேட்கணும்னு தெரியல. அதுமட்டும் எப்படியாவது கிடைச்சுட்டா போதும். வாழ்க்கைய இன்னும் சந்தோசமா வாழ்ந்துடுவேன்" என்றார் நம்பிக்கையுடன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் குளிர்காற்று தழுவும்போது, சிலிர்த்துச் சிரிக்கிறார் அய்யாச்சாமி. அந்தச் சிரிப்பில், நுரைத்துக் கொட்டும் அருவி மேலும் அழகாகிறது.



TabletBarn.com


TabletBarn.com


TabletBarn.com



TabletBarn.com

“ இந்திரா செளந்தர்ராஜன் ஓவியங்கள்: ஸ்யாம்

# இறையுதிர் காடு

TabletBarn.com

**அன்று** போகர்பிரான் தன் கொட்டாரக் குடிலுக்குள் நுழையவும் அஞ்சுகன் காத்திருந்தவன் போல அவர் எதிரில் சென்று வணங்கி நின்றான். போகரும் அவன் எதிரில் விரிப்பில் கிடந்த புலித்தோல் மேல் தன் இடைத்துவராடையை மழிக்கச்சமாய் முட்டிக்கு மேல் ஏற்றி வளைத்து முதுகுப்புறமாய் தண்டுவட முதல் கண்ணி அருகே செருகிக்கொண்டு, ஒரு மல்யுத்தக்காரன் களத்தில் நிற்பதுபோல் காட்சி தந்தவர், அப்படியே குக்குடாசனத்தில் அமர்ந்தவராய் அஞ்சுகனைப் பார்த்தார்.

குடிலுக்குள் கண்ணாடிச் சாடி ஒன்றினுள் விரல்பருமனில் ஒரு தீபம் எரிந்துகொண்டிருந்தது. அதன் ஒளி போதுமானதாய், அந்த வெளிமுழுக்க மஞ்சள் ஒளியைப் பரத்தியிருந்தது. அந்த ஒளிக்குள் போகரின் உருவம் கருமஞ்சளாய்த் தெரிந்தது.

“என்ன அஞ்சுகா, என்னோடு பேச வேண்டுமா?”

“ஆம் பிரானே, தாங்கள் குன்றின் உச்சி நோக்கிச் செல்லக் கண்டேன்... மழைப்பொழிவினூடே இடியும் மின்னலுமான வேளை... தங்களுக்கு ஏதும் ஆகிவிடக்கூடாதே என்று எண்ணிப் பிரார்த்தனை புரிந்தேன்.”

- அதைக் கேட்டு போகர் உரக்கவே சிரித்தார். பின் விளக்கமும் அளிக்கத் தொடங்கினார்.

“அஞ்சுகா, நீ உன் குருவான என்னைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. எப்போது இந்தப் பூலோக மனிதர்களைப்போல ஆசாபாசம் மிகுந்த வாழ்வை விட்டு நான் விலகினேனோ அப்போதே மனித இனம் என்னும் தன்மையையும் விட்டு நான் பிரிந்துவிட்டேன்.

இந்த உடல் மட்டும்தான் மனித உடல் - ஆனால், மனம் மாயை புரிந்து தெளிந்து சித்தமாகி, நான் சித்தனாகிவிட்டேன்! சித்தத்தால்தான் என் வாழ்வும் நடக்கிறது. இந்த உடலை என் சித்தம் கட்டிப் போட்டுவிட்டது. ஒரு மனிதனுக்குப் பசிப்பதுபோல, தாகம் எடுப்பதுபோல, முடி உதிர்வதுபோல, மலம் வெளிப்படுவதுபோல, ஒரு சித்தன் வரையில் நடக்காது. அடுத்து காலஞானத்தால் முந்தைய பிறப்புகள் எல்லாமும் தெளிவாகி, என் உயிராகிய ஆத்மா இந்த உடலை விட்டு எப்படிப் பிரியும் என்பது வரை தெரிந்துவிட்டதால், அது இப்போது இல்லை என்பதால், உனக்குத் தேவைப்படும் எச்சரிக்கைகள் எனக்குத் தேவைப்படவில்லை.

சுருக்கமாய்க் கூறுவதானால் இன்றோ, நாளையோ, இல்லை இன்னும் சில மாதங்களிலோ எனக்கு மரணமில்லை. அதனால் நான் இப்போது எரியும் நெருப்பில் குதித்தாலும்கூட உடல் புண்ணாகுமே அன்றி உயிர் பிரியாது. அதனாலே இடி மின்னல் பற்றிய அச்சமின்றிக் குன்றேறினேன்.”

- போகரின் பதிலால் அஞ்சுகனுக்குப் பல விடைகள்!

“பிரானே... மனிதன் வேறு, சித்தன் வேறா? தங்கள் விளக்கமே என்னை இக்கேள்வியைக்

மாச்சரியத்திலேயே விட்டுவிடுகிறான்."

"அப்படியானால் ஒரு மனிதன் ஆசாபாசங்களில் சிக்கிய நிலையில் மேலான நிலைகளை அடையவே முடியாதா?"

"முடியவே முடியாது. அவற்றைத் துறந்தாலன்றி சித்தமும் வாய்க்காது." - அஞ்சுகனும் போகர்பிரானும் பேசிக்கொண்டிருந்த அவ்வேளையில் புலிப்பாணியும வந்து சேர்ந்தான். பயணக் களைப்பு நன்கு தெரிந்தது. புரவிப்பயணம் என்பது ஒட்டுமொத்த உடம்பையே உலுக்கிடும். பழகினால் மட்டுமே வசப்படும். அவ்வப்போது மட்டுமே பயணிப்பவர்களுக்குக் குடல் ஏற்றம் கண்டுவிடும்.

புலிப்பாணி சற்றே தடுமாற்றங்களுடனும் முகச்சுருக்கங்களுடனும் வரவும் போகர் புரிந்துகொண்டார்.

"என்ன புலி, வயிற்று உபாதையா?"

"ஆம் பிரானே, மலப்பெருக்கும்கூட...!"

"முதலில் ஒரு காரியம் செய்..."

"உத்தரவிடுங்கள்."

"அதோ கொட்டார நுழைவாயிலின் தலை மூங்கிலைப் பிடித்து காலை மடக்கித் தொங்கிக்கொண்டு, ஒன்றிலிருந்து நூறுமுறை மனதுக்குள் நொடிக்கான கால கதியில் கூறு."

- புலிப்பாணி மறுபேச்சின்றி அவ்வாறு செய்தான். மூங்கிலை இரு கைகளால் பற்றிக்கொண்டு தொங்கிய நிலையில், கால்களைப் பின்புறமாய் மடக்கிக் கொண்டான். மனதுக்குள் ஒன்று, இரண்டு என்று எண்ணவும் செய்தான். நூறுவரை அதுபோல் எண்ண, கால அளவில் இருநிமிடத்துக்குச் சற்றுக் குறைவாக ஆகலாம். நாற்பது வரை சரளமாகச் சொல்லிவிட்டான்... அதன் பின் நொடிக்கான கால அளவு மாறி மெல்லத்தான் சொல்ல முடிந்தது. உடலின் மொத்தப் பளுவும் வயிற்றில் விழுந்து கீழே ஒரு சக்தி அவனை இழுப்பதுபோல் உணர்ந்தான். பற்றியிருந்த கைப்பிடிப்பிலும் மணிக்கட்டுப் பகுதியிலும் இனம்புரியாத

**"பதைக்காதே... போகட்டும். முதலில் பூஜையைச் செய்துவிட்டு, பிறகு குகைக்குச் செல்லப் பணித்திருந்தேன் அல்லவா?"**

[redacted]

வலி உருவாயிற்று. போகரும் அஞ்சுகனும் அவனை உற்றுநோக்கியபடியே இருந்தனர். நூறுவரை சொல்லி முடிப்பதற்குள் ஒரு மலை உச்சியை அடைவது போன்ற களைப்பு உருவாகி, பிடியையும் விட்டவனாய் அப்படியே தரையில் அமர்ந்துவிட்டான். பின் இரு கரங்களைப் பின்னுக்குக் கொண்டு சென்று தரையில் ஊன்றிக்கொண்டு சற்றுப் பெருமூச்சும் விட்டான்.

போகர்பிரான் புன்னகை புரிந்தார். "உம் எழுந்திரு... உன் உடல் எடை கூடிவிட்டது. நடைகுறைந்து, அமர்ந்து அதிகம் பணிபுரிகிறாய். அரிசிச் சோற்றை ஒரு மண்டல காலம் உண்ணாதே! அதேபோல் வாழைப்பழங்களையும் சேர்க்காதே. காலை வேளையில் இஞ்சிச் சாற்றுடன் தேன் கலந்து குடி. இதுபோல் தினமும் தொங்கவும் வேண்டும். 1000 எண்ணிக்கை வரும் வரை நீ தொங்க வேண்டும். சரி, இப்போது அந்த ஆசனத்தின் மேல் ஏறி நின்று தரை நோக்கி ஒன்பது முறை குதி" என்றார். புலிப்பாணியும் தொம் தொம் என்று குதித்தான். குதிக்கும்போது கால்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு பிரிக்காமல் குதிக்க வேண்டும். அப்படிக் குதித்து முடித்தவனை அருகில் அழைத்து உச்சந்தலை பாகத்தில் விரல் பருமனுக்கு முடிக்கற்றையைப் பிடித்து வெடுக்கென்று இழுக்கவும் செய்தார்.

இதெல்லாம் குடலேற்ற சிகிச்சை முறைகள்!

புரவிப்பயணம் மட்டுமல்ல, மலையேற்றம், மரத்தில் ஏறுவது போன்றவற்றாலும்கூட சிலருக்கு உள்ளே குடலின் அமைப்பில் சிக்கல் ஏற்பட்டு குடலானது மடிந்து அழுத்தம் ஏற்பட்டு அதனால் வலி ஏற்படும். அப்படியே நீர்ச்சத்து சிறுநீரகப்பகுதிக்குச் சென்று வடிகட்டப்படாமல் மலக்குடலுக்குள் புகுந்து மலப்பெருக்கம் ஏற்பட்டுவிடும். அதற்கு வெளியே இருந்து தரப்படும் சிகிச்சை இது.

புலிப்பாணிக்கும் குணப்பாடு நன்கு தெரிந்தது. முகத்தில் சோர்வு விலகி ஒரு புத்துணர்வு பரவத்தொடங்கியது.

TabletBarn.com

"பிரானே, நான் இப்போது நல்ல குணப்பாட்டை உணர்கிறேன். மிக்க நன்றி."

"அது சரி, போன காரியம் என்னாயிற்று?"

"எல்லாம் நன்கு முடிந்தது. அக்கருமார்கள் கன்னிவாடி குகையில் தங்கள் பணியைச் செய்திட சித்தமாகிவிட்டனர்."

"வேறு ஏதேனும் சிறப்பு உண்டா?"

"ஆம் பிரானே... அங்கே கருவூரார் எழுந்தருளினார்..."

"தானாகவா... இல்லை நீ விரும்பி அழைத்தாயா?"

"கருமார்கள் நிமித்தம் நான்தான் அழைத்தேன்."

"அப்படியானால் நீ சுயமாகச் செயல்படத் தொடங்கிவிட்டாய் என்று சொல்."

"பிரானே..."

"பதைக்காதே... போகட்டும், முதலில் பூஜையை செய்துவிட்டு, பிறகு குகைக்குச் செல்லப் பணித்திருந்தேன் அல்லவா?"

"ஆம் பிரானே..."

"ஆனால் குகைக்கு முதலில் சென்றுவிட்டுப் பிறகு கீழிறங்கி பூஜை செய்யச் சென்றாய்போல் உள்ளதே?"

- போகர் பிரானின் கேள்வி புலிப்பாணியை சற்றே கட்டிப்போட்டது. மௌனிப்போடு வெறித்தான்.

"எதனால் இந்தத் தடுமாற்றம்?"

"திட்டமிட்டுச் செய்யவில்லை... அதன் போக்கில் நிகழ்ந்துவிட்டது பிரானே..."

"அதுதான் உண்மை... அதை ஒப்புக்கொண்டு உன் நேர்மையை உணர்த்திவிட்டாய். ஆனால் குருவின் வார்த்தைகளை ஆழமாகவும் மிக அக்கறையோடும் கேட்கத்தான் உனக்குத் தெரியவில்லை."

"ஆம், நான் இம்மட்டில் தவறு செய்துவிட்டேன். இனி நடவாதபடி கவனமாக இருப்பேன்."

"தவற்றை உடனடியாக ஒப்புக்கொண்டு திருத்தமும் செய்துகொண்டுவிட்டாய். பாராட்டுகிறேன். ஒரு நற்காரியத்திற்காகச் செல்லும் சமயம் முதல் காரியம் வந்தனமாக இருக்க வேண்டும். அதன்பிறகே அந்தக் காரியம் தொடங்கப்பட வேண்டும். காரியத் தொடக்கமான இரண்டு எனும் எண் விருத்தியை உணர்த்துவது. அதற்காகவே நான் அழுத்தமாகவும் கூறியிருந்தேன். ஆனாலும் நீ சரியாகக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

இது ஒரு சின்ன விஷயம்போல் தெரிந்தாலும் இதனால் பல விஷயங்கள் மாறிவிட்டன... முதலில் பூஜிக்கச் சென்றிருந்தால் அவ்வேளை நண்பகலாக இருந்து நம் நிழல் கீழ் விழாத ஒரு அமைப்பு ஏற்பட்டு அபிஜித் முகூர்த்த காலத்தில் பூஜை நிகழ்ந்திருக்கும்.

அபிஜித்காலத்தின் வேண்டுதல் பிராத்தனைகள் எதுவாய் இருந்தாலும் பலிக்கும் என்பது சோதிடனான உனக்குத் தெரியாதா என்ன?"

"உண்மைதான் குரு பிரானே... கருமார்களோடு பேசியபடி சென்றதில் அவர்கள் மனப்போக்கிற்கேற்ப செல்லும்படி ஆகி நான் நல்ல முகூர்த்த வேளையை இழந்துவிட்டேன். இதற்குப் பரிகாரமாக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். அதைச் செய்து விடுகிறேன்."

"இனி கூர்ந்து கவனித்து, சொன்னபடி செயல்படு. ஒரு முறைகூடத் தவறு வந்துவிடக் கூடாது."

"உத்தரவு பிரானே!"

"இப்போது நீ சென்று ஓய்வெடுத்துக் கொள். நாளை உன்னோடு சேர்ந்த நவமர்கள் அவ்வளவு பேரும் என்னை இதே இடத்தில் சந்தியுங்கள். தூக்குதராசில் தலைக்குப் பத்துத்தட்டு பாஷாணம் வாங்கி வர வேண்டும். அதன் பொருட்டு மரவாளிகளைப் பெற்றுக்கொண்டு நீங்கள் செல்ல வேண்டும்."

"அவ்வாறே ஆகட்டும் பிரானே..."

"நல்லது... சென்று ஓய்வெடுத்துக்கொண்டு நவமராய் வந்து சேர்..."

"உத்தரவு பிரானே... இவ்வேளையில் இன்னொரு செய்தி..."

"சொல்..."

"கருவூரார் தங்களின் நலன் விசாரித்ததோடு, பொதினி ஆலய நிமித்தம் ஆகம உதவி தேவை எனில் செய்துதரத் தயாராக இருப்பதாகக் கூறினார்."

"மகிழ்ச்சி. இனி சித்தர் பெருமக்களை அல்ப காரியங்களுக்காக விளிக்காதே. ஒரு சந்திப்பில் எல்லோருக்கும் சித்த ஞானம் ஏற்பட்டுவிடாது. இந்த ஞானம் பெற ஐம்புலச் சுருக்கமே முதல் தேவை. உள்ளமும் உடலும் ஆசாபாசங்களில்

TabletBarn.com

இருக்கும் நிலையில் சித்த ஞானம் கொண்ட கருத்துகள் வெறும் சப்தமாகித்தான் போகும்.”

“புரிந்துகொண்டேன். என் பிழைகளைப் பொறுத்துக்கொண்டு என்னை வழி நடத்துவதற்காக நன்றி கூறுகிறேன்.”

“நல்லது. சென்று ஓய்வெடு! மல்லாக்கப்படு... தலைக்குப் பலகை வேண்டாம். ஒருக்களித்தும் படுக்காதே. அப்போதுதான் நீ இப்போது பெற்ற சிகிச்சை ஸ்திரமாகும்.”

“உத்தரவு பிரானே...” - புலிப்பாணி வணங்கிவிட்டுப் புறப்பட்டான். அஞ்சுகனும் சேர்ந்துகொண்டான். போகர்பிரானும் அந்தக் குக்குடாசன நிலையில் கண்களை மூடி தியானத்தில் மூழ்கலானார்.

மறுநாள் காலை...

வானில் பனிப்பிரதேசத்து மச்ச விழுங்கிப் பறவைகள், தங்களுக்கே உண்டான தனிச் சிறப்போடு ஒரே நேர்கோட்டில் நூலிழைகூட முன் பின் என்று இல்லாமல் தென்மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கிச் சென்றபடி இருந்தன.

கொட்டாரக் கலிங்கக்குழாய்கூடத் தென்மேற்கு நோக்கி ஊதிப் பெருத்துப் பறந்தபடி காற்றின் திசையை உணர்த்திக் கொண்டிருந்தது. போகர் பிரானை மருத்துவ நிமித்தம் சந்திப்பதற்காக ஏராளமானோர் நாகலிங்க மர நிழல் வெளியில் அமர்ந்த நிலையில் காத்திருந்தனர். அப்போது புலிப்பாணி போகர் விரும்பியபடி தன்னோடு எட்டுப்பேரை அழைத்துக்கொண்டு போகரின் குடிலுக்கு முன் வந்து நின்றான்.

‘புலிப்பாணி

அஞ்சுகன்

மருதன்

பரிதி

மல்லி

அகப்பை முத்து

சங்கன்

நாரணபாண்டி

சடையான்’ என்கிற ஒன்பதுபேரும் காத்திருக்க, போகரும் வெளியே வந்தார். வந்தவரின் வசம் ஒரு மரப்பெட்டி இருந்தது. அதில் அஞ்சறைப் பெட்டி போல் ஒன்பது அறைகள் இருக்க, அதனுள் உள்ளங்கையில் அடங்கிவிடும் அளவில் நவபாஷாணங்கள் இருந்தன. வீரம், பூரம், சாதிலிங்கம், கௌரி, வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, அரிதாரம், சிங்கி, தாளகம் என்பவையே அவை!

**“டாக்டர் 24 மணிநேரம் கெடு கொடுத்திருக்கார். ஆர்கன் டொனேட் பண்றது வரை போயிட்டார். அவர் பேசினதுல இருந்து அவருக்கு ஹோப் இல்லன்னு தெரியுது. உங்களுக்கு?”**

+

[redacted]

**இன்று**

பாரதி தன்னை அழைத்துவரச் சொன்ன டாக்டர் முன்னால் போய் நின்றபோது சற்றே வெளிறிப்போயிருந்தாள். கூடவே ஜெயராமன், அரவிந்தன், கணேசபாண்டியனும்...

“ஐயம் சாரி... எப்படிச் சொல்றதுன்னு தெரியல. எங்க ட்ரீட்மென்ட்டுக்கு சாரோட உடல் சரியா ரெஸ்பாண்ட் பண்ண மாட்டேங்குது. பல்ஸ் விழுந்துகிட்டேதான் போகுது. என் அனுபவத்துல இப்படி ஆன யாரும் பிழைச்சு எழுந்தது இல்லை...”

-அந்த டாக்டர் ஒவ்வொரு வார்த்தையாக ஒவ்வொருவர் முகமாகப் பார்த்துச் சொல்லிமுடித்தார்.

“அப்ப என்ன பண்ணலாங்கறீங்க?” - ஜெயராமனே பாரதியின் சார்பில் கேட்டார்.

“அட்லாஸ்ட்... இன்னும் ஒரு 24 மணிநேரம் நாங்க ட்ரை பண்ணிப் பாக்கறோம். இதேநிலை கன்டினியூ ஆனா பிரெய்ன் டெத்தா கன்சிடர் பண்ணி ஃபைலை குளோஸ் பண்ணிடுவோம். அப்புறம் ஆர்கன்சை டொனேட் பண்றதுங்கறது உங்க விருப்பம்தான்.”

- டாக்டர் அப்படிச் சொன்ன ஜோரில் மேற்கொண்டு பேச எதுவுமில்லை, பேசுவதால் பயனுமில்லை என்பதுபோல் எழுந்து நின்றார்.

TabletBarn.com



TabletEarn.com

அங்கே ஒரு பேரமைதி!

மெல்ல அதை உடைத்துக்கொண்டு "அப்பாவை நாங்க கிட்டப் போய்ப் பாக்கலாமா டாக்டர்?" என்று கேட்டாள் பாரதி.

"போலாம்... ஸ்டெய்ன் வாஷ் பண்ணிகிட்டு நோஸ்கேப்பைப் போட்டுகிட்டுப் போங்க..."

"அப்பாவுக்கு கான்ஷியசே இல்லையா?"

"பாருங்க... உங்களுக்கே தெரியும்..."

- அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் ராஜாமகேந்திரனின் படுக்கை அருகே முகத்தில் பாதி மறைந்த நிலையில், தலையிலும் கேப்புடன், கையில் கிளவுஸூடன் சூழ்ந்து நின்றனர். பாரதி அப்பாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். ஆக்சிஜன் மாஸ்க், சலைன் ட்யூப், ஹார்ட் பீட் மானிட்டர் என்று மருந்து வாடைக்கு நடுவில் 'நான் இனி அவ்வளவுதான்' என்பதுபோல் கிடந்தார் ராஜா மகேந்திரன்.

பாரதியிடம் வரவேண்டிய கண்ணீர் கணேசபாண்டியின் கண்களில் திரண்டிருந்தது. பாரதி மெல்ல அவர் கையைத் தொட்டுப்பார்த்தாள்... பனித்துண்டு ஒன்றைத் தொட்டது போல்தான் இருந்தது. அப்போது அரவிந்தனுக்கு முத்துலட்சுமி கொடுத்துவிட்டிருந்த விபூதி ஞாபகம் வரவே பாக்கெட்டிலிருந்து அதை எடுத்து விரித்தான்.

நல்லவேளை, டாக்டரோ நர்ஸோ யாருமில்லை. இனி அருகில் இருப்பது வேஸ்ட் என்று நினைத்துவிட்டார்களோ என்னவோ? அரவிந்தன் கட்டைவிரலில் விபூதியைத் தொட்டு அப்படியே சற்று முனைந்து எட்டி அவர் நெற்றியில் பூசியும் விட்டான்.

பாரதி வெறித்தாள். அந்த நிலையிலும் ஜெயராமன் சிரித்தார்.

"தம்பி, எனக்கும் வெச்சு விடுங்க" - என்று கணேசபாண்டி கைகட்டி முகத்தை முன் நீட்டினார்.

வைத்துவிட்டான்!

**"ஆமாம் சார். ஆள் யார்னு தெளிவா தெரியுற நிலைல போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கறதுதான் சரி. அந்த நபரே கொடுன்னு சொல்லியிருக்கும் போது நாம சும்மா இருக்கறது தப்பு சார்..."**

மூக்கின்மேல் கொஞ்சம் சிந்தியது.

அப்படியே வெளியே வந்தனர். அணிந்தவற்றை அவ்வளவையும் கழற்றி ஒரு பிளாஸ்டிக் பேக்கில்போட்டு அருகிலிருந்த டேபிள்மேல் வைத்தனர். அப்படியே நிதானமாக நடந்து வெளியே கார் பார்க்கிங் செய்த இடம் வரை வந்தனர்.

"அரவிந்தன் உங்க திட்டம் என்ன?" - ஜெயராமன் ஆரம்பித்தார்.

"இப்ப நான் பாரதியை வீட்ல விட்டுவிட்டு என் வீட்டுக்குப் போகப்போறேன். நாளைக்குக் காலைல அந்தப் பெட்டியைத் திறந்து பாக்கறதுதான் சார் முதல் வேலை."

"சரி... அப்புறம்?"

"தெரியல சார்."

"டாக்டர் 24 மணிநேரம் கெடு கொடுத்திருக்கார். ஆர்கன் டொனேட் பண்றது வரை போயிட்டார். அவர் பேசினதுல இருந்து அவருக்கு ஹோப் இல்லன்னு தெரியுது. உங்களுக்கு?"

"இப்ப என்னால எதுவும் சொல்ல முடியல சார். பெட்டியால ஏதாவது நல்லது நடக்கலாம்."

"உங்களுக்கு அப்ப நம்பிக்கை இருக்கு."

"நம்பறதுல தப்பில்லையே சார்."

"சரி... அந்தக் குமாரசாமி பிரதர் விஷயத்துல என்ன செய்யப்போறோம்?"

"கட்டாயமா போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கணும் சார்..."

"ஆமா... அதான் இப்ப ரைட் ஸ்டெப். என்ன பாரதி சொல்றே?"

எடிட்டர் கேள்விமுன் பாரதி சற்று மௌனித்தவளாய், பின் வாய்திறந்து "சார்... அந்த விஷயத்தை இப்போதைக்கு விட்ருவோம் சார். 24 மணிநேரம் கழியட்டும். பிறகு யோசிக்கலாம்."

"அப்பகூட யோசிக்கலாம்தானா?"

"என்னமோ தெரியல... பேசின அந்த நபரோட குரல்ல ஒரு மெட்டாலிக் தன்மை. உச்சரிப்புல ஒரு பெரிய உணர்வு."

TabletBarn.com



“அதெல்லாம் இருக்கட்டும். கிரிமினல்னு தெரிஞ்சு நாம சும்மா இருக்கறது பொறுப்பில்லாத தனமாகும். அதுலயும் ஒரு பத்திரிகை ஆசிரியரா நான் உன் விருப்பம்னு சொல்லி ஒதுங்கவே கூடாது.”

“ஆமாம் சார். ஆள் யார்னு தெளிவா தெரியுற நிலைல போலீஸ் கம்ப்ளெயின்ட் கொடுக்கறதுதான் சரி. அந்த நபரே கொடுன்னு சொல்லியிருக்கும்போது நாம சும்மா இருக்கறது தப்பு சார்.”

“அதுக்கு முன்னால அந்தக் குமாரசாமி வீட்டுக்குப் போய் மனசார மன்னிப்பு கேட்டு அந்த இடத்துக்கு இனி எந்தச் சிக்கலும் இல்லைன்னு சொல்றது முக்கியமில்லையா?”

- பாரதியின் கேள்விக்குத் தன் முகபாவங்களிலேயே முக்கியம்தான் என்று சொன்னார் ஜெயராமன்.

“அம்மா... இப்ப முதல்ல நாம கவனிக்க வேண்டியது அய்யாவைத் தாம்மா... இதெல்லாம் அப்புறம்! இந்த 24 மணி நேரத்தில் அய்யாவைக் காப்பாத்த வேற ஏதாவது வழி இருக்குதான்னு பாப்போம்மா.”

- கணேசபாண்டியனின் நெகிழ்வான கருத்தும் சரி என்றுதான் எல்லோருக்கும் தோன்றியது. அப்போது அரவிந்தனின் கைப்பேசியில் அழைப்பொலி. பழநியிலிருந்து ரிப்போர்ட்டர் செந்தில்தான் பேசினான்.

“சார் நல்லபடியா போய்ச் சேர்ந்துவிட்டீர்களா?”

“சேர்ந்துவிட்டேன் செந்தில்... இப்பகூட ஹாஸ்பிடல்லதான் இருக்கோம்...”

“சார் எப்படி இருக்கார் சார்...?”

“ரொம்ப மோசமாதான் இருக்கு நிலைமை.”

“இப்பகூட அவர் சம்பந்தமாதான் சார் கூப்பிட்டேன். கூப்பிடச் சொன்னவர் நம்ம பண்டார சாமியார் - நாம தென்னந் தோப்புல பார்த்தோமே, அவர்தான் சார்!”

“அவரா... என்ன சொன்னார்?”

“பொட்டிய சீக்கிரம் திறக்கச்சொல்லு... மலைக்குப் போற நாள் நெருங்கிக்கிட்டே இருக்கில்லன்னு சொன்னார் சார்.”

“எந்த மலைக்கு?”

“தெரியல சார். என்னோட போன் நம்பருக்குக் கூப்பிட்டு, பொட்டியத் திறந்தா குழப்பம் தீரும் - செத்தவனும் பிழைப்பான்னு சொன்னார்.”

“அவருக்கு உங்க செல்போன் நம்பர் எப்படிக் கிடைச்சது?”

“என்ன சார் நீங்க... தென்னை மரத்தைப் பார்த்துக் கைதட்டி இளநீர் கேட்டா மரம் அவர் கேட்டதைக் கொடுக்குது. இப்படிப் பட்டவருக்கு என் நம்பர்லாமா

TabletBarn.com




சார் ஒரு விஷயம்?"

"அதுவும் சரிதான். அந்தக் கடபயாதி புத்தகமும் கிடைச்சிடுச்சு. நாளைக்குக் காலைல அதைத் திறக்கறதுதான் முதல் வேலை."

"அப்புறம் சார்... பெட்டிக்கு சொந்தமானவங்களும் வந்துகிட்டிருக்காங்களாம். உங்களுக்கு வேண்டியத எடுத்துக்கிட்டு பொட்டிய அவங்க கிட்ட கொடுத்துடுவீங்களாம்."

"இதையும் அவரா சொன்னார்?"

"ஆமாம் சார்.. போன் பண்ணி உடனே சொல்லு... நான் அவங்கள காட்டுக்குள்ள பார்ப்பேன்னும் சொல்லுன்னு சொன்னார்..."

"அவர் விஷயமே ஒரே ஆச்சர்யம்தான். தேங்க்ஸ் செந்தில். நாங்க இப்ப குழப்பத்துல தான் இருக்கோம். எதை எப்படிச் செய்யறதுங்கற குழப்பம். உங்க போனால ஒரு சின்ன தெளிவு, ரொம்ப தேங்க்ஸ் உங்களுக்கு..."

"தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு சார்... உங்களால் பண்டார சாமியார் என்கூட பேசிட்டார். அவரைப் பாக்கறதே விசேஷம். இதுல பேசினா இன்னும் விசேஷமாம். அதனால நான் சந்தோஷத்துல இருக்கேன் சார்."

"குட்... உங்க சந்தோஷம் எதுவரைன்னு பாக்கத்தானே போறேன். வெச்சிடட்டுமா?"

"நானும் வெச்சிடறேன் சார்..."

- செந்தில் போனை கட் செய்ய, அரவிந்தன் நிமிர, எல்லோர் பார்வையும் அரவிந்தன் மேல்தான்.

"ஆமாம் சார்... பழநியில நாங்க பார்த்த சித்தசன்யாசி இப்ப செந்தில்ங்கற பழநி ரிப்போர்ட்டர்கிட்ட போன் பண்ணி பெட்டிய திறக்கச் சொல்லு, குழப்பம்லாம் தீர்ந்துடும், செத்தவனும் பிழைப்பான்னு சொல்லியிருக்கார் சார்."

"அவர்கிட்ட எதுக்குச் சொல்லணும்?"

"அவர்தான் கூட்டிகிட்டே போனார் சார், நைஸ் மேன்."

"அப்ப முதல் வேலை பெட்டிய திறக்கறது தானா?"

"ஆமாம் சார். என்னன்னுதான் பாத்துருவோமே?"

"குட். ட்ரை பண்ணுங்க. நல்லது நடந்தா சந்தோஷம்!"

"இன்னொரு முக்கியமான விஷயம் சார்."

"என்ன?"

"பெட்டிக்கு உரியவங்க வந்துகிட்டிருக்காங்க. அவங்ககிட்ட பெட்டிய ஒப்படைச்சிடறதாம்..."

"அது யார் புதுசா?"

"சித்தர்கள் பேச்சு சார்... போகப் போகத்தான் புரியும்."

"ஓகே... இப்ப எல்லாரும் கிளம்புவோம். காலைல மீட் பண்ணுவோம். பெட்டியையும் திறக்க முயற்சி செய்வோம். அப்புறமா மற்ற விஷயங்களைப் பேசுவோம்."

"அதுதான் இப்ப சரியான முடிவு."

"மிஸ்டர் கணேசபாண்டியன், நீங்க கவனமா இருங்க. அந்த நபர் எப்ப வேணா எப்படி வேணா வரலாம். இங்க எங்கேயாவது ஒளிஞ்சிகிட்டு நாம அடுத்து என்ன செய்யப்போறோம்னு கவனிச்சிக்கிட்டிருக்கலாம். அந்த நபரைக் குறைச்சு எடை போட்டுட வேண்டாம். போலீஸ் கம்ப்ளெயின்ட்ல இருந்து எல்லா விஷயத்தையும் காலைல பேசிக்கலாம்" - என்று ஜெயராமன் கணேச பாண்டியனை எச்சரித்துவிட்டு அவர்களோடு புறப்பட்டார். கணேசபாண்டிக்கும் சற்று ஆர்வமாகத்தான் இருந்தது. சுற்றிச்சுற்றிப் பார்த்தபடியே வார்டு நோக்கி நடக்கத் தொடங்கினார்!

மறுநாள் காலை!

சொல்லிவைத்தாற்போல் அரவிந்தன் பைக்கும், ஜெயராமன் காரும் ஒன்றாக பங்களாவினுள் நுழைந்து நின்றது. சொல்லி வைத்தாற்போல் இருவருமே கறுப்பு ஜீன்ஸ் பேன்ட்டும் ஆரஞ்சு நிறச் சட்டையும் அணிந்திருந்தனர். அவர்களை வரவேற்க வந்த பாரதியும் கறுப்புச் சுடிதாரும் ஆரஞ்சுத் துப்பட்டாவுமாகத்தான் இருந்தாள்.

இது என்ன இப்படி ஒரு தற்செயல்? ஒரு அமானுஷ்யத்தின் தொடக்கமாய் ஒருவரை ஒருவர் வியப்போடு பார்த்துக்கொண்டே ஹாலில் முருகன் படத்தின் முன்னால் இருக்கும் பெட்டியை நோக்கி நடந்தனர். அதன்மேல் அந்தக் கடபயாதி என்கிற புத்தகத்தோடு ஒரு திருப்புளி!

**- தொடரும்**

TabletBazar.com

**ஜோக்ஸ்** ஓவியங்கள்: கண்ணா



“எனக்கு இலவசமே பிடிக்காதுங்க!”

“அதுக்காக, குற்றப்பத்திரிகையைக்கூட சந்தா கட்டித்தான் வாங்குவேன்னு சொல்றது நல்லால்லே!”

*- பாப்பனப்பட்டு வ.முருகன்*



“தலைவருக்கு தைரியம் ஜாஸ்தியா?”

“வரி கட்டாம கஷ்டப்பட்டுச் சேர்த்து வெச்ச சொத்தைப் பிடிங்கிட்டுப் போயிட்டாங்கன்னு வருமான வரித்துறை மேலயே கேஸ் போட்டிருக்காரே!”

*- அஜித்*



“தலைவர் எதுக்கு ஒரே நேரத்துல பல ஊர்ல கூட்டத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்றாரு?”

“எங்கே கூட்டம் வருதோ அங்கே பேசலாம்னுதான்!”

*- அஜித்*



“தூது வந்திருக்கும் எதிரி நாட்டுப் புறா இன்றோடு ஓய்வு பெறுதுன்னு நினைக்கிறேன் மன்னா!”

“எப்படிச் சொல்கிறீர்?”

“தகவல் ஓலையோடு ‘65’ மசாலாவையும் அனுப்பியுள்ளான் எதிரி மன்னன்!”

*- அதிரை யூசுப்*



TabletBarn.com

த.கதிரவன் படம்: க.பாலாஜி

பண மதிப்பிழப்பில் ஆரம்பித்து ஜி.எஸ்.டி., நீட், முத்தலாக், சிறப்பு அந்தஸ்து ரத்து, புதிய கல்விக் கொள்கை என அடுத்தடுத்து மத்திய பா.ஜ.க அரசின் அறிவிக்கப்படாத தமிழக கொ.ப.செ-வாக வலம் வருகிறார் 'புதிய தமிழகம் கட்சி'யின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, நாடு முழுக்க சாதி - மத மோதல்கள் அதிகரித்துக்கொண்டிருக்கும் சூழலில், டாக்டர் கிருஷ்ணசாமியை நேரில் சந்தித்தேன்...

**"சாதி - மத மோதல்கள் அதிகரித்துவரும் இவ் வேளையில், பெரியார் - அம்பேத்கர் கொள்கைகளை இன்னும் வீரியமாக மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய நீங்களே, அக்கொள்கைகள் காலாவதியாகி விட்டன என்று சொல்வது சரிதானா?"**

"இந்திய அரசியல் சாசனம் எழுதப்பட்ட போதே சட்டரீதியாகத் தீண்டாமை அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் நடைமுறையில் பல்வேறு வடிவங்களில் தீண்டாமை எனும் சமூக ஏற்றத்தாழ்வுகள் தொடரத்தான் செய்கின்றன. அவற்றை சட்டத்தின் துணைகொண்டு ஒழிக்கவேண்டும். அதை விடுத்து, எந்த ஒரு கொள்கைக்கும் யாராவது ஒருவரைக் கொண்டுவந்து இணைக்கும் போக்கு என்பது தவறானது. இந்திய அரசியல் சட்டம்தான் நமக்கெல்லாம் அடிப்படையாக இருக்க வேண்டுமே தவிர, வேறு எந்தத் தனிப்பட்ட நபரும் அல்ல."

**"சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து, சமத்துவத்தை மலரவைக்க அம்பேத்கர் - பெரியார் கொள்கைகள் தேவையில்லை என்கிறீர்களா?"**

"ஏன் மீண்டும் அம்பேத்கர் - பெரியார் கொள்கைகளையே நினைக்கிறீர்கள்... ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூக மாற்றத்துக்காகப் பலர் போராடியிருக்கிறார்கள். இந்திய அளவிலான ஒரு பிரச்னைக்கு எதிராக இந்த இரண்டு தலைவர்கள் மட்டுமே போராடினார்கள் என்ற அடையாளத்தைக் கொடுப்பது தவறான போக்கு.

1930-ல் இருந்த இந்தியா இப்போது இல்லை. கல்வி, சுகாதாரம், விஞ்ஞானம் என்று அனைத்துத் துறைகளிலும் வளர்ந்திருக்கிறது. காலத்தால் நிகழ்ந்த இந்த மாற்றங்களைப்போல், தீண்டாமை ஒழிப்பும் நிகழ்த்தப்படும்! அம்பேத்கர், பெரியார் என இருபெரும் தலைவர்களும் அவரவர் காலகட்டத்தில் அவர்களால் முடிந்ததைச் செய்திருக்கிறார்கள். அந்தவகையில், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற சட்ட வழிமுறையை முழுமையடையச் செய்வதற்கான போராட்டங்களை இப்போது நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்!"

**"காவல் நிலையம் எதிரிலேயே அம்பேத்கர் சிலை உடைப்புச் சம்பவம் நிகழ்த்தப்பட்டிருப்பதை அனைத்துக் கட்சிகளும் கண்டித்திருக்கின்றன. ஆனால், உங்கள் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க தரப்பிலிருந்து எந்தவித எதிர்ப்புக்குரலும் எழவில்லையே?"**

"உங்கள் கூட்டணி, எங்கள் கூட்டணி என்றெல்லாம் நான் பிரித்துப்பார்க்கவில்லை. எல்லோருக்குமே இதைத் தடுக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. 1967-க்கு முன்புவரை தமிழகத்தில் எத்தனை சிலைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன? அதன்பிறகுதானே இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன.

இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கிய தளகர்த்தர் ஒருவரது சிலையை உடைக்கிறோம் என்ற புரிதல் இல்லாதவர்கள் இப்படியொரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். இந்தப் புரிதல்கூட இல்லாமல்போனதற்கு யார் காரணம்? தொடர்ச்சியாக இங்கே ஆட்சி செய்துவந்த திராவிடக் கட்சிகள்தானே...?

திராவிடக் கட்சிகளின் ஆட்சியில், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், மக்கள் தொடர்பாளர்கள், அமைச்சர்களின் உதவியாளர்கள் மற்றும் நிதியைக் கையாளக்கூடிய முக்கிய உயர் பதவிகளில் பட்டியலின மக்களை எவ்வளவு எண்ணிக்கையில் அமர்த்தினார்கள்? இதைக்கூடச் செய்யாதவர்கள் எப்படி சமூக நீதி பேசலாம்?




TabletBarn.com



ஒரு டாக்டர்
கவர்னர்
ஆகிட்டாரு!

திராவிடக் கட்சிகள் பேசுகிற இட ஒதுக்கீடு என்பது ஏமாற்றுவேலை. இதனால் எந்தச் சமூகமும் முன்னேற்றமடையவில்லை. என்னைப் பொறுத்தவரையில், இட ஒதுக்கீடு என்பது கட்டாயம் தேவை. ஆனால், அதற்காக 'எஸ்.சி' என்ற முத்திரையைக் குத்தித்தான் கொடுக்க வேண்டும் என்பதில்லை.''

**''இட ஒதுக்கீட்டினால், எந்தச் சமூக முன்னேற்றமும் இல்லை என்று கூறும் டாக்டர் கிருஷ்ணசாமி, 'உயர்சாதியினருக்கான 10 சதவிகித இட ஒதுக்கீட்டை மட்டும் வலியுறுத்துவது ஏன்?''**

''பெரும்பான்மையான எண்ணிக்கையில் இருக்கக்கூடிய மக்களைக்கூட வாக்கு வங்கிக்காக, பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப் பட்டவர்கள் என்றெல்லாம் மாற்றியமைத்து இட ஒதுக்கீட்டின் பலனைக் கொடுத்துவிட்டார்கள். இந்தச் சூழலில், வாக்கு வங்கிக்குப் பெரிதும் பலன் இல்லை என்ற நிலையில் உள்ள குறைந்த எண்ணிக்கையிலான மக்களைக் கண்டு கொள்ளாமலேயே விட்டுவிட்டனர். எல்லாவற்றுக்குமே எதிர்வினை உண்டு. சுதந்திரம் அடைந்துவிட்ட இந்த 70 ஆண்டுக்கால வரலாற்றில் குறிப்பிட்ட மக்களை, வேலை வாய்ப்பிலும் கல்வியிலும் புறந்தள்ளிவிட்டோம். இது சமூகத்தில் பல்வேறு காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்திவிடும் என்பதனாலேயே உயர் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டை நான் வரவேற்கிறேன்.''

**''உயர் சாதி ஏழைகளுக்கான வருமான வரம்பு 'எட்டு லட்சம் ரூபாய்' என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதே, இதன் உண்மையான நோக்கம் என்ன என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறதே?''**

''எட்டு லட்சம் ரூபாய் என்ற வருமான வரம்பை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் நாங்கள் சொல்கிற ஒரே விடை... உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், எல்லோரையும் சாதி ரீதியாகக் கணக்கெடுத்து அவரவர் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போன்று இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவது ஒன்றேதான்.''

**''தேவேந்திர குல வேளாளர்களைப் பட்டியல் சாதியிலிருந்து நீக்கி, பிற்படுத்தப்பட்டவர்களாக அறிவிக்க வேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை மாநில அ.தி.மு.க மற்றும் மத்திய பா.ஜ.க கண்டுகொள்ள வில்லையே?''**

''தொல்காப்பியக் காலத்திலிருந்து வயலும் வயல் சார்ந்த தொழிலுமாக மருத நிலத்தில் வாழ்ந்துவந்த மக்கள்தான் தேவேந்திர குல வேளாளர்கள். கால மாற்றத்தில் நிலவுடைமை இழந்து, கூலிகளாகிவிட்ட இம்மக்களை ஆதி திராவிடர் என்றும் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் முத்திரை குத்திப் பட்டியலில் அடைத்து விட்டார்கள். 'வேளாண் குடிமக்கள்' என்ற தங்கள் அடையாளத்தை மீட்டெடுக்க விரும்பும் இந்த மக்களின் உணர்வுகளை இங்குள்ள திராவிடக் கட்சிகள் புரிந்துகொள்ளவே இல்லை. முதன்முதலில், மத்திய பா.ஜ.க-தான் எங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டிருக்கிறது. எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக பிரதமர் மோடி கூறியிருக்கிறார். ஆனால், இங்கே உள்ள மாநில பா.ஜ.க-வினர் எங்கள் கோரிக்கையை வலுவாக முன்னெடுத்துச் செல்ல வில்லை. சொல்லவேண்டிய இடத்தில் இருப்பவர்கள் சொன்னால்தான், செய்யவேண்டிய இடத்தில் இருப்பவர்கள் செய்வார்கள். அதே போல், தமிழக முதல்வரும், தேர்தல் வேலைகள் முடிந்தவுடன், தேவேந்திர குல வேளாளர் எனும் பெயர் மாற்றத்துக்கான அரசாணை வெளியிடப்படும் என்று உறுதியளித்திருந்தார். நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்!''

**''வாரிசு அரசியலை மிகக் கடுமையாக விமர்சித்துக் கொண்டே, உங்கள் மகனைப் புதிய தமிழகம் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் ஆக்கியிருக்கிறீர்களே?''**

''நான் முதல் அமைச்சராக இருந்து, என் மகனைத் துணை முதல்வராக நியமித்தால் நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கலாம். அல்லது, நான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் பதவியில் ஏற்கெனவே இருப்பவரை நீக்கிவிட்டு என் மகனை அந்தப் பொறுப்புக்குக் கொண்டு வந்தாலும்கூடக் கேட்கலாம். என் மகன் படித்து முடித்துவிட்டு, கட்சி வேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டுவருகிறார், அவ்வளவுதான்!''

வி



TabletBarn.com

நவீன் இளங்கோவன் | படங்கள்: ரமேஷ் கந்தசாமி

# சீனியர்ஸ் சிந்திக்க...




60 வயதுக்கு மேல் வாழ்க்கையை உற்சாகமாகவும், நம்பிக்கையுடனும் வாழ்வது எப்படி என்று வாசகர்களுக்கு வழிகாட்டியது, சமீபத்தில் விகடன் நடத்திய 'ஹலோ சீனியர்ஸ்' நிகழ்ச்சி. விகடன் குழுமமும், ஈரோடு மாவட்டக் காவல் துறையும் இணைந்து செப்டம்பர் 7-ம் தேதி, ஈரோடு வேளாளர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் இந்நிகழ்ச்சியை நடத்தியது. இதில் சாலமன் பாப்பையா, முதியோர் நல மருத்துவர் வி.எஸ்.நடராஜன், மேற்கு மண்டல ஐ.ஜி பெரியய்யா மற்றும் ஈரோட்டு எஸ்.பி சக்தி கணேசன் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். தள்ளாத வயதிலும் குறையாத உற்சாகத்தோடு நிகழ்ச்சிக்கு வந்து ஆச்சர்யப்படுத்தினர் நூற்றுக்கணக்கான 60 ப்ளஸ் இளைஞர்கள்.

டாக்டர் வி.எஸ்.நடராஜன் முதியோர்களுக்கான உணவு, உடல்நலம், உடற்பயிற்சி போன்றவற்றை எளிமையாக எடுத்துரைத்தார். 'முதியோர்களுக்கு நாங்கள் இருக்கிறோம்' என நம்பிக்கை தந்தார் மேற்கு மண்டல ஐ.ஜி பெரியய்யா.



ஈரோடு மாவட்டத்தில் முதியோர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாக நடத்திவரும் எஸ்.பி சக்தி கணேசன், "முதியோர்களின் பிரச்னைகளைத் தனிக்கவனம் எடுத்துத் தீர்க்கும் வகையில், பிரத்யேகமான செல்போன் எண் ஒன்றைக் கொடுத்து, இதுவரை 800-க்கும் மேற்பட்ட முதியோர்களின் பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறோம்" என்றார்.

முதியோர் நல மருத்துவர் வி.எஸ்.நடராஜன், "எதிர்பார்ப்பைக் குறைத்துக்கொண்டு, நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் வாழ்ந்தால் அறுபதுக்கு மேலேயும் வாழ்க்கை இனிப்பானதாக இருக்கும்" என்றார்.

"மனதிலுள்ள சுமைகளை உதறிவிட்டு மகிழ்ச்சியாக வாழுங்கள். நீங்கள் ஆனந்தமாக வாழ்ந்தாலே உங்களுடைய ஆயுள் பெருகும்" என்று பேசி, கலகலப்பை ஊட்டினார் சாலமன் பாப்பையா.

இது 60களுக்கான அட்வைஸ் மட்டுமல்ல; இருபதுகளுக்கும் ஏற்றதுதான்!

வி


Organised by
ஆனந்த விகடன்
தமிழர்களின் #1 வார இதழ்
Supported by
C&C | CLASSIC POLO SIGNATURE
Venue Partner
Velalar Vidyalayaa


TabletBarn.com

NIPPON PAINT

வண்ணம் வாய்ப்பு வாழ்வு




# இன்முகம் காட்டும் பண்பு...

## நாகர்கோவில் 'பாரத் ஹார்டுவேர்ஸ்'



'**க**டை வைத்தவன் புன்னகைக்கத் தெரிந்தவனாக இருக்க வேண்டும்' என்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. கடையிலுள்ள பொருளை எடு, கேட்டவருக்குக் கொடு, கல்லாவில் காசை இடு, முடிந்தது வியாபாரம் வியாபாரிகளில் இவர்கள் ஒரு ரகம். வரும் வாடிக்கையாளர்களிடம் இன்முகம் காட்டி, அன்புநலம் விசாரித்து, பொருள்களைக் கொடுத்தனுப்புவோர் மற்றொரு ரகம். இதில் இரண்டாம் ரகத்தைச் சேர்ந்த இனியவர், நாகர்கோவில் 'பாரத் ஹார்டுவேர்ஸ்' நிறுவனத்தின் இணை நிறுவனர் அபு பக்கர்.

இது நிப்பான் பெயின்ட் டீலர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் சிறப்புப் பகுதியாகும்...

### நாகர்கோவிலுக்கு வண்ணம் தீட்டும் 'பாரத் ஹார்டுவேர்ஸ்'...

கன்னியாகுமரியைப் பூர்வீகமாகக் கொண்டவர் அபு பக்கர். நாகர்கோவில் பகுதியில் மிகப்பெரிய அப்பள/வத்தல் (அம்மாவின் குடும்பத் தொழில்) வியாபாரியாக வேண்டும் என்பது அபு பக்கரின் சிறு வயது கனவு. படித்தபின் வளைகுடா (Gulf) நாடுகளுக்குச் சென்று 8 வருடங்கள் பணியாற்றிய பின் தாயகம் திரும்பி, 1995–ம் ஆண்டு நாகர்கோவிலில் தன் தம்பி அப்துல் ஹமீதுடன் இணைந்து 'பாரத் ஹார்டுவேர்ஸ்'ஐ ஆரம்பித்தார் அபு பக்கர். "எங்கள் தாத்தா பர்மாவில் வியாபாரம் செய்துவந்தவர். இந்தியர் என்கிற அடையாளம் வேண்டுமென்பதற்காக பர்மா கடைக்கு 'பாரத் மல்டிபர்ப்பஸ் ஸ்டோர்' எனப் பெயரிட்டார். இதுவே பின்னர் குடும்பத் தொழில் பெயராக மாறிவிட்டது," என்கிறார் அபு பக்கர்.

"எந்தவொரு வியாபாரத்துக்கும் அச்சாணி அதன் அமைவிடம், நாகர்கோவில் செட்டிகுளம் ஜங்க்ஷனை இதற்காக தேர்வு செய்தோம். ஹார்டுவேர்ஸ் மற்றும் பெயின்ட் என இரண்டையும் விற்பனை செய்துவந்தபோதிலும், பெயின்ட் சம்பந்தப்பட்ட சேல்ஸ் பார்ப்பதற்கே எனக்குப் பிடித்திருந்தது. பெயின்டைப் பொறுத்தவரை ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு தேவை இருந்தது, நிறைய பேருக்கு பெயின்டிங் குறித்து அப்போது தெரியாது, இவர்களுக்கு வழிகாட்டுவது எனக்கு சுவாரஸ்யமாக இருந்தது. மேலும், இதில் நல்ல எதிர்காலம் இருப்பதை உணர்ந்து முழுமூச்சாக பெயின்ட் விற்பனையில் இறங்கினேன். பெயின்ட் சேல்ஸை நானும், சானிட்டரிவேர் சேல்ஸை தம்பியும் இப்போது பார்த்துக்கொள்கிறோம்".



## நிப்பான் வருகை...

“அறிமுகமான புதிதில் நிப்பானின் தயாரிப்புகள் மிகக்குறைவாகவே விற்றன, ஆனால் ஓரிரண்டு வருடங்களிலேயே, நல்ல சேல்ஸ் ஊழியர்கள், டீலர்களிடம் இனிய அணுகுமுறை, நவீனமான புதுப்புது தயாரிப்புகள் வெளியீடு போன்ற நடவடிக்கைகள் மூலம் சந்தையில் நிப்பானுக்கு மவுசு அதிகரித்தது. மேலும் நிப்பானின் வணிக உத்தியும், அணுகுமுறை போன்றவை அவர்களுடன் நாங்கள் கைகோர்க்க காரணமாக அமைந்தது.”

‘நிப்பான் பெயின்ட் இன்று இந்தியாவின், முக்கியமாக தமிழகத்தின் முன்னணி பெயின்ட் நிறுவனமாக தன்னை வளர்த்துக்கொண்டுள்ளது. ‘நிப்பான் பெயின்ட் இந்தியா’வின் தலைமையிடம் தென்னிந்தியாவை மையமாகக் கொண்டது, இதனால் அவர்களின் நேட்டிவிட்டி நமக்குப் பரிட்சயமானது, பழகவும் ரொம்ப ஈஸி! மொத்தத்தில், நிப்பானுடன் கைக்கோத்தது என் வாழ்வின் நல்ல திருப்புமுனையாகும்!

## சமூக நலன் கலந்த வியாபாரம்...

“மக்களுக்குத் தேவையான நல்ல பொருள்களை விற்பவனே வியாபாரி. எனவேதான், நிப்பான் பெயின்ட் தயாரிப்புகளை நான் பெரிதும் விரும்புகிறேன். இவர்களின் தயாரிப்புகள் அனைத்தும் பசுமைத் தயாரிப்புகள், இந்திய பசுமைக் கட்டிட சங்கத்தின் (Indian Green Building Council) ஒப்புதலோடு சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தயாரிப்புகளை மட்டுமே விற்கின்றனர். காட்டமான நெடி, கண்ணுக்கு எரிச்சலூட்டும் நச்சுப் புகை இவற்றிலிருந்து வருவதில்லை, பெயின்ட் அடித்து முடித்தபின்னும் காலம் முழுக்க சுவர்களில் இருந்து வெளியேறும் Volatile Organic Compounds-ம் இதில் மிக மிகக் குறைவு. ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர், நிப்பான் பெயின்டைத் தன் வீட்டுக்கு அடித்துவிட்டு, ‘பெயின்ட் அடிச்ச நெடியே தெரியலையே!’ என நேரில் வந்து எனக்கு நன்றி சொன்ன சம்பவம் போல பல உண்டு.”

“புவி வெப்பமயமாதல், காற்று மாசுபாடு, பனி உருகுகிறது எனப் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து அவரவர் செய்யமுடிந்தவற்றைச் செய்து சுற்றுச்சூழலைக் காக்க வேண்டும். இதற்காக வாடிக்கையாளர்களுக்கு நிப்பான் பெயின்டுடன் சேர்த்து மரக்கன்றுகளையும் இலவசமாக வழங்கி வருகிறோம். நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரி, நிப்பான் பெயின்டின் சுற்றுச்சூழல் இணக்க அம்சம் மற்றும் எங்களின் செடி வழங்கும் செயலுக்காகவே பெயின்டிங் ஆர்டர் கொடுத்தார்கள் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி! இதன் தொடர்ச்சியாக, முதல்கட்டமாக பத்தாயிரம் மரக்கன்றுகளை வழங்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

## அணுகுமுறை, பொறுமை, சிறந்த சேவை...

“சேவைதான் இந்த வர்த்தகத்தின் தொழில் ரகசியம். வரும் வாடிக்கையாளரை புன்னகையோடு அணுகி, பொறுமையாய் அவரின் தேவை மற்றும் பட்ஜெட்டைக் கேட்டு உணர்ந்து, நல்ல தயாரிப்புகளை மட்டுமே பரிந்துரை செய்ய வேண்டும். ஒருமுறை ஒரு வாடிக்கையாளருக்கு நம்மைப் பிடித்துவிட்டால், அவர் காலம் முழுக்க நம்மிடம்தான் பொருள் வாங்குவார். இன்று நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் வட்டாச்சியர் அலுவலகம், வட்டாட்சியர் வீடு, காவலர் குடியிருப்பு, போத்தீஸ், பல தேவாலயங்கள், கல்லூரிகள், பள்ளிகள், குறிப்பாக விவேகானந்தா கேந்திரா போன்ற பல பெரிய புராஜெக்டுகளில் பாரத் ஹார்டுவேர்ஸ் பணியாற்றியுள்ளது என்றால் அது எங்களின் அன்பான அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியே என்பேன்!” என்கிறார் புன்னகை மன்னர் அபு பக்கர்.

NP/19

❝ சேவியர் செல்வக்குமார்

# 100 நாள்கள்... 9 நாடுகள்... 28 மசோதாக்கள்!

மோடியின் ஆட்சி நூறாவது நாளைக் கடந்திருக்கிறது. வழக்கம்போல் சர்ச்சைகளும் பாராட்டுகளும் விமர்சனங்களும் நூறு நாள்களை ஆக்கிரமித்திருக்கின்றன. தன் இரண்டாவது இன்னிங்ஸில் எடுத்த எடுப்பிலேயே அடித்து ஆட ஆரம்பித்திருக்கிறார் மோடி. ஒரே காரணம்... முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 300க்கும் மேல் எம்.பி-க்கள் கிடைத்திருக்கும் துணிச்சல். இந்தத் துணிச்சலே இன்னொருபுறம் எதிர்ப்பாளர்களின் விமர்சனப் பொருளாகவும் மாறியிருக்கிறது.

மோடி என்றால் பயணம் இல்லாமலா? நூறு நாள்களில் ஒன்பது நாடுகளுக்குப் பயணம் சென்றிருக்கிறார். மாலத்தீவு, இலங்கை, கிர்கிஸ்தான், ஜப்பான், பூட்டான், பிரான்ஸ், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்குச் சென்றவர் சமீபத்தில் ரஷ்யாவுக்கும் சென்றபோது, 'ஒரு பில்லியன் டாலர் கடன் கொடுப்பதாக' அறிவித்து வந்துள்ளார். நம்நாடு இருக்கும் நிலையில் இது தேவையா என்று பலரும் கேள்வி எழுப்பினாலும் 'அது கடனில்லை. லைன் ஆஃப் கிரெடிட்' என்று விளக்கம் தரப்பட்டது. அதாவது, பணமாகக் கொடுக்காமல் நம்மிடம் பொருள் அல்லது சேவையை வாங்கிக்கொண்டு அதற்கு ஈடாகப் பணமாகத் திருப்பித்தர வேண்டும். இது மிகவும் நல்ல விஷயமாகப் பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணங்களைத் தவிர்த்து, மோடி செய்துள்ள பல விஷயங்கள் ஒரே நேரத்தில் சாதனையாகவும் வேதனையாகவும் பார்க்கப்படுவதுதான் முரண்நகை. இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிகளவிலான மசோதாக்களை நிறைவேற்றிய முதல் மக்களவைத் தொடர் என்ற சாதனையும் இதில் அடக்கம்.

இவற்றில் முத்தலாக், காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கம், என்.ஐ.ஏ மற்றும் உபா சட்டத்திருத்தங்கள், தேசிய மருத்துவ ஆணைய மசோதா, ஒரே நாடு ஒரே ரேஷன் போன்ற மசோதாக்கள் கடும் எதிர்ப்புக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாகியுள்ளன. முத்தலாக் தடைக்கு ஆதரவும் எதிர்ப்பும் கலந்தே இருந்தது. முத்தலாக் முறையை எதிர்ப்பவர்கள் கூட மோடி அரசு இந்த விஷயத்தில் காட்டும் ஆர்வத்தையும் வேகத்தையும் சந்தேகிக்கிறார்கள். ஒருபுறம் 'பெண்ணுரிமைக்கான முயற்சி' என்று மோடி ஆதரவாளர்கள் மார்தட்ட, 'சபரிமலை விவகாரத்தில் பெண்ணுரிமை என்ன ஆச்சு?' என்று எதிர்க்கேள்வி எழுப்புகிறார்கள் எதிர்ப்பாளர்கள்.


TabletBarn.com


TabletBarn.com




தொகுப்பு: ர.முகமது இல்யாஸ், இன்ஃபோகிராபிக்ஸ்: எம்.மகேஷ்

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்த விவகாரத்தில் எழுந்த சர்ச்சை இன்னும் அடங்கவில்லை. காஷ்மீரின் முக்கியத் தலைவர்களுக்கு வீட்டுக்காவல், ராணுவம் குவிப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட பதற்றம் அடங்காத நிலையில் மோடி அரசின் முடிவு, காஷ்மீர் மக்களுக்கு நம்பிக்கையையும் நிம்மதியையும் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். 'ஒரே நாடு ஒரே தேர்தல்', 'ஒரே நாடு ஒரே ரேஷன்' என்று 'ஒரே' திசையில் பயணிக்கும் திட்டங்கள் இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்துமா என்கிற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் மானிய விலையில் சிலிண்டர், விவசாயிகளுக்கு உதவும் கிசான் சமான் திட்டம், மழைநீரைச் சேகரிக்கும் ஜல்சக்தி திட்டம், போக்சோ சட்டத்திருத்தம், போக்குவரத்துச் சட்டத்திருத்தம் எனச் சில விஷயங்கள் பாராட்டத்தக்கவை. ஆனால் இவையெல்லாம் அறிவிப்புகள் என்ற நிலையில் இருக்கின்றனவே தவிர, அவை நடைமுறைக்கு வரும்போதுதான் விடை தெரியும். சென்ற ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட 'தூய்மை இந்தியா' திட்டமும் பாராட்டுக்குரியதுதான். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்பட்டு முழுவெற்றி அடையவில்லையே?

இன்னொருபுறம் பொருளாதார நிலையில் ஏற்பட்டிருக்கும் தேக்கநிலை, மோடி அரசுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு மே 1 அன்று ரூ.69.64 ஆக இருந்து, செப்டம்பர் 4-ல் ரூ.72.07 ஆக எகிறியிருக்கிறது.

இந்தப் பலவீனத்திலிருந்து மீள்வதற்காக வங்கிகள் இணைப்பு போன்ற நடவடிக்கைகளை அரசு எடுத்துவருகிறது. ரிசர்வ் வங்கியின் உபரி நிதியில் 1,76,000 கோடியை அரசு வாங்கியிருப்பதும் இதன் ஒரு பகுதிதான். மற்ற நாடுகளின் மத்திய வங்கிகளின் கையிருப்பு 14 சதவிகிதமாக இருக்கும் நிலையில் இந்தியாவில் 28 சதவிகிதமாக இருப்பதால் இதை வாங்குவதால் பிரச்னையில்லை

என்கிறார்கள் சிலர். ஆனால் இது விதை நெல்லைச் சமைப்பதற்குச் சமம் என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள் பலர்.

மத்திய அரசின் பொருளாதாரச் சுழற்சி நடவடிக்கைகளுக்கு இந்த நிதி பயன்படும் என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. வாராக்கடன்களால் வாட்டமாகியுள்ள பொதுத்துறை வங்கிகளுக்கு 70,000 கோடி ரூபாய் மறுமூலதனம் செய்யப்படுவதாக அரசு அறிவித்திருந்ததால் இந்த உபரிநிதி, வங்கிகளின் மறுமூலதனத்துக்கும் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது. ஆனால் இவ்வளவு பெரிய நிதியை வாங்குவது, ரிசர்வ் வங்கியின் நிதியாதாரத்தையும் செயல்பாட்டையும் முடக்கிவிடுமென்ற பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கைகள் துளியும் பொருட்படுத்தப்படவில்லை.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி வரி விதிப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட தாக்கமும் இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார மந்தநிலைக்குக் காரணமென்ற வாதம் வலுத்துள்ளது. "கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத நெருக்கடியை இந்தியப் பொருளாதாரம் சந்தித்துவருகிறது" என்கிறார் நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டவை, மோடி எதிர்ப்புதான் இதன் அடிப்படை என்று மறுக்கிறார்கள் பா.ஜ.க-வினர்.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி நடப்பு நிதி ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பெரும் சரிவைச் சந்தித்து ஐந்து சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. கடந்த ஏழாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த அளவுக்குப் பெரும்சரிவு ஏற்பட்டிருப்பது இப்போதுதான். பொருளாதார மந்தநிலையால் விற்பனைச் சரிவு, வேலையிழப்பு அதிகரித்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் வேலையின்மை அதிகரித்திருப்பது இந்தக் காலகட்டத்தில்தான். மிகப்பெரிய வேலை வாய்ப்பைத் தந்து கொண்டிருந்த மோட்டார் வாகனத் துறையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மிரள வைக்கிறது. ஆட்டோமொபைல் துறை மட்டுமல்லாமல் அதுதொடர்புடைய தொழில்கள், ஜவுளித்துறை எனப் பலதுறைகள் சரிவைச் சந்தித்து வருகின்றன.

ஏற்கெனவே மத்திய அரசுத்துறைகள் மற்றும் அமைச்சகங்களில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடந்த இரு ஆண்டுகளில் 65 சதவிகிதம் அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்ற தகவலை வெளியிட்டிருக்கிறது மத்திய நிதி அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் செலவினங்கள் துறை. தனியார் துறையிலும் வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலையில் மோடி அரசு கொண்டுவந்துள்ள தொழிலாளர் சட்டத் திருத்தமும், ரயில்வே உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதும் வேலையில்லாத் திண்டாட்டத்தை விஸ்வரூபமெடுக்க வைக்கவே வாய்ப்பு அதிகமிருக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டமான 100 நாள் வேலைத்திட்டத்தில் பயனாளிகளுக்கு ஊக்கத்தொகையுடன் தொழிற்பயிற்சி அளிக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பது பல தரப்புகளால் வரவேற்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இத்திட்டத்துக்கு 60,000 கோடி ரூபாய் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ப.சிதம்பரத்தின் கைது, மோடி அரசின் துணிச்சல் என்று ஒருபக்கம் பாராட்டும் இன்னொருபுறம் பழிவாங்கும் நடவடிக்கை என்று கண்டனங்களும் குவிகின்றன.

கர்நாடகா தொடங்கி கோவா வரை எதிர்க்கட்சிகளின் எம்.எல்.ஏ-க்களை விலைக்கு வாங்கி ஆட்சியைக் கவிழ்த்தல், கவர்னர்களைக் கொண்டு எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் குடைச்சலைக் கொடுத்தல் ஆகியவற்றை இந்த இரண்டாவது ஆட்சிக்காலத்தில் இன்னும் தீவிரமாகச் செய்யத்தொடங்கியிருக்கிறது பா.ஜ.க. யார் என்ன விமர்சித்தாலும் தங்கள் அதிரடி நடவடிக்கைகளைத் தொடரத்தான் செய்கிறார்கள் 'கிருஷ்ணன்' அமித்ஷாவும் 'அர்ஜுனன்' மோடியும். துணிச்சல் நல்லதுதான். ஆனால் அது நாட்டுக்கு நல்லதாக இருக்கவேண்டுமே?

TabletBarri.com

கடிதங்கள்

# பாராட்டுகளும் விமர்சனங்களும்...




**ஸ்**டாலின் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரை அருமை. நடுநிலைமையே தங்கள் தன்மை என்பதை உணர்த்தும் ஆனந்த விகடனுக்குப் பாராட்டுகள்!

**- ஷேக் அப்துல்லா**

**டா**க்டர் தமிழிசை அவர்களின் சித்தாந்தத்தில் பலருக்கும் கருத்து வேறுபாடு உண்டுதான். ஆனால், அனைவரிடமும் நட்புபாராட்டும் அவரது இன்முகத்தை அனைவரும் விரும்புகிறார்கள் என்பதில் ஐயமில்லை. அவரது வெற்றிக்கு நல்வாழ்த்துகள்!

**- தீனதயாளு ராமசாமி**

**'மீ**ண்டும் விஸ்வரூபம் எடுத்த ரூ. 1,76,000 கோடி' கட்டுரையில் '1999-ம் ஆண்டு சந்திரசேகர் பிரதமராக இருந்தபோது' என்று எழுதியிருக்கிறீர்கள் ஆனால் அவர் 1990 நவம்பர் 10ல் எட்டாவது இந்திய பிரதமர் ஆனார் என்பதுதான் சரியான தகவல்.

**- கலைச்செல்வன்**

**ஆ**பிரகாம் பண்டிதர் என்னும் தமிழிசை முன்னோடியின் மறக்கக் கூடாத உயர் சாதனைகளை நம் வாசகர்கள் மனதில் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தமைக்கு, கட்டுரை ஆசிரியர் இரா. துரைப்பாண்டி அவர்களுக்கும், விகடன் குழுமத்திற்கும், மனமார்ந்த நன்றி!

**- ராஜேஸ்வரன் பரமேஸ்வரன்**

நான் ஆனந்த விகடன் வாசகன். ஆனந்த விகடன் எப்போதும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. ஜாடிக்கு ஏற்ற மூடிபோல் காலத்திற்கு ஏற்றாற்போல் நல்ல தகவல்களைத் தருகிறது. அதனால்தான் எப்பொழுதும் நம்பர் 1 ஆக இருக்கிறது.

**- ராஜ்**

**அ**மேசான் காட்டுத்தீ பற்றிய 'இதுவும் இனப் படுகொலை' கட்டுரை பயம்கொள்ளச் செய்கிறது. வேறு எங்கேயோ எரிகிறது என நினைத்துக் கொண்டு இருக்கிறோம். பாதிப்பு உலகில் உள்ள அனைவருக்கும்தான்.

**- பொன்ராஜ்**

**இ**யக்குநர் பாண்டிராஜின் பேட்டி படித்தேன். இன்றைய திரையுலகில் பாண்டிராஜ் தனித்து உயர்ந்து நிற்கிறார்.

**- சுகர் AR**

**'தெ**லங்கானாவில் ஒலிக்கும் தமிழிசை' கட்டுரையின் கடைசி பத்தியில் 'இவ்வளவு ஆக்டிவாக இருக்கும் ஓர் அரசியல்வாதியை, அதுவும் 58 வயதிலேயே ஆளுநர் ஆக்கியது இதுதான் முதல் முறை' என்று எழுதியிருக்கிறீர்கள் ஆனால் ஸ்வராஜ் கௌசல், 37 வயதிலேயே மிசோராம் ஆளுநராக இருந்திருக்கிறார்.

**- குருபிரசாத்**

**மு**தலில் சீரியஸாக ஆரம்பித்து, பின்பு சிரிப்பாக மாறிவிட்டது. சிரிப்பு தாங்க முடிய வில்லை. 'ஊழ்வினை' சிறுகதை அருமை.

**- கஸாலி**

**மி**ரட்டும் நெருக்கடி தலையங்கம் படித்தேன். வளர்ச்சி என்று பேசிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் அது வீக்கம் என்பது இப்போதுதான் வெளியில் தெரிய ஆரம்பித்திருக்கிறது என்று எழுதியிருப்பது மிக மிகச் சரி.

**- கான்**

**வி**ஞ்ஞானத்தின் சகாப்தம் விக்ரம் சாராபாய் பற்றிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.

**- வண்ணன்**

**'மீ**ண்டும் விஸ்வரூபம் எடுத்த ரூ. 1,76,000 கோடி!' கட்டுரை நமது பொருளாதார மந்த நிலையைத் தோலுரித்துக்காட்டுகிறது.

**- சஞ்சீவ்**, புதுப்பேட்டை

TabletBarn.com

**ஜோக்ஸ்** ஓவியங்கள்: கண்ணா



"என்ன தலைவரே!
ரொம்ப யோசனையா இருக்கீங்க?"
"இல்ல... சைதாப்பேட்டையில் இருக்கும் இந்த பேங்க் பில்டிங்கை அயனாவரத்தில் இருக்கும் அந்த பேங்க் பில்டிங்கோட எப்படி இணைப்பாங்கன்னு யோசிக்கிறேன்!"

*- கி.ரவிக்குமார்*



"பொருளாதார மந்த நிலைன்னா என்னய்யா?"
"புதுசா கமிஷன் எதுவும் வராம மாமூல் கமிஷன் மட்டும் வர்றது தலைவரே!"

*- மாணிக்கம், திருப்பூர்*



"GDP வளர்ச்சி குறைந்துவிட்டது என்று கூக்குரலிடும் எதிர்க்கட்சியே... ஒரு சாயா குடிச்சாலும் ஆன்லைன் பேமென்ட்தான் செய்யணும்னு சொன்னதால் மக்களின் OTP வளர்ச்சி எவ்வளவு பெருகி உள்ளது என்பதைப் பாருங்கள்!"

*- கீழை அ.கதிர்வேல்*



"இந்த வங்கி விளம்பரத்தைப் பார்த்து, ஏன் இப்படி பயப்படுறீங்க..?"
" 'இது உங்களோட வங்கி'ன்னு போட்டிருக்காங்களே... இப்ப நஷ்டத்துல இயங்குறதாலே, நஷ்டத்தை நம்மளை அடைக்கச் சொல்லுவாங்களோன்னு ஒரு பயம்தான் சார்!"

*- வி.சி. கிருஷ்ணரத்னம்*

TabletBarn.com







# தலைவரா..? தலைசுத்திருச்சு!

கற்பனை: ஹாஸ்யப்பையன்
ஓவியங்கள்: கண்ணா




TabletBarn.com


கிளம்பிட்டாங்கய்யா... கிளம்பிட்டாங்க...
நாம மட்டும் இல்லை, ஒட்டுமொத்த அமைச்சரவையும் டூருக்குக் கிளம்பிச்சுடுச்சாம்!
எங்கே வேணாலும் போகட்டும். சமாதிக்குப் போய் தியானம் பண்ணாம இருந்தா சரி!
வௌாட்டா இருந்தாலும் அலெர்ட்டா இருக்காரு!
சீனு சீனு சீனு...
ஃபுல் மார்க்கெட்டிங், போட்டோகிராபி ரெடி பண்ணியாச்சு!
மாட்டுக்குப் புல்லு கொடுப்பேன். அனைவரும் ஆச்சர்யமாகப் பார்த்தனர்னு எழுதணும்!
மாட்டுக்கு புரோட்டா கொடுத்தாதான்யா ஆச்சர்யப்படணும்! புல்லு கொடுத்ததுக்குமா?
உலக அதிசயமப்பா...
பழிவாங்குறதை நிறுத்தி, பொருளாதாரத்தைப் பாருங்க!
அட, இவர் பேசுவாரா?
இது தெரியவே நமக்கு இத்தனை வருஷம் ஆச்சு பாருங்க!
ஆனாலும் அசரலை...
பன்மோகன்சிங் சொல்றதெல்லாம் கேக்க மாட்டோம்!
அதுசரி, நீங்க யார் சொல்லித்தான் கேட்டீங்க!
பேசாம இந்தியாவை அமெரிக்காவோடு இணைச்சுட்டா..?
இது ஒரு துயரம்
சுறாங்கனி சுறாங்கனி...
அந்த சுறாவை ஏங்ணா அழுத்தி அழுத்திச் சொல்றீங்க?
வெறித்தனம்!

சைபர் ஸ்பைடர்

# வலைபாயுதே



instagram.com/dqsalmaan
எண்ட தளபதி!



instagram.com/shrutzhaasan
மியாவ்!



facebook.com/Hema Chandrasekar

பொங்கலை மொக்கிட்டு நாலு மணி நேரம் ஹைவேஸ்ல வண்டி ஓட்டு றவங்களை ட்ரங்க் அண்ட் டிரைவ்ல உள்ள போடுங்க ஆபீசர்...அம்புட்டு போதையா இரிக்கி!



facebook.com/Dhivya Srinivasan

“பா.ஜ.க-வில் ரஜினி இணைவதற்கு வாய்ப்பு மிகக்குறைவு, ஆனால் பா.ஜ.க மற்றும் ரஜினியின் கொள்கைகள் ஒரே மாதிரியானவை - நடிகர் எஸ்.வி.சேகர்” அய்யூ அய்யூயோ அய்யூய்யுயோ... ஓ அப்பிடி வருதா, நா கூட லெஃப்ட்ல இருந்து அப்பிடியே போயிடும்னு நெனச்சே. எனக்குத் தெரிஞ்சிருச்சு குமுதா நீ வெய்க்கிற ஒவ்வொரு புள்ளிக்கும் அர்த்தம்க்கீது.



facebook.com/Yuva Krishna

சென்னை எம்.ஜி.ஆர் நகர், ராமாவரம் பகுதிகளில் அப்போது கிளி ஜோசியர்கள் அதிகமாக வசித்தார்கள். நகரின் பெரும்பாலான பிளாட்பாரங்களை அவர்களது ஜோசியக்கடைதான் அப்போது ஆக்கிரமித்திருக்கும். ஒவ்வொரு ஜோசியருமே ரஜினி, கமல், எம்.ஜி.ஆர், கலைஞர், இந்திராகாந்தி, அமிதாப்பச்சன் போன்ற விஐபிகளுக்கு ஜோசியம் பார்த்து (!) அவர்களோடு எடுத்துக்கொண்ட வண்ணப்படத்தை வரிசையாக பிரேம் போட்டு வைத்திருப்பார்கள். அப்படியாப் பட்டவர்களுக்கு ஜோசியம் பார்த்த இவர் ஏன் தெருவில் உட்கார்ந்திருக்கிறார் என்று தோன்றும். வெளிநாடுகளுக்குப் பயணித்து வெள்ளைக்காரர்களோடு

**instagram.com/yashikaaannand**
அழகிய ஜாம்பி!





**instagram.com/madonnasebatsianofficial**
ஓணம் ஆசம்ஷகல் சேச்சி!

TabletBarn.com

சேர்ந்து போட்டோவாக எடுத்து போட்டுத் தாளித்துக்கொண்டிருக்கும் மோடியையும், எடப்பாடியையும் பார்க்கும்போது அந்தத் தெருவோர ஜோசியர்கள்தான் நினைவுக்கு வருகிறார்கள்.



**facebook.com/Harisankar Sriram**

முடிவெட்டிட்டு வீட்டுக்கு வந்ததும் எப்பவுமே ஏன் ஒருமாதிரி கேவலமா சிரிக்கறாங்கனே தெரியல... நாம கண்ணாடில பார்க்கும் போது அரவிந்த்சாமி மாதிரிதானே தெரிஞ்சோம்..! பொறாமையா இருக்கும்.



**facebook.com/Bogan Sankar**

சரி,ஒரு சமரசம்.

ராக்கெட்டுகளுக்காகவும் அழுங்கள்.

மனிதர்களுக்காகவும் அழுங்கள்.



**facebook.com/Hema Zephyr**

கண்ணாடிய எங்கயாது வச்சுட்டு கண்ணு தெரியாம அத தேடுறதுதான் கஷ்டமான விஷயம்னு நெனச்சுட்டு இருந்தேன். பசியோட சமைக்கறதுதான் இருக்குறதுலேயே கஷ்டம்போல... இப்பத்தான் புரியுது.



**facebook.com/Sarav Urs**

ஹீ: பசிபிக் கடலில் பெரிய நில நடுக்கம் ஏற்பட்டிருக்காம். இதனால ஏற்பட்ட சுனாமியில உலகமே அழியப்போகுதாம்... நம்ம எல்லோரும் இன்னும் 2 மணி நேரத்தில சாகப்போறோம்... இப்போதான் பிபிசில கேட்டேன்... :'(

ஷீ: நேத்து ஏன் எனக்கு நீ போன் பண்ணல... #whyilovegirls...



facebook.com/Rama Lingam

இந்த வருட புது மாப்பிள்ளைகளின் இனியான இணைய செயல்பாடுகள்.

1. பொண்டாட்டி சமையல் பற்றிய புளிப்பு காமெடி

2. பொண்டாட்டியின் கண்டிப்புகள், கட்டுப்பாடுகள் பற்றிய புளிப்பு காமெடி

3. பொண்டாட்டி கர்ப்பமான ஃபீலிங்க்ஸ்

4. பிரசவம் வரை அப்டேட்டுகள்

5. குழந்தை ஒன்னுக்கு அடிப்பது போன்ற ராவுடிகள்...ல்



twitter.com/mohanramko

கட்டிப்பிடி வைத்தியத்தை முதலில் சொன்ன கமல் ஒரு தீர்க்கதரிசி

instagram.com/rafaelnadal
நம்பர் 19... வாழ்த்துகள் நடால்!





twitter.com/ItsJokker

ஹாரிஸ் ஜெயராஜ் மியூசிக்கும், மனைவி வைக்கிற குழம்பும் ஒண்ணுதான். என்னதான் வெரைட்டியா செஞ்சு, வித விதமா பேரு வெச்சாலும் நமக்கு எல்லாமே ஒரே மாதிரிதான் தெரியும்..!



twitter.com/manipmp

“ரஜினி சிறந்த நடிகர், நல்ல மனிதர்” - செல்லூர் ராஜு #தட் கந்தசாமி ஒரு சோக்காலி மொமன்ட்



twitter.com/shivaas_twitz

தோசையைக் கல்லில் ஊற்றிவிட்டு தோசைக் கரண்டியைத் தேடுவதெல்லாம், விக்ரம் லேண்டரிலிருந்து சிக்னலுக்காகக் காத்திருக்கும் பரபரப்பு நிமிடங்கள்



twitter.com/indhiratweetz

உடம்பு சரியில்லன்னு சொன்னாலே “பீரியடா?”ன்னுதான் கேக்குறானுக. காய்ச்சல், தலைவலியெல்லாம் கணக்குலயே வராதுபோல.



twitter.com/ItsJokker

அடப்பாவிகளா, நதிநீர் இணைப்போம்னு சொன்னீங்களே, கடைசியில பேங்க இணைச்சிட்டிருக்கீங்களே.!



twitter.com/mrpaluvets

“நீங்க இல்லைன்னா நாங்க என்னண்ணா பண்ணுவோம் இங்க” - வனிதா அக்கா to சேரப்பா. யாராவது ஒருத்தர் turn எடுத்து வெங்காயத்த வெட்டுங்க. இதெல்லாம் ஒரு கேள்வியா?



twitter.com/shivaas_twitz

சொந்தக்காரங்களுக்கு ஆன்லைன்ல பஸ் டிக்கெட் புக் பண்ணிக் கொடுக்குறதுல பிரச்னை என்னன்னா... பஸ் போர்டிங் பாயின்ட்டுக்கு வர லேட் ஆனாகூட நம்ம மேல கோபப்படுறாங்க. என்ன தம்பி புக் பண்ணியிருக்க..?!



twitter.com/sathyathetruth/

இமான் பாட்டெல்லாம் கரோக்கேல ஓடவிட்டு எந்தப் பாட்டுன்னு கண்டுபிடிக்கச் சொல்லி க்விஸ்ஸே நடத்தலாம்.



twitter.com/skpkaruna/

தகவல் தொழில்நுட்பம், சாலை, ஆகாயப் போக்குவரத்து எல்லாம் நவீனமாகிவிட்ட இந்தக் காலத்தில் ஒரு மாநிலத்தையே தகவல் தொடர்பின்றி ஒரு மாதத்துக்கும் மேலாக வைத்திருக்க முடியும் எனும் சாத்தியம் வியப்புதான்! மக்கள் ஆட்சியில், அரசு இயந்திரத்தின் அதிகாரக் கரங்களின் வலிமை திகிலூட்டுகிறது.



twitter.com/mekalapugazh/

முதல்வர் ஊரில் இல்லாதபோதுகூட துணைமுதல்வருக்குக் கூடுதல் பொறுப்புகள் கொடுக்கப்படவில்லை என்றால், அந்தத் துணைமுதல்வர் என்பதற்கான விளக்கம்தான் என்னவாக இருக்கும்?

TabletBarn.com



# வாதங்களின் நாயகன்!

“இந்திய ஜனநாயகம் சவப்பெட்டிக்குள் கிடத்தப்பட்டுவிட்டது. நீதித்துறை எதற்கும் எதிர்வினை ஆற்றாமல் அமைதியாக இருக்க வேண்டுமென அரசு விரும்புவது போலவே அவர்களும் இருக்கிறார்கள். நீதித்துறை எந்த அளவுக்குச் செயலற்று இருக்கிற தென்று உலகமே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.”

1975ஆம் ஆண்டில் இந்தியாவில் எமர்ஜென்சி அறிவிக்கப்பட்டபோது இந்த அறிக்கையை வெளியிட்டவர் அப்போதைய பார் கவுன்சில் சேர்மன் ராம்ஜெத்மலானி. தன் இறுதிக்காலத்தில் தான் சார்ந்திருந்த பாரதிய ஜனதா கட்சிக்கு எதிராகவும் கடும் விமர்சனத்தை முன்வைக்க ஜெத்மலானி தவறியதில்லை. எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் கருத்தைச் சொல்லும் அசாத்திய துணிச்சலுக்குச் சொந்தக்காரர் ஜெத்மலானி. இந்திய அளவில் மிகவும் சர்ச்சைக்குரிய வழக்கறிஞர் என்றால் நினைவுக்கு வரும் பெயர் ஜெத்மலானிதான். அவர் நடத்திய வழக்குகள் அத்தனையும் சர்ச்சை ரகம்தான்.

இந்திராகாந்தி கொலைக்குற்றவாளிகள் சட்வந்த் சிங், ராஜீவ்காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் முருகன், பங்குச்சந்தை மோசடி மன்னன் ஹர்ஷத் மேத்தா, ஹவாலா மோசடியில் சிக்கிய எல்.கே.அத்வானி, மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் மாட்டிய லல்லுபிரசாத் யாதவ், 2G வழக்கில் கைதான கனிமொழி, சொத்துக்குவிப்பு வழக்கைச் சந்தித்த ஜெயலலிதா, சுரங்க முறைகேடு வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எடியூரப்பா, போலி என்கவுன்ட்டர் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட அமித்ஷா ஆகியோருக்கு ஆதரவாக சட்டத்தைக் கொண்டு போராடியவர். எல்லாவற்றிலும் அவர் ஜெயித்தார் என்று சொல்வதற்கில்லை. ஆனால் பிரபலமான வழக்குகள் என்றாலே, அதில் ஜெத்மலானி வாதிடுகிறாரா என்று பார்ப்பது வழக்கம்.

கள்ளக்கடத்தல் மன்னன் ஹாஜி மஸ்தான், நாடாளுமன்றத் தாக்குதல் குற்றம் சுமத்தப்பட்ட அப்சல்குரு ஆகியோருக்கும்கூட அவர் வாதாடியிருக்கிறார். எப்போதும் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் பக்கம் நின்றே ஆஜராகிறீர்களே என ஒருமுறை அவரிடம் கேட்டதற்கு, “ஒருவர் குற்றம் செய்திருந்தாலும், அவர் தரப்பிலிருந்து சொல்வதற்கு ஒரு நியாயம் இருக்கும். அதை, அவர்களின் பிரதிநிதியாக இருந்து சொல்கிறேன்” என்றார்.

எம்.பி, மத்திய அமைச்சர் எனப் பல பதவிகள் அவரைத் தேடிவந்தாலும் அவர் பெரிதும் நேசித்தது தன் வழக்கறிஞர் தொழிலைத்தான். அதனால்தான் தன் 92-வது வயது வரை வழக்கறிஞர் தொழிலை விடவில்லை. இரண்டு ஆண்டுகளாக இயலாமையால் ஓய்வில் இருந்த அவருக்கு செப்டம்பர் 8-ல் நிரந்தர ஓய்வு கொடுத்திருக்கிறது இயற்கை.

வி

TabletBern.com



# வாசகர் மேடை

உங்கள் சுவாரஸ்யமான எழுத்துக்குக் களம் அமைக்கும் மேடை இது. கீழே உள்ள ஐந்து கேள்விகளுக்கு சுவாரஸ்யமான பதில்களை எழுதி அனுப்புங்கள். சிறந்த பதில்கள் பிரசுரிக்கப்படும். பரிசுத்தொகையும் உண்டு. வெளிநாட்டில் வசிக்கும் வாசகர்கள் என்றால், பரிசுத்தொகையை அனுப்ப இந்தியாவில் உள்ள வங்கிக்கணக்கு விவரங்களைத் தெரிவிக்கவேண்டியது அவசியம். கேள்விகளை நல்லா படிங்க, அட்டகாசமான பதில்களை எழுதி அனுப்புங்க!

**? தன் கட்சி ஆள்களைத் தக்கவைத்துக்கொள்ள டி.டி.வி தினகரனுக்கு 'நச்' ஐடியாக்கள் கொடுங்களேன்!**

**? விஜய் ஹீரோ... விஜய் சேதுபதி வில்லன்... இந்தப் படத்திற்கு என்ன டைட்டில் வைக்கலாம்?**

**? ரவிசாஸ்திரிக்குப் பதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்திய அணியின் பயிற்சியாளராகலாம் என்றால் அவர் யார்? ஏன்?**

**? 'காலை வணக்கம் உறவே' மாதிரியான காலாவதி கமென்ட்களை இன்னமும் பயன்படுத்துபவர்களுக்கு ஜாலியாக என்ன தண்டனை கொடுக்கலாம்?**

**? நம் ஊரின் முதல்வர் எடப்பாடியும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும் சந்தித்தால் என்ன பேசிக்கொள்வார்கள்?**

உங்கள் பதில்களை
அனுப்ப வேண்டிய முகவரி :

**வாசகர் மேடை,**
**ஆனந்த விகடன்,**
**757, அண்ணா சாலை,**
**சென்னை 600 002.**

Printed by S.Raju, Published by B.Srinivasan On behalf of Ananda Vikatan Publishers Private Limited and printed at SSS Soft Source and Printing Solutions Private Limited, No. 4/452 Kallikudi, Manikandam, Madurai – Trichy NH, Trichy 620 012 and published from No. 757 Anna salai, Chennai - 600 002. Editor: B.Srinivasan



TabletBarn.com



TabletBarn.com



TabletBarn.com